விறலி விடு தூது

8826
23524

சேதுபதி

விறலி விடு தூது

ராய. சொ.

சேதுபதி விறலிவிடு தூது

ஆசிரியர்

சதாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர்

பதிப்பாசிரியர்

ராய. சொக்கலிங்கம்

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி

சாதா விலை ரூ. இரண்டரை
கலிகோ விலை ரூ. மூன்று

கலைப்பண்ணை
புதுக்கோட்டை

Printed at South India Press Karaikudi
Published by Ambal Pathippagam L, Diss 9900 Pudukottah

பதிப்புரை

'விறலி விடு தூது' தமிழ் மக்கள் எல்லோரா லும் கேள்வியுறப்பட்ட நூல். சிலர் படித்திருக் கிறார்கள்; பலர் படிக்க ஆசைப்பட்டும் கிடைக்காத தால் படிக்கவில்லை. படித்த சிலரும் செல்லரித்து ஏடு ஏடாக நின்ற காகிதங்களை ஒட்டிவைத்தும் எழுத்து எழுத்தாகச் சேர்த்துமே படித்திருக் கிறார்கள். இந்நூலை வெளியிட்டதன் மூலம் அக் குறை நீங்குகிறது. 'விறலி விடு தூதில்' சொல் லாட்சியும் செறிவும் பரக்கக் காணலாம்.

இதன் பதிப்பாசிரியர் ராய. சொ. அவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். நன்கு தமிழ்ப் படித்த பேரறிஞர். பலகாலம் தேசத்தொண்டு புரிந்து தற் சமயம் தாய்மொழித் தொண்டில் ஈடுபட்டுள்ளவர். அவர்களது அருஞ்சொற் பொருள் விளக்கமும் அடிக்குறிப்புகளும் தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன் தருவன. அவர்கட்கு எங்கள் உளம் நிறைந்த நன்றி.

பதிப்பகத்தார்

முன் உரை

விறலி என்பவள் தூது செல்லும் இளங் குமரி. அவளைத் தூதாக விடுப்பது விறலி விடு தூது. எனவே விறலி விடு தூது என்பது பொதுவான ஒரு சொல் தொடர். விறலியைத் தூதுவிடும் எந்த நூலும் விறலி விடு தூது என்னும் பெயர் பெறலாம். விறலி விடு தூது பல இருக்கின்றன தமிழில்.

இவ் விறலி விடு தூது சிவசாமி சேதுபதி என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்தது. கூளப்ப நாயக்கன் மீது சுப்பிரதீபக் கவிராயர் பாடிய விறலி விடு தூதைப் பெரிதும் பின்பற்றியே இந் நூல் செய்யப்பட்டிருக்கிறது. இவ் விறலி விடு தூதுக்குச் சுப்ரதீபக் கவியின் விறலி விடு தூது, காலத்தால் முற்பட்டது என்பதில் தடையே இல்லை. அத் தூது இந் நூலினுள் எடுத்து ஆளப்படுகிறது.

"ஞானிஐயன் சொன்னவுத்தி
நாடிநட வாமல், அவ
தானியையன் போனதுவும்
தான் அறிவீர்!"

என்று இந்நூலில் இருக்கிறது. இது சுப்ரதீபக் கவியின் தூதைக் குறிப்பிடுகின்றது. ஞானியையனும் அவதானி ஐயனும் சுப்ரதீபக் கவி உண்டாக்கிய தூதில் வரும் பாத்திரங்கள்.

இவ் விறலி விடு தூதின் காதை என்ன என்பதைச் சொல்ல வேண்டுமல்லவா? இத்தூதின் நிகழ்ச்சிகள் தென் பாண்டி நாட்டில் நிகழ்ந்தனவே. திருவாடானையில் ஆதிரத்னம் ஐயர் என்பவர்க்கு மகனாகப் பிறந்தான் சுந்தரம் ஐயன் என்பவன். அவன் நல்ல கல்வி யுடையான்; சோடச அவதானி; அதாவது பதினாறு காரி

யங்களை ஒரே சமயத்தில் நினைவோடு செய்ய வல்லவன். அவன், "நீடு திருமால் இருக்கும் புல்லாணி மங்களையன் பெற்றெடுத்த சேல் இருக்கும் கண்ணுளை, தேன் மொழியை, கோலத் 'துணை மாலை' என்னும் ஒரு தோகை மயிலை, மணமாலை இட்டு" வாழ்ந்தான்.

ஒரு நாள் உத்தரகோசமங்கை ஊரிலே திருநாள் பார்ப்பதற்காகச் சென்ருன் சுந்தரம் ஐயன். அம்மங்கை யூரில் ஒரு வேசி மங்கையைத் தழுவி விட்டான். அவ னேடு கூடச் சென்ற உள்ளூர்ப் பையனெருவன், சோட சவதானியின் மனைவி துணைமாலையிடம் இச்செய்தியைச் சொல்லி விட்டான். மனைவியோடு போராட்டம் வந்து விட்டது. "சீ நீ உன் தாசி இடம் செல்!" என்று கூறி விட்டாள் துணைமாலை. அது காரணமாகக் குடும்பத்தை வெறுத்துப் பொன் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வெளியேறினன் சுந்தரம் ஐயன். பல திருப்பதிகட்கும் சென்று திருமருதூர் என்னும் ஊரை அடைந்தான். அங்கு மோகனமுத்து என்னும் ஓர் தாசியின் வலையில் வீழ்ந்துழன்று, எல்லாவற்றையும் இழந்து, அவளால் தள்ளப்பட்டுத் திரும்பினன்.

கைப்பொருள் யாவும் போயின. 'ஒன்றும் இல்லாமல் வீடு திரும்ப மனமில்லை. சேதுபதியிடம் சென்ருன். சிவசாமி என்னும் பெயர் பூண்ட சேதுபதி மீது புகழ் பாடி ஏராளமான வெகுமதிகள் பெற்ருன். வீடு திரும்பு கின்ருன் சோடசவதானி. தன் கதை முழுதும் சொல்லி முதலில் போய்த் தன் மனையாளைத் தேற்றும்படி தூதாக விறலியை விடுக்கின்ருன். இது தான் இவ் விறலி விடு தூதுக் கதைச் சுருக்கம்.

இந்நூல் செய்தவர் சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் என்பவர். இவர் நூறு வருடங்கட்கு உட்பட்டவர் என்று தெரிகிறது. அஷ்டாவதானம் ஆதி

சரவணப் பெருமாட் கவிராயரின் பேரர் இவர். இவர் தந்தையார் பெயர் அருணசலக் கவிராயர். இவர் இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூரிலே பிறந்தவர். இந்நூலாசிரியர் வேறு பல நூல்களும் செய்திருக்கின்றார். இன்னார் சேதுநாட்டின் பரம்பரைப் புலவரைச் சேர்ந்தவர். இவர் இந்நூலில் தன்னைப்பற்றிப் பின்வரும் வரிகளால் பேசுகின்றார்.

''........ஆதி முதுகுளத்தூர்
மேவுவடி வேலன் அருள் மேவிவளர் - நாவலவ

திர அவதானம் செய்சரவ ணப்பெருமாள்
பேரன்என வந்த பிரபலவான் - சாரம்

தரும்துவாத் ரிம்சதாவ தானிபுல வோர்யா
வருந்துதிக்கும் பூங்கணவில் மாரன் - திருந்தும் எழில்

நாடு புகழ்சரவணப்பெருமாள் ''

மேவு வடிவேலன் அருள்மேவி வளர் பாலவராகிய சரவணப்பெருமாள் என்று இங்கு தன்னைச் சொல்லுவதாலும் இந்நூலில் வேறுபல இடங்களில் பேசுவதையும் பார்க்கும்போது இவர் சிறப்பாக முருகன் வழிபாடு உடையவர் என்று தெரிகிறது. பொதுவாக இவர் கடவுள் பக்தி நிறைய உடையவர் என்பதை நூலில் பலப்பல இடங்களிலும் பார்க்க முடிகிறது.

கடவுளைப்பற்றி இந்நூலில் காணப்படும் பக்தி ததும்பும் வரிகள் மயிர்க்கூச்சை உண்டாக்குகின்றன.

'' ஆகம் பசந்த அழகிய நாயகியோர்
பாகம் சுமந்த பரஞ்சுடரை - மோகமுள்ள

தொண்டர் உள்ளத் தேவிளக்கும் தூண்டா
மணிவிளக்கை

அண்டருக்கும் தேடரிய ஆரமுதை - முண்டகத்தாள்

நித்தம் துதித்துமுத்தி நேர்நெறிசேர் மூவர் அன்புச்
சித்தம் தழைத்த சிவக்கொழுந்தை - …………
வில்வத்தின் பால்முளைத்து வேதமுத லாய்க்கிளைத்த
செல்வத்தைக் கண்டு தெரிசித்து ''

என்றும்,

'' ………………………… வானுலவும்
கம்பத்தின் முன்நின்று கண்டேன்கோ தண்டமெனச்
செம்பொற் கிரிவளைத்த சேவகனை - நம்புமன்பர்

உள்ளத் திருக்கும் உரவோன் உருவிலான்
கள்ளத்தை மாற்றும்நெற்றிக் கண்ணவனை - வள்ளமுலைப்

பாலுண்ட பிள்ளை பதிகத்துக் காப்பிறவி
மேலுண்டோ இல்லைஎன்ற வேதியனை - சேலுண்ட

கண்மணியைத் தென்னவர்கோன் கண்மணியை
நன்மணியைப்
பெண்மணியை மாலையிட்ட பெம்மானை ''

என்றும் சிவபிரானைப்பற்றிப் பேசுகிருர்.

'' ……………………… - நல்லதெய்வ
வாரணத்தைத் தோய்ந்தமத வாரணத்தை ஓர்மருப்பு
வாரணத்தை ஈன்றபிடி வாரணத்தை - ஆரணத்தாய்

'ஏனப்பா காழிவளர் என்னப்பா உண்ணப்பா
ஞானப்பால்' என்று ஊட்டும் நாயகியை - வானிறைஞ்சும்

தன்பதத்தில் ஏற்றிமலர் தான் அருச்சிப் பார்வணங்கும்
முன்பதத்தில் ஏற்றிவைக்கும் முக்கனியை - அன்புத்தேன்

ஊற்றிருக்கும் மெய்யடியார் உள்ளமலர் ஆலயத்தில்
வீற்றிருக்கும் ஜோதி விளக்கொளியை - நாற்றிசைக்கும்

அன்னை மருதூர் அழகிய நாயகியைச்
சந்நிதிமுன் நின்று தரிசித்தேன். ''

என்று அம்பிகையைப்பற்றி நுவல்கின்ருர்.

"..........................மோதுகணை
காதண்ட வாங்கிக் கதிர்மகன்மூத் தோனைவென்ற
கோதண்ட ராகவனைக் கும்பிட்டு"

என்று திருமாலைப்பற்றிச் செப்புகிறார். பாட்டுடைத் தலைவனாகிய சேதுபதியை இவர் அளவுக்குமேல் புகழ்ந்து செல்கின்றார். சான்றாகச் சிலவற்றை இங்கே தருகின்றேன்.

"மாமாலுக் காக வனமான்மேல் வாளிதொட்ட
பூமான் சிவசாமி பூபாலன்"

"தெள்ளமுதும் பாற்குழம்பும் சீனியுங் கற்றோர்க்குதவும்
வள்ளல் சிவசாமி மார்க்கண்டன்"

"தையலர்க்கு வேளைத் தநுக்கோடி காவலனைத்
துய்யகடல் தொண்டித் துறையானை"

"பைம்பொன் மகுடபதி பாண்டிநாட் டாதிபதி
செம்பிநா டாளவந்த சேதுபதி"

"தாராளன் எங்கள்சிவ சாமிமக ராஜன்முல்லைத்
தாராளன்."

"...............கமலமான்
சேர்க்கையுள்ள வேந்தன் சிவசாமி சேதுபதி"

என்பன சிவசாமி சேதுபதியைப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றுள் சில.

இந்தச் சிவசாமி சேதுபதிஎன்பார் இந்நூலாசிரியர் காலத்து இருந்திருத்தல் வேண்டும். நூறு ஆண்டுகட்கிடையில் இப்பெயருடன் சேதுபதிப்பட்டத்திற்குரிய உரிமைபெற்று யாரும் இருந்ததாகக் காணேம். எனவே, சிவசாமி என்பவர் சேதுபதிகள் குடியில் பிறந்த ஒருவராக இருத்தல்கூடும். இவரைப்பற்றித் திட்டமாக எதுவும் தெரிந்து கொள்ளக்கூட வில்லை. சேது சமஸ்தானம் ஒருகாலத்தில் தமிழ் வளர்ச்சிக்குத்

நாயகமாக இருந்தது. இந்நூலையச் சேதுபதிக்குத் தமிழிலோ தமிழ் புரந்த தங்கள் முன்னோர் புகழைப் பரப்புவதிலோ கருத்து இருப்பதாகத் தெரிய வில்லை.

சிவசாமி சேதுபதி யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர் யார் என அறிவதில் நாம் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டாம். அவரைப்பற்றிக் கூறிய தமிழ் அற்புதமாக இருக்கிறது. அவ் இனிய தமிழைப் பருகி நாம் மகிழ்வோம்.

இந்நூல் எதில் புகும்போதும் கூறுகின்ற வர்ணனை மிக அதிகம். அவ் அனைத்தையும் உண்மைக்கு மாறுபாடு என்று நாம் கோபிக்க வேண்டாம். வர்ணனை நயங்களைக் கண்டு களிப்போம்.

இந்நூலாசிரியர் தமிழ்ப் பற்றும் அறப்பற்றும் பெரிதும் உடையவர் என்பதை நூல் நன்கு நவில்கின்றது.

"சேர்க்கையுடன் பானுமதி தெற்குவடக் கானாலும்
வாக்கிரண்டு சொல்லாத மானபரன்"

என்ற பாட்டு இவ் ஆசிரியர் உண்மையின்பாற் கொண்ட திண்மையைக் காட்டுகிறது.

"வட்ட நெடுங்கடல்போல் மாருக் கொடைகொடுக்கத்
தொட்ட முரசுத் தொனிமுழங்கும்"

என ஆசிரியர் கொடையின் பெருமையைக் கூறுகின்றார்.

"கொண்டல் முழங்கிவரும் கொள்கைபோல் ஓயாமல்
தண்டமிழ்ப்பா வாணர் தமிழ் முழங்கும்"

என்ற இவர் தமிழ் முழக்கம் இடி முழக்கமாக நமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இந்நூல் சிற்றின்ப சம்பந்தமாக எல்லை கடந்து சென்றிருக்கின்றது என்பது உண்மையே. இடக்கர் அடக்கலுக்குரிய சொற்கள், சொற் றொடர்கள் பெய்யப்

பட்டிருக்கின்றன. பலர் சேர்ந்து கூட்டமாக இருந்து கூசாமல் படிக்க முடியாதபடி சில இடங்கள் இந்நூலில் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தாலும் அவற்றை நீக்கி விட்டால் நூலின் அழகு கெட்டுச் சிதைந்துவிடும் என்று அப்பகுதிகளை ஒதுக்கவில்லை. விருப்பமில்லாதவர் அப்பகுதிகளை விட்டு விடலாம். அவற்றை விருந்தாகக் கொள்ளும் காதலர் தங்கட்குள் உண்டு மகிழலாம்.

வேசி இல்லம் செல்வதை அறவோர் உடன்படார். இல்லில் இன்பம் துய்ப்பதை அறத்திற்கு மாறுனதாக கலைஞர் கருதுமாறு இல்லை. இந்நூலின் முடிவு, நல்ல முடிவு. வேசியால் கெட்டவன், "தேன் பிறந்த சொல்லாளைச் சேராமல் நாம் வீணுக்கு என் பிறந்தோம் பூமியில்" என்று எண்ணியவன்,

"மாகனக மண்டபத்தில்வந்துநிற்கும் போதுகண்டேன்!
மோகனமுத் தென்னும் ஒருமொய்குழலை - ஏகநுதல்

வில்அழகும் பாய்ந்தவிழி வேல் அழகும் கால்அழகும்
சொல்அழகும் மாலைஇட்ட தோள் அழகும் - பல்அழகும்

கைஅழகும் மார்பழகும் காதழகும் மூக்கழகும்
மெய்அழகும் கண்டவுடன் மெய்ம்மறந்தேன்"

என்று சொல்லி ஒழுகுகின்ற அவள் அழகில் சிக்குண்டு தவித்த அச் சுந்தரம் ஐயன்,

"தெள்ளமுதை - பாற்குழம்பை - செண்பகவல்லிக்கொழுந்தை
பிள்ளைமுடி தீர்க்கவந்த பெண்ணரசை - கள்அவிழும்

சோலைக் கருங்குயிலை - சொர்னப் பசுங்கிளியை -
கோலப் பருவமுலைக் கோமளத்தை - வேலைஅன்ன

காமரச தாழிக் கரும்பை - செழுங்கனியை -
தேமல்இளங் கொங்கைத் திரவியத்தை - காமுகருக்கு

அற்புதத்தை - தேனை - அதிமோக ரஞ்சிதத்தை -
கற்பகத்தை - சர்க்கரையை - கற்கண்டை"

கண்டு சொக்கிக் 'கப்பல் கவிழ்ந்தது போல்' அவ்வேசியின் ஆசைக் கடலுள் வீழ்ந்து தவித்த சோடசவதானி, அப்படுகுழியினின்றும் விடுபட்டபின், ஒரு ஆலய மண்டபத்தைக் கண்டபோது,

"சண்டாளிக்கு இட்ட தனத்தையெல்லாம் இப்படி ஓர்
மண்டபத்தைக் கட்டித்தான் வைத்தோமா?"

என்று வருந்திக் கடைத்தேறி நல்நிலை அடைந்ததாகக் கூறி முடிகின்றது நூல்.

இத் தூது நூல், 'கலி வெண்பா' என்னும் யாப்பின் பாற்பட்டது. நூல் முழுதும் வெண் தளை விரவி வெண்பா இலக்கணத்துடன் ஒரே சங்கிலித் தொடராக அமைக்கப்பட்ட 124½ கண்ணிகள் கொண்டது.

ஆசிரியர் சரவணப் பெருமாள் நல்ல வாக்குவன்மை படைத்தவர். அருமையான தித்திக்கும் தீந் தமிழில் இத் நூலை ஆக்கியிருக்கின்றார்.

அமராவதிபுதூர்
28—2—47

ராய. சொ.

உள்ளுறை

—o—

தொடர் எண்.	பொருள்.	பக்க எண்.
1.	விறலி புகழ்	1
2.	தன் கதைச் சுருக்கம்	6
3.	பாடல் தலைவன் சிறப்பு	7
4.	தசாங்கம்	9
5.	சேதுபதியின் பிற சிறப்புக்கள் —	12
6.	அவதானி பிறப்பு முதலியன ...	26
7.	திருமணமும் பிறவும்	27
8.	அவதானி யாத்திரை	30
9.	வேதமையன் நட்பு	34
10.	மோகன முத்தின் பிறப்பு	35
11.	மோகன முத்தின் வளர்ப்பு ...	36
12.	மோகன முத்தின் பருவக்குறி ...	40
13.	மோகன முத்துக்குப் போதிப்பு ...	41
14.	மோகன முத்தின் திருவிளையாட்டு ...	53
15.	மோகன முத்தின் தோழிகள் சிறப்பு ...	,,
16.	மோகன முத்தின்மீது மோகங்கொண்ட காமுகர் ...	54
17.	அவதானி மருதூர் சென்றமை ...	61
18.	மோகன முத்தின்மீது கொண்ட மோகம்	65
19.	தோழிகள் ஜாலம்	68
20.	பணிப்பெண்கள் உபசாரம்	71
21.	மனைக்குள் சென்றிருத்தல்	72
22.	மோகன முத்தின் முகமன்	,,
23.	தாய்க் கிழவி உபசாரம்	75
24.	பள்ளியறைச் சிறப்பு	77
25.	மாமி வரவிட்ட வரிசை	78
26.	போகம் துய்த்தல்	79

27.	மோகன முத்து அவதானியைப் பாராட்டுதல் ...	83
28.	விடிந்தபின் தடுமாற்றம்	84
29.	அவதானியை வஞ்சிக்க மூலிகை சேர்த்தல் ...	85
30.	கடைச் சரக்குச் சேர்த்தல்	86
31.	பிராணிகளின் உறுப்புக்கள் சேர்த்தல் ...	87
32.	மருந்து கூட்டினமை	88
33.	மருந்துண்டு மயங்கியமை	89
34.	வஞ்சிக்கச் சதி	,,
35.	திருவிழாக் காணப் போதல் ...	90
36.	திரும்புகையில் செய்த மோசம் ...	92
37.	கிழவியின் பொய்ப் புலம்பல் ...	,,
38.	புதிதாக நகை செய்தல்	94
39.	ஆடை வாங்கிக் கொடுத்தல் ...	95
40.	பலவகைப் பொருட்கும் கொடுத்தல் ...	97
41.	சாமிக்குக் கொடுத்தல்	,,
42.	அவதானி தன் கையிருப்புப் பொருளைக் கொடுத்து வைத்தல் ...	98
43.	கடன் தீர்த்தல்	,,
44.	அவதானி தன் நகையும் விற்றது ...	100
45.	அவதானியைத் துரத்த முயற்சி ...	,,
46.	கிழவி தன்னை ஏசினமை	,,
47.	தாய் மகளை வைதல்	101
48.	சண்டையிடல்	102
49.	சபையில் வழக்கிடல்	106
50.	கிழவி கட்சி	107
51.	அவதானி கட்சி	111
52.	கிழவி மறுப்பு	114
53.	அவதானி வேண்டுகோள்	115
54.	சபையார் ஆறுதல் மொழி	116

55. அவதானி கலங்கித் தெளிதல் ... 117
56. கோவில் வழிபாடு 118
57. இழந்த பொருளுக்கு இரங்கல் ... 120
58. அவதானி சேதுபதியை
அணுகத் துணிதல் ... 123
59. மருதூர் விட்டுச் செல்லுதல் ... 124
60. பழைய வேதமையரைக் காண்டல் ... 125
61. வேதம் ஐயர் தேறுதல் மொழி ... 126
62. முகவையை நோக்கி நடத்தல் ... ,,
63. நாட்டு வளம் 127
64. நகர்ச் சிறப்பு 128
65. விசுவநாதர் கோவில் கண்டு வணங்கல் ... 129
66. சத்திரச் சாப்பாடு 132
67. அரண்மனை கண்டு சென்றமை ... 134
68. சிவசாமி சேதுபதி கொலுச் சிறப்பு ... 136
69. அவதானி பா அரங்கேற்றல் ... 141
70. பரிசில் பெற்றமை 142
71. விறலி தூது 145

சேதுபதி
விறலி விடு தூது

காப்பு

நேரிசை வெண்பா

திருமருகன் தேவைச் சிவசாமி செல்வத்
தருமருமன் மேல்விறலி சாற்றக் - கருணைசெய்வான்
மாதங்கத் தான்அனந்தான் மாதவன்வா னோர்பரவு
மாதங்கத் தானனந்தான் வந்து.

நூல்

விறலி புகழ்

திருமாலும் பொன்னுலகத் தேவர்களும் தேவர்
பெருமானும் இன்பம் பெருக - வரிசேர் 1

காப்பு. திருமருகன்: திருவின்மருமகனாகிய முருகக் கடவுளையொத்த. தேவை: இராமநாதபுரம். சிவசாமி: சிவசாமி சேதுபதி. தரு: கற்பகதரு. மரு: மருவிய. மன்: இந்திரன் போன்றவன். விறலி: விறலி விடு தூது. சாற்ற: சொல்ல. கருணை செய்வான்: அருள் புரிவான். மாது அங்கத்தான்: உமையை உடம்பிலே கொண்ட சிவ பெருமான். அனந்தான்: அன்னவாகனத்தில் ஏறும் பிரம்மதேவன். மாதவன்: திருமகள் தவத்தால் பெற்ற காப்புக்கடவுளாகிய திருமால். வானோர்: தேவர். பரவு: வணங்குகின்ற. மாதங்கத்தானனந்தான்: யானை முகத்தை உடைய விநாயகக்கடவுள், மாதங்கம்: யானை. ஆனனம்: முகம்.

1. திருமால்: விஷ்ணுமூர்த்தி. தேவர் பெருமான்: தேவேந்திரன். வரி: கோடு.

வடஅரவம் பூட்டிநெடு மந்தரத்தைந் நாட்டிப்
புடவிஅதி ரத்திருகும் போது - கடலில் 2
புடைபட்டு எழுந்துவந்த புத்தமிழ்தம் அந்நாள்
கடைபட்ட தென்று கடத்தி - வடிஇட்ட
தேங்குழம்பைக் கள்ளுவெறி சேர்ந்த தெனஅகற்றி
மாங்கனிக்கும் கொஞ்சம் வடுக்காட்டிப் - பூங்குயிலை
ஆங்கோது சின்னமென்றும் ஆலைக் கருப்பமொழி
தாங்கோது பட்டதென்றும் தள்ளிவைத்துப் -
பாங்கிலிசை 5
பொங்குதமிழ்ப் பால்வாங்கிப் பூங்கருணைத் தேன்கலந்து
மங்களரா கப்பாகின் மத்தித்துச் - சங்கீதக்
கான ரசமெழுப்பிக் கற்றோர் செவிக்கமுத
பானரசம் என்ன இசைப் பண்காட்டித் - தாமொருபால்
கிள்ளைமொழி வந்துகற்கக் கேட்கும் குழல்வகைகள்
உள்ளதெல்லாம் பேசாது ஒழித்துவிட - வெள்ளைநிறப் 8

---

2. வடம்: கயிறு. அரவம்: பாம்பு. மந்தரம்: திருப்பாற்கடலைக் கடையும்போது மத்தாக நட்ட மலை: புடவி: உலகம். அதிர: கிடுகிடுக்க. திருகும்போது: கடைந்தகாலத்து.

3. புடைபட்டு: அடிபட்டு. புத்தமிழ்தம்: புதிய அமிர்தம். கடைபட்டது: 1 கடைசியாக வந்தது; 2. கடைப்பட்டது. கடத்தி: தள்ளி.

4. வடு: 1. மாவடு; 2, குற்றம். பூங்குயில்: அழகிய குயில்.

5. ஓது; சொல்லப்பட்ட. சின்னம்: 1. அடையாளம்: அதாவது குயில் மன்மதனின் வெற்றிச் சின்னம்; 2. சின்னப்பொருள். ஆலை: கரும்பு ஆட்டும் யந்திரம். கருப்பம்: கரும்பு. மொழி: 1. கரும்பின் கணு; 2. சொல். பாங்கில்: இணக்கமாக. இசை: சங்கீதம்.

6. மத்தித்து: கூட்டி.

7. ஒருபால்: ஒருபக்கம்.

8. கிள்ளை: கிளி.

பாரதியும் நாரணியும் பார்மகளும் தும்புருவும்
நாரதரும் வந்து நயங்கேட்பச் - சாரமுள்ள 9
பத்தர்மனம் தானுருகப் பட்டமர மும்தழையச்
சித்திரமும் கூடச் சிரம் அசைக்க - எத்திசையும் 10
விண்டுருகக் கற்றறிந்தோர் மெய்யுருக இன்பரசம்
கண்டுருகக் கல்லும் கரைந்துருகத் - தொண்டைசற்றும்
விக்காமல் வீணையிசை மிஞ்சாமல் பாடியசொல்
திக்காமல் ராகம் சிதையாமல் - பக்கத்தில்
சித்தம் கலையாமல் சிற்றிடைதள் ளாடாமல்
குத்து முலையும் குலுங்காமல் - கத்திமுனை
வெல்லம்போ என்னும் விழியிமையும் கோட்டாமல்
வெல்லம்போல் பாடும் விறலியே! - வல்லமையாய்
மன்மதநூல் பார்க்கும் மதியுள்ள வாலிபர்க்குச்
சொன்ன முலைக்கோட்டுச் சொர்க்கமே! - எந்நாளும் 15

---

9. பாரதி: கலைமகள். நாரணி: திருமகள். தும்புரு: நாரதரைப்போல வீணையில் வல்ல ஒரு தேவலோகவாசி.

10. பத்தர்: அடியார்.

11. விண்டு: பிளந்து.

12. வீணை இசை மிஞ்சாமல்: இசையில் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்றவேண்டும். வீணையின் இசையைப் பாட்டு மீறிவிடாமல் என்பது பொருள்.

13. சித்தம் கலையாமல்: எண்ணம் வேறொன்றில் செல்லாமல். இதனைக் கேட்கின்றவர்க்கும் ஏற்றுதல் பொருந்தும். பாட்டுக் கேட்போர் கருத்தை வேறு எதிலும், போகவிடாமல் மெய்ம் மறக்கச் செய்து, பாட்டின் வழி இழுப்பதே சிறந்த பண்பு.

14. வெல் - அம்போ: வெல்லுகின்ற பாணமோ. விழி இமையும் கோட்டாமல்: கண்புருவத்தைக்கூட வளைக்காமல். விறலி: தூதுபோகும் பெண்.

15. மன்மதநூல்: மதனசாஸ்திரம். சொன்னம்: தங்கம். கோடு: சிகரம்; கொம்பும் ஆம்.

காகம் பறவாத காமக் கடல்நடுவே
நாக சுனைகாட்டும் நாயகமே! - மோகவெறி 16
ஏர்காட்டும் காமத் திளையோர் விளையாட்டுப்
போர்காட்டும் ஆலவட்டப் பூந்தேரே! - யாரும்
வரிசைத் திருநிதம்ப மண்டபத்தைக் கண்டு
தெரிசிக்க முத்திதரும் தேவே! - பருவமுள்ள
வேடிக்கை வாலிபரை வித்தாரக் கொச்சிமஞ்சள்
வாடைக்குள் ளாக்கும் மருக்கொழுந்தே! - நாடிப்பொன்
பாரப் பலாச்சுளைக்கும் பாலுக்கும் மாங்கனிக்கும்
சாரச் சுவைபயிற்றும் சர்க்கரையே! - பேருற்ற 20
கோபால சக்கரத்தைக் கொண்டு கொடுத்துமுத்து
யாபாரம் செய்யும்முத லாளியே! - சோபமொடு
சொம்பாய் அநுதினமும் சுற்றி இளை யோர்களாம்
கொம்பானை வந்துவிழும் கொப்பமே! - நம்பிஎதிர்
வக்கணையே பேசிவரும் வாலிபராம் காளைகளைச்
சிக்கிப் பிடிக்கும் திருகுணியே! - தக்கோருக்கு
எவ்வளவும் தன்மம் அறிந்து ஈயார் புதைத்தபொருள்
அவ்வளவும் பார்த்தெடுக்கும் அஞ்சனமே! - செவ்வாகப்
பாரிலிளை யோர்களெனும் பாரவரால் கன்றுகளை
வாரிப் பிடிக்கும் மணிவலையே! - சிராக 25

---

20. பாரம்: பெரிது. சார: பொருந்த.

22. சொம்பு: அழகு. கொப்பம்: யானை விழ வெட்டும் குழி.

24. அஞ்சனம்: மை. "நம்பர் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள், பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்" என்றவரிகள் இக்கண்ணியோடு பொருந்துவன. செவ்வாய்: ஒழுங்காக.

25. பார்: உலகம். பாரவரால் கன்று: பெரிய வரால் மீன் குஞ்சுகள்.

வென்றியுள்ள வாலிபர்தம் வீட்டிலெல்லாம் போய்வலியச்
சென்றுவிழும் ஜோதிமணித் தீபமே!-துன்றும்இருள் 26
காம்போதி தோளரம்பைக் கன்னியரும் காதல்வைக்கக்
காம்போதி பாடிவருங் காரிகையே! - தேம்பொதிந்த
பாகனரா கங்காட்டிப் பண்காட்டிக் கண்காட்டி
மோகனரா கங்காட்டும் மோகனமே! - நாகமன்னன்
நாட்டையர சாட்சிசெயும் நங்கைசெவிக் காரமுதாய்
நாட்டைநயங் காட்டும்மதன் நாட்டமே! - சூட்டுமணி
நாகவரா விக்கிசைக்கொண் டூதவநு ராகநய
நாகவரா விக்கிசைந்த நாயகமே! - மேகநிறச் 30
சாரங்கர் ஆகந் தழுவியின்பத் தேறாட்டும்
சாரங்க ராகப்ர சங்கமே! - சீர்பெரிங்கும் 31

26, 27. துன்றும் இருள் காம்பு ஓதி தோள்: துன்றும் இருள் ஓதி; காம்பு தோள் என்று கொண்டு கூட்டல் வேண்டும். இது நிரல் நிரை. துன்றும் இருள்: நெருங்கிய இருட்டுப் போன்ற. ஓதி: கூந்தல். காம்பு தோள்: மூங்கில் போன்ற தோள். அரம்பைக் கன்னியர்: ரம்பை போன்ற இளம் பெண்கள். 27 - வது கண்ணியின் இரண்டாவது அடியிலுள்ள காம்போதி ஒருராகத்தின் பெயரைக் குறிக்கிறது. காரிகை: பெண். தேம் பொதிந்த: தேன் பெய்யப்பட்ட.

28. பாகு அன ராகம்: பாகை ஒத்த ராகம். மோகனராகம்: ராகவகைகளுள் ஒன்று. மோகனமே: மோகிக்கத் தக்கவளே. நாக மன்னன்: தேவராஜன்.

29. நங்கை: இந்திராணி. ஆர் அமுது: நிறைந்த அமிர்தம். நாட்டை: ஓர் இராகம். மதன் நாட்டம்: மன்மதன் கண்பாயுமிடம்.

30. நா - கவர் - ஆவிக்கு: நாவைக்கவர்ந்து ஆளுகின்றவனுக்கு. அநுராகம்: ஆசை. நாகவராளி: ஓர் இராகம்.

31. சாரங்கர்: சாரங்கம் என்னும் பெயர்கொண்ட வில்லையுடைய திருமால். ஆகம்: உடல். சாரங்கராகம்: ஓர் பண்.

பாடி இராகவன்பேர் பாரவருக் குண்டாகத்
தோடியிரா கம்பாடும் தோகையே! - மோடிசெய்து 32
கத்தரிப்புட் கொண்டகடுங் கல்நெஞ்சை யுங்கரைக்கும்
இத்திரிப்புக் கேற்ற சிரோமணியே! - பைத்தசொர்ன
விண்ட துயரமுலை மேனகையே! யான்வருத்தம்
கொண்ட துயரமெலாம் கூறக்கேள்! - பெண்டியுடன்

தன் கதைச் சுருக்கம்

பூசலிட்டுக் காற்றாடி போல்சுழன்று நான்சிலநாள்
தேசமெட்டுத் திக்கும் திரிந்ததுவும் - வாசத் 35
திருமருதூர் சேர்ந்து திருத்தணிக்குள் சிக்கி
வரும்எருதாய்த் தாசி வசமாகி - உருகியதும்
என்இளமை வேசைமகட்கு ஈந்ததுவும் கூளிகைக்குள்
சொன்னமெலாம் நான்கொடுத்துத் தோற்றதுவும் - கல்வீலி
வைததுவும் சேர்ந்திருந்த மானுளும் கூடிவஞ்சம்
செய்ததுவும் அம்பலத்தில் சேர்ந்ததுவும் - தொய்யளனை
ஆட்டவட்டம் கொண்டதுவும் அப்பால் உபாயமதாய்
வீட்டைவிட்டுத் தூர விரட்டியதும் - கோட்டுமுலைக்
கன்னியைநான் விட்டுக் கடந்துவெளி யேறியதும்
தென்முகவை யம்பதியில் சேர்ந்ததுவும்-அன்னையன்ன 40

---

32. பாடி: ஆயர் வீடு. தோடி இராகம்: பண் வகைகளுள் ஒன்று. தோகை: மயில். மோடி: பிணக்கு.

33. கத்தரிப்பு உள்கொண்ட: கத்தரிப்பு வேலையை மேற்கொண்ட. இத்திரிப்பு: இருகுதாளம். பைத்த: பசுமையான. சொர்னம்: தங்கம்.

34. விண்டு: மலை. அது: ஒத்த. உயரமுலை: ஓங்கிய தனம். பெண்டி: மனையாள்.

35. பூசல்: சண்டை. சுழன்று: சுற்றி.

40. முகவையம்பதி: இராமநாதபுரம்.

பாடல் தலைவன் சிறப்பு

வந்திக்கு வந்ததுவும் மங்கைமங்க ளேசரடி 41
வந்திக்கும் தூய மனத்தானை - முந்தமரில்
சிந்துரத்தம் சிந்துரத்தைச் சேரமரு வார்தளத்தைச்
சிந்துரத்த கைச்சிந் துரத்தானை - வந்துகப்பம்
காணவைத்துப் பொன்முடிமேல் கையைவைத்துப் போற்றுதார்
தானையத்தை வென்ற தளத்தானைச் - சேணுலவும்
பேரானைத் தன்மநிலை பேரானைத் தென்முகவை
ஊரானை அர்ச்சுனன்தேர் ஊர்ந்தானை - நேரான
செஞ்சொல்நவ ரஞ்சிதசெ யம்பெறுது ரந்தரனை
அஞ்சலர்இ றைஞ்சுசர ணம்புயனைத் - தஞ்சமென்று 45
வந்தவர்ச காயன்விசு வாசசது ரங்கதள
தந்த்ரபுய மந்தரச வுந்தரனைத் - தந்திரமாய் 46

---

41. மங்கை: உத்தரகோச மங்கை. மங்களேசர்: ஆண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருப்பெயர். வந்திக்கும்: வணங்கும். தூய: பரிசுத்தமான. அமர்: போர்.

42. சிந்து ரத்தம் சிந்துரத்தை: ரத்தம் சிந்துகின்ற யானை யணியானை. சேர: ஒருசேர. மருவார்: எதிரிகள். தளம்: படை. சிந்துரத்த கைச் சிந்துரம்: ரத்தத்தைக் கொட்டுகின்ற கையையுடைய யானை. கப்பம்: திறை.

43. தானையம்: சேனை. சேண்: உயரம்; ஈண்டுவிண்.

44. தன்மநிலை பேரான்: தர்ம வழியினின்றும் மாறுபடாதவன். அர்ச்சுனன்தேர் ஊர்ந்தான் என்பது உபசாரம்; கண்ணனை அனையவன் என்பது கருத்து.

45. அஞ்சலர்: மாற்றார். சரணம்புயன்: பாத தாமரையுடையவன்.

46. சதுரங்க தளம்: தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படை. புய மந்தரம்: மலை போன்ற தோள். சவுந்தரம்: அழகு.

எத்தளப்புப் பார்க்குமொன்னார் எழுசுற்றுக் கற்கோட்டைக்
கொத்தளத்தைத் தூளாக்கும் கோமானை - கித்தகித்தம் 47
கப்பமிடச் சொல்லிக் கலிங்கருக்குச் சீட்டெழுதி
ஒப்பமிடும் தென்முகவை ஊரானைச் - செப்புமுலைத்
தையலர்க்கு வேளைத் தனுக்கோடி காவலனைத்
துய்யகடல் தொண்டித் துறையானைச் - செய்யவள
மேதினியாள் முத்து விஜய ரகுநாத
சேதுபதி செல்வச் சிரோமணியை - மாதரசி 50
விண்மணியாய் வந்தமுத்து வீராயி நாச்சியார்
கண்மணியை மன்னவர்சி காமணியை - எண்ணுபுகழ்
நாதன் விஜயரகு நாத சிவசாமி
சேது பதியை ஜெயபதியை - ஆதிபனைக்
கண்டதுவும் எங்கோன் கருணைமுகம் பார்த்துமகிழ்
கொண்டதுவும் தண்டமிழ்யான் கூறியதும் - பண்டென்
கலியார் கலியைக் கடந்தப்பால் ஓடிப்
புலியாரைக் கண்டமான் போல - விலகியதும்
செல்வம்வந்து கூடியதும் சித்தமகிழ்ந் தென்மனையாள்
நல்வசனம் காணமனம் நாடியதும் - மெல்லமெல்ல 55

---

47. எத்தளப்பு: ஏமாற்றுவித்தை. ஒன்னார்: பகைவர். கொத்தளம்: மதிள்.

49. வேள்: மன்மதன்.

50. முத்து விஜய ரகுநாத சேதுபதி: பாட்டுடைத் தலைவன் தந்தையார் பெயர்.

51. முத்து வீராயி நாச்சியார்: பாடல் தலைவனின் தாயார் பெயர்.

52. விஜய ரகுநாத சிவசாமி சேதுபதி: பாடல் தலைவனுடைய பெயர்.

54. கலி ஆர்கலி: துன்பக் கடல்.

இங்கவளைத் தேடிநான் இன்றுவந்து சேர்ந்ததுவும்
தங்கவளைக் கைமாதே சாற்றக்கேள்! - எங்குமலர் 56

தசாங்கம்

1. மலை

கொத்தாரும் பூஞ்சோலைக் கொம்பெல்லாம் கார்மேகம்
வந்தாரப் பிள்ளை மதியூரச் - சந்தாரும்
தென்றல்கால் தேடிச் சிலைமாரன் வந்திருக்க
மன்றல்கா தேடிமக வாளிருக்கத் - தென்தமிழைப்
பன்னுகும்பன் இப்பூமி பாரத்துக் காயிருக்க
மன்னுபுகழ்த் தென்பொதிய மாமலையான் -
பொன்னையள்ளித்

2. ஆறு

தெள்ளுபுனல் கையால் சிறந்தமல ரைத்தூவி
அள்ளிக் களிகளையன் பாக்குவித்து - வெள்ளைநிறச் 60

---

56. தங்கவளைக் கை மாதே!: இது விறலியை விளித்துக் கூறுவது.

57. கொத்து: பூங்கொத்து. கார்மேகம்: மழை பொழியும் மேகம். பிள்ளை மதி: இளம் பிறை. சந்து: சந்தனம்.

58. தென்றல் கால்: தெற்குக்காற்று. சிலைமாரன்: வில்வல்ல மன்மதன். மன்றல் கா: மணச்சோலை.

58, 59. தென் தமிழைப் பன்னு கும்பன்: தென் தமிழைச் சொல்லுகின்ற கும்பமுனி - அகத்தியன். இப்பூமி பாரத்துக் காயிருக்க: இறைவன் திருமணத்தில் வடபால் பூமி கூட்டந்தாங்காமல் தாழ்ந்து போக, அதனை ஈடு செய்வதற்கு அகத்தியன் தெற்கே பொதிகை போந்திருந்தான் என்பது கதை.

60. தெள்ளு - புனல் - கையால்: தெளிந்த நீராகிய கையினால். அன்பாக் குவித்து: அன்பாகக் குவித்து.

சங்கமணி தாங்கிச் சைவசமயந்தாங்கிச்
செங்கமலம் தாங்கிவரும் செய்கையால் - பொங்கியபால் 61
அன்னத்தை வாரிவரும் ஆதரவால் ஆசைதரும்
பொன்னைத் துரும்பாக்கும் பொற்பினால் - நன்மணியால்
மின்பரவும் தன்கரைவாய் வீற்றிருக்கும் ஈசனடிக்கு
அன்பரைப்போ லும்வையை ஆற்றினான் - பொன்பரவு

3. நாடு

தேவர் அரசாட்சி செய்வதனால் செவ்வரம்பை
மேவுதலால் கற்பகத்தார் மிக்கத்தால் - நா இரசத்
தெள்ளமுதுண் டானகடல் சேர்க்கையால் சொற்புலவர்
உள்ளதனால் சிந்தா மணியுளதால் - விள்ளரிதாம் 65
பொன்னாட்டைப் போலும் புகழ்நாட்டிச் சீர்நாட்டும்
நன்னாட்டின் மிக்கசெம்பொன் நாட்டினான் - மின்னாட்டி

4 நகர்

வாடும் மருங்கார் வருநடைகண் டன்னமெல்லாம்
நாடி வரும்முகவை நன்னகரான் - நீடுமுனை 67

---

61. திருஞானசம்பந்தர் பாசுரம் எழுதிய ஏட்டை ஏந்தி வந்ததால் வையை யாறு சைவசமயந்தாங்கியது என்றார்.

64. தேவர்: 1. விண்ணவர்; 2. சேதுபதி குலத்தவர். விண்ணாட்டையும் தேவர் அரசாட்சி செய்கின்றார்; சேதுநாட்டையும் தேவர் அரசாள்கின்றார் என்னும் சிலேடை நயம் தோன்றத் தேவர் அரசாட்சி செய்வதனால் என்னும் சொல் தொடர் அமைக்கப் பெற்றிருக்கிறது. செவ் அரம்பை வானவர்நாட்டிலும் உண்டு; சேதுநாட்டிலும் உண்டு. அங்கு அரம்பை முதலிய தேவ மாதர்; இங்கு அரம்பை வாழை. கற்பகத்தார் அங்கும் உளர்; இங்கும் இருக்கின்றார். ஆண்டுக் கற்பக நிழலில் வாழ்வார்: ஈண்டுக் கற்பகம் போன்ற கையை உடையார்.

65. புலவோர்: வானுலகில் விண்ணவர்; இவ்வுலகில் புலமை நிரம்பியவர்.

67. முனை: போர்க்களம்.

5 குதிரை

வெஞ்சினங்க ளும்கிளம்ப வெண்டயஞ்ச தங்கைகொஞ்ச
வஞ்சர்நெஞ்ச கங்கலங்க மஞ்சுடைந்த - கஞ்சுருங்க 68
மண்டலங்க ளுந்தயங்க மந்தரஞ்சு ழன்றொதுங்க
அண்டபிண்ட முங்கலங்க அந்தரந்தி - ரண்டெழும்ப
அட்டதிக்கும் எட்டுவெற்பும் அப்புறப்ப டக்குதித்து
வட்டமிட்ட ரைக்கணத்தின் மைப்புயற்றி - ரட்டகற்றி 70
மற்றார்சி னத்தெதிர்த்த மக்கரைப்ப டத்துவைத்து
வெற்றிபெற்ற சக்ரவட்ட வெண்பரியான் - பற்றும்

6. யானை

இருப்புலக்கை யால்கிறி ஏறிவரும் ஒன்னார்
இருப்புலக்கை யெல்லாம் இடித்து - நெருப்பைப்
பிடித்துப் பிழிந்து பெலத்துவா ரத்தை
அடித்துமக மேருவைத்தாள் ஆக்கி - விடப்பாரப்
பையரவொ ரெட்டைப் பணிமணியென் றேசினந்து
துய்யமே கங்களையும் சூல்கிழித்து - வெய்யவனைத்
தெற்குவடக் காகத் திருப்பிப் பழையபடி
வைக்குமுக்ர விரமத வாரணத்தான் - மைக்குழலார் 75

7. மாலை

கண்வண்டும் ஏடவிழ்த்துக் கானஇசை வாசிக்கும்
தண்வண்டும் சூழுமுல்லைத் தாரினான் - வண்மையென்றும்

---

68. வெம் சினங்கள் : கொடும் கோபங்கள். மஞ்சு : மேகம்.
69. மண்டலம். உலகம். மந்தரம் : ஓர் மலை.
71. மக்கர் : மல்லர். பரி : குதிரை.
72. ஒன்னார் : பகைவர். இருப்பு உல : இருப்புக்கெட.
74. சூல் : கரு. வெய்யவன் : சூரியன்.
75. வாரணம் : யானை.
76. கண் வண்டு : கண்ணாகிய வண்டு. ஏடு : இதழ் தார் : மாலை.

8. முரசு

தோன்றவரு வெற்றியென்றும் சூடியகல் யாணமென்றும்
மூன்றாய் முழங்கும் முரசினன் - வான்தாவிப் 77

9. கொடி

பற்றிஇரா குக்கேதுப் பாம்புகளைத் தேடுதல்போல்
சுற்றும் கருட துவசத்தான் - சற்றுமனம்

10. ஆணை

பார்க்குள் அடங்கார்க்கும் பாராச ராசர்முதல்
யார்க்கும் பயம்கொடுக்கும் ஆணையான் - சீர்க்கமலத்

சேதுபதியின் பிற சிறப்புக்கள்

தேமாந் தவளமலர் சேர்ந்துவளர் நாமாது
மாமாது வீற்றிருக்கும் வாசலினன் - மாமாலை 80

பூணுதமிழ்க் கொண்டுவந்து பொன்வரிசை தந்துகவி
வாணர்கலி தீர்க்குமணி வாசலினன் - மாணிக்கம்

சிங்களதே சத்தரசர் சீனத் தரசருடன்
வங்காளர் கப்பமிடும் வாசலினன் - இங்கிதநூல்

கண்டு நெறிமுறைமை கல்லார் இறுமாப்புக்
கொண்டதுபோல் மீறியகற் கோட்டையினன் -
விண்டறிவால் 83

76, 77. கொடை வெற்றி மணம் என்ற மூன்றையும் குறிக்கும் முரசங்கள் முழங்கும் வாயிலை உடையவன்.

78. கொடியில் பொறிக்கப்பட்டகருடன், தனக்குப் பகையான இராகு கேதுப் பாம்புகளைப் பிடிக்க விண்ணில் தாவுவதுபோல் உயர்ந்திருக்கின்ற கருடக் கொடியுடையவன். துவசம்: கொடி.

80. தவளம்: வெண்மை. நாமாது: சரஸ்வதி. மாமாது: இலக்குமி.

81. கொண்டு உவந்து: ஏற்றுக்கொண்டு மகிழ்ந்து. கவிவாணர்: கவியினால் வாழுகின்றவர். கலி: வறுமை.

83. கல்லார் இறுமாப்புக் கொள்ளுதலை "கரையமை கல்வி சாலாக் கவிஞர் போல் இறுமாந்து" என்றார் பிறர்.

ஆழ்ந்தகன்ற கல்வி அறிஞர் குணம்போலே
ஆழ்ந்தகன்று நீண்ட அகழியான் - சூழ்ந்தஉடல் 84
தேய்படா மற்களங்கம் சேராமல் பாம்பினெச்சில்
வாய்படாச் சோதி மதிமுகத்தான் - பாயும்வஞ்சக் 85
காமானை வென்றமலர்க் கண்ணனிவ னேயென்று
மாமாது விற்றிருக்கும் மார்பினன் - நாமாதே
வாய்த்தகலை எல்லாம்சொல் வண்மைபோல் வச்ரமணி
சேர்த்து விளங்கும் செவியினன் - ஆர்த்தெழுந்து
பச்சிரத்நம் ஓடப் பரராச ரைத்துணிக்கும்
வச்சிரவாள் சேர்க்கும் மருங்கினன் - பச்சமுடன்
வேற்றரசர் பொற்பூவும் வெள்ளிப்பூ வுந்தூவிப்
போற்றிநிற்கும் செங்கமலப் பூம்பதத்தான் - நால்திசையில்
சேர்க்கையுடன் பாநுமதி தெற்குவடக் கானாலும்
வாக்கிரண்டு சொல்லாத மானபரன் - பார்க்குள் 90
புலவரார் என்றழைத்துப் பூணுமன்பால் நூற்றுக்
கலவார கன்கொடுக்கும் கையான் - நிலவுகொன்றைச் 91

---

85. சந்திரனுக்குத் தேய்வுண்டு; களங்கம் உண்டு; பாம்பின்வாய் எச்சில் படுவதுண்டு. மதிமுகத்துக்கு அக் குறைகள் கிடையா.

85, 86. பாயும் வஞ்சக் காமானை வென்ற மலர்க் கண்ணன்: பாய்ந்து காட்டில் வந்த வஞ்சக மாரீச மானை வென்ற திருமால்.

88. பச்சிரத்நம்: பச்சை ரத்நம். பரராசர்: வேற்றரசர். வச்சிரவாள்: திண்மையான வாளாயுதம். மருங்கு: இடுப்பு.

90. பாநு: சூரியன். மதி: சந்திரன். வாக்கு இரண்டு: இரண்டு பேச்சு. "மாமறை நூல் பொய்த்தாலும் வாரிதி நீர் பொய்த்தாலும், சோமரவி பொய்த்தாலும் சொன்ன மொழி பொய்யாதான்" என்ற பிறர் கண்ணி இதனோடு ஒத்திரு.

91. கலம்: ஓர் அளவு.

செங்கமலம் தாங்குசடைச் சென்னிமங்க ளேசரடிச்
செங்கமலம் தாங்கும் திருமுடியான் - பொங்கால 92
கந்தரத்தான் அந்தரத்தான் கண்மணியைச் சண்முகனைக்
கந்தனைத்தாள் போற்றும் கருத்தாளன் - வந்துலகம்
எங்கும் பணிகொள் இராஜரா ஜேஸ்வரிபொற்
பங்கயத்தாள் போற்றும் பரந்தாமன் - தங்கச்
சிலைக்கரத்தான் வெள்ளிச் சிலம்பையும்கைப் பற்றிக்
குலுக்குமத யானையின்மேல் கொண்டு-நிலத்தையுண்ட 95
மாற்கடலை வெல்லும்வடி வாள்போல் அலைகொழிக்கும்
பாற்கடலைப் போல்குதிரைப் பந்திவரச் - சேற்கிடமாம்
அக்கடலை உண்ணமுகில் அவ்வளவும் சூழ்ந்ததுபோல்
கொக்கரித்துக் காரானைக் கூட்டம்வர - மைக்கருங்குல்
கொண்டல்முழக் கம்போல் குமுறுமுர சம்சுமந்து
கொண்டுவரும் ஒட்டகமோர் கோடிவர - மண்டுதுகள்
வான வரைமறைக்க மாற்றர் மனம்பதைக்கச்
சேனை திரண்டு திரண்டுவர - வானோரை 99

92, 93. பொங்கு ஆல கந்தரத்தான்; பொங்கி எழுந்த விஷத்தைக் கண்டத்திலே கொண்டவன்; அவன் சிவபெருமான். அந்தரத்தான்; விண்வரை வளர்ந்தவன். அவன் கண்மணி: முருகக்கடவுள். ஷண்முகன்: ஆறுமுகத்தை உடையவன்.

94. இராஜராஜேஸ்வரி: சேது காவலர்கள் வழிபடு தெய்வம். பங்கயம்: தாமரை. தாள்: திருவடி.

94, 95. தங்கச் சிலைக்கரத்தான்: இறை சிவன். சிலை: வில். கரம்: கை. சிலம்பு: மலை.

96. வடிவாள்: கூர்மையான கத்தி. பந்தி: வரிசை. சேல்: மீன்.

97. முகில்: மேகம். கொக்கரித்தல்: ஆரவாரம் செய்தல். காரானை: கறுப்பு யானை.

98. கொண்டல்: மேகம். மண்டு: நெருங்கிய. துகள், தூசி.

பன்னிரண்டில் ஒன்றின் பகையைவெல்லத் தாவுதல்போல்
உன்னியநு மக்கொடியு லாவிவர - இங்கிலத்தோர் 100
ஆர்க்கும்வெற்றி காட்டி அமரா வதியைவெல்லப்
பார்க்கும் கருடப் பதாகைவரப் - பார்க்கதிரோன்
தன்குலத்து வேந்தனுடன் தானும்வந்து சேர்ந்ததுபோல்
மின்கதிர்க்கா விக்குடைமேல் மேல்விளங்க - மன்னெதிரே
வீறுடனே விற்பிடித்த வீரருண்டேல் வாருமென்று
கூறுதல்போல் வீரசின்னம் கொம்பூத - வீறுகொண்ட
கோல அட்ட திக்கும்வெற்றி கொண்டுவரும் ஆலவட்டம்
தாலவட்டம் சக்ரவட்டம் தாண்டிவரக் - காலமழைக்
காளமே கம்போல் கடல்போல் ஒலித்திடுமெக்
காளமுடன் பேரி கைமுழங்க - வாளமர 105
சுத்தரண வீரர்செய சூராதி சூரர்தள
கர்த்தர்துரை மக்கள் கலந்துவரச் - சத்துருக்கள்
போர்க்களத்தின் ஊடே புகுந்தெதிர்ந்த மன்னர்வெற்றித்
தார்க்கலங்கள் எல்லாம் தகர்ந்துவிழ - ஆர்க்குமணிச் 107

---

100. பன்னிரண்டில் ஒன்று : பன்னிரு ராசிகளில் ஒன்றாகிய விருச்சிகம் என்னும் தேள்.

101. அமராபதி : இந்திரன் அரசிருக்கைத் தலைநகரம். பதாகை : கொடி. பார் : உலகம். கதிரோன் : சூரியன்.

102. கதிர் : ஒளி. மன் : அரசன்.

103. வீறு : சிறப்பு. சின்னம் : அடையாளம்.

104. கோலம் : அழகு.

105. காளமேகம் : பெருமழை பொழிய அமைந்த முகில். எக்காளம் : ஓர் ஊதும் இசைக்கருவி. பேரிகை : முரசவாத்தியம்.

106. தளகர்த்தர் : சேனைத்தலைவர். சத்துருக்கள் : பகைவர்.

107. தார் : மாலை. கலங்கள் : ஆபரணங்கள். தகர்ந்து : உடைந்து. ஆர்த்தல் : ஒலித்தல்.

சங்கம் முழக்குமன்னர் தத்தளித்துச் சோரியிலே
அங்கம் உழக்கி அலைந்துலையப் - பொங்கி 108
வருகு திரைக்கடல்வாய் வாளிதொட்ட மன்னர்
பெருகு திரைக்கடல்வாய்ப் பேர - இருபிளவாய்க்
கண்டமறக் கண்தகரக் கண்டிதொரு கண்டமெனக்
கண்டமெனக் கண்டகரும் கண்டோட - மண்டமரில் 110
கேடகமுண் டானதினிக் கேடகமேன் வாளென்மொழி
கேடகவென் றேடவழி கேட்போரும் - நீடுசமர்
உன்மத் தரைநிகராய் ஒங்குமொன்னர் மின்னார்கை
வன்மத் தரைதயிராய் மாழ்கிவிழத் - துன்னுறுதார்க் 112

---

108. சங்கம்: சங்கு. தத்தளித்து: தடுமாறி. சோரி: ரத்த வெள்ளம். அங்கம்: உடம்பு. உழக்கி: கலக்குதல்பெற்று. உலைதல்: கெடுதல்.

100. வரு குதிரைக் கடல் வாய்: வருகின்ற குதிரைகள் மல்கிய கடலின் இடத்து. வாளி: அம்பு. தொட்ட: தொடுத்த. பெருகு திரைக் கடல்வாய்: பெருகிவருகின்ற (ரத்த) அலைக் கடலினிடத்து.

110. கண்டம் அற: கழுத்து ஒடிய. கண் தகர: கண்கள் பழுதுபட. கண்டு - இதொரு கண்டம் என - கண்டம் என: பார்த்து இது ஒரு கண்டம் என்று, கண்டம் என்று சொல்லிக்கொண்டு. கண்டம்: ஆபத்து. கண்டகர்: கொடியோர். மண்டு - அமர்: அதிர்ந்து செய்யும் யுத்தம்.

111. கேடு - அகம் - உண்டானது: கேடு உள்ளே வந்து விட்டது. இனி - கேடகம் ஏன்?: இனிக் கேடகம் எதற்கு?. கேடகம்: எதிரிகளின் போர்க் கருவி தாக்காமல் தாங்கும் ஒரு தட்டு. வாள் என்?: கத்தி என்னத்திற்கு? மொழி கேள்: சொல்வதைக்கேள். தகவு: தகுதி. நீடு சமர்: நீண்ட போர்.

112. உன்மத்தர்: மதம் பிடித்தவர். ஒன்னார்: பகைவர். மின்னார்: மங்கையர். வன் - மத்து - அரை தயிர்: வலிய மத்தினால் கடையப்பட்ட தயிர். துன் - உறு: நெருங்கப்பெற்ற. தார்: மாலை.

காமதகனுவெலவே கண்ணீர் ததும்பஇனித்
தாமதமா காதென்று தாளில்விழ - வாமமரத் 113
துக்கோடி முக்கோடி தும்பி தும்பி யாகஎட்டுத்
திக்கோடி முக்கோடிச் சென்றுவிழத் - தக்க

ஒருகுடைவாழ் வேந்தா! உயிரெமைக்கா என்று
சொருகுடைவாழ் வேந்தர்வந்து சுற்றப் - பெருகி 115
வருமிதப்பாம் சோரியென்று மன்னர் உடலைத்
தருமிதப்பாய்க் கொண்டுகரை சார - நிரையாய்ப்

பரும்பருந்தா டிச்சிரங்கள் பட்டுவிழச் சூழ்ந்து
கரும்பருந்தா டிக்குடரைக் கவ்வப் - புரண்டுவிழும்
அக்கொடியார் மேற்பொன் அருங்கொடிக்கு மூத்தகொடி
கைக்கொடியாய் நின்றகொடி கத்திவிழ - மிக்க

பலகை பலகை பரப்பியதில் வாரி
அலகை அலகை அடையப் - பலவிதமாய்ப்
பொங்கு குருதிரண பூமி திசைதிசைகள்
எங்கும் பெருங்காற் றெடுத்தோட - அங்கங்கே 120

---

113. காம தகனன்: மன்மதனை எரித்த சிவபெருமான். தாள்: அடி. வாமம்: ஒளி.

114. முக்கு: முடுக்கு. தும்பி: வண்டு. திக்கு: திசை.

116. மிதப்பு: தெப்பம். நிரை: வரிசை.

117. பரும்-பருந்து: பெரிய பருந்து. சிரங்கள்: தலைகள். கரும் பருந்து: ஒருவகைப் பருந்து. குடர்: குடல். கவ்வ: பற்ற.

117, 118. புரண்டு விழும் அக்கொடியார்: போர்க் களத்தில் இறந்த கணவன்மார் மீது புரண்டு விழுந்து புலம்புகின்ற கொடியனைய பெண்கள். பொன் அருங் கொடி: திருமகள். மூத்தகொடி: அவளுக்கு மூத்த மூதேவி. கைக்கொடியாய் நின்ற: அவள்கையிலே இருக்கும் கொடியில் தீட்டப்பட்ட. கொடி: காக்கை.

119. பலகை பலகை: பலகைகள் பல வகைகள். அலகை அலகை: பேய்கள் பேய்கள்.

120. குருதி: ரத்தம். ரண பூமி: யுத்த களம்.

பச்சைக் குடைகமலப் பத்திரம்போ லேயிலங்க
உச்சக்காம் பேநாளம் ஒப்பாக - மிச்சமாய்ச் 121
சந்த்ரகா விக்குடைசெந் தாமரைப்பூப் போல்மலர
விந்தைபெற வெண்குடைவெண் தாமரைபோல் -
வந்துலவும்
விள்ளரிய மன்னர்குடை மேற்கிடக்கும் சாமரைகள்
வெள்ளோதி மந்துயிலும் விந்தைபெறத் - துள்ளுசமர்
வேடங்கள் மாறி விருதரசர் போட்டபல்லக்கு
ஓடங்க ளாயலகை ஓட்டிவரக் - கேடகங்கள்
பங்கம் அடக்கவே பார்த்துப் பதுங்குகின்ற
வெங்கமடம் போலே மிதந்தமிழ்ந்தச் - செங்கண்மரு 125
வாரைவென்று வாகைகொண்டு வாளிலங்கு பாநுதிங்கள்
நேரில்வந்து சூழ்சிலம்பின் நீள்முடிமேல் - சேர்கருட
கேதனத்தை நாட்டிக் கிரீடமன்னர் கொண்டுவரு
மாதனத்தைக் கப்பமென வாங்கியே - நீதனந்த 127

---

121. கமலப் பத்திரம்: தாமரையிலை. இலங்க: விளங்க. உச்சக் காம்பு: குடையின் நடுக் கம்பு. நாளம்: தாமரைத் தண்டு.

123. விள் அரிய: சொல்ல முடியாத. சாமரை: வெஞ்சாமரம். வெள் ஓதிமம்: வெள்ளை நிறமான அன்னப்புள். துயிலுதல்: உறங்குதல். விந்தை: வியப்பு: சமர்: போர்.

124. போர்க்களத்திலே அரசர்கள் போட்ட பல்லக்குகளை அங்கு ஓடும் ரத்த வெள்ளத்திலே ஓடங்களாகப் பேய்கள் ஓட்டுகின்றன.

125. பங்கம்: வெட்கம். கமடம்: ஆமை.

126. வாகை: வெற்றிமாலை. வாள்: ஒளி. பாநு: ஆதவன். திங்கள்: சந்திரன். சிலம்பு: மலை. நீள் முடி: நீண்ட சிகரம்.

127. கேதனம்: கொடி. கிரீட மன்னர்: முடிவேந்தர். மாதனம்: பெரும்பொருள். கப்பம்: திறை. நீதன்: நீதிவான்.

மக்கரங்கர் ஆதிமன்னர் வந்துதொழ வையமெல்லாம்
சக்கரம்நடாத்தும் தநுராமன் - மிக்கபுகழ் 128
சேர்க்கும் சிலைராமன் சேதுகண்ட நாள்முதலாக்
காக்கும் தநுக்கோடி காவலவன் - தாக்கியசெங்
காவிச் சிவிகையான் காவிக் கொடியினன்
காவிக் குடையான் கவிக்குடையான் - பூவிலங்கும் 130
வாசமுல்லை மாலையான் மாலிரணி யாகர்ப்ப
யாசி ரவிகுலசி லாக்கியவான் - பேசில்
அடைக்கலங் காத்தான் அநுமத்வ சத்தான்
படைத்திடுமுத் துர்சலா பத்தான் - பிடித்திருக்கும் 132

---

128. மக்கர்: மெக்கா தேசத்தார். அங்கர்: அங்க நாட்டார். (இவர்கள் மகா பாரதக் கர்ணனின் வழித் தோன்றல்கள் போலும்) வையம்: உலகம். சக்கரம்: ஆணை. தநுராமன்: வில்லாளனாகிய இராமன். இது பாட்டுடைத் தலைவனாகிய சேதுபதியைச் சிறப்பித்துச் சொல்லப்பெற்றது.

129. சிலை ராமன்: சண்டுத் தசரத ராமனையே குறிக்கும். சேது: அணைக்கட்டு. "தன்னுடை உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி" காடு போந்து தேவியைப் பிரிந்து கடல் தாண்ட அந்த ஸ்ரீ ராமன் திருவணை கட்டிய அப்பழைய காலத்திலிருந்தே தனுக் கோடிக்குக் காவலர்கள், பாட்டுடைத் தலைவனாகிய சேது பதியின் முன்னோர்களே என்பது இக்கண்ணியின் கருத்து.

130. சிவிகை: பல்லக்கு. கவிக்கு உடையான்: கவிக்கு உடைமைபூண்டவன்.

131. முல்லைமாலை: சேதுநாட்டின் தார். இரணியா கர்ப்பயாசி. இரணியா கர்ப்பம் என்ற பெயரையுடைய ஒரு வேள்வியைச் செய்தவன். ரவி: சூரியன்.

132. அநுமத்வசம்: அநுமக்கொடி. முத்துச் சலாபம்: முத்துக் குளிக்கும் இடம்.

வங்கார டாலினன் மாநாடு காவலான்
சிங்கார மான திறைகொண்டோன் - செங்காவி 133
டாலினன் பஞ்சவர்ண டாலினன் கூருமுனை
வேலினன் தாலிக்கு வேலியான் - ஓலிடுமா
முன்வந்து காத்த முகுந்தனொரு விமனுக்கு
முன்வந்தான் என்னவந்த மூர்த்திகரன் - மின்னும்மழைக்
கொண்டல்வண்டி னந்திரண்ட கொந்தளந்த னந்தனங்கள்
விண்டுசெண்டு பந்துகொம்பு மென்குடங்கள் -
கண்டுசெஞ்சொல்
செங்கணாங்கு டங்கையம்பு சிந்துகொண்ட
சங்குதொண்டை
பங்கயங்கள் செங்கையென்று பண்பொருந்து -
பெண்களின்ப 137

---

133. வங்காரம் : தங்கம். டால் : கொடி.

134. கூருமுனை வேலினன் : மிக்க முனையான வேலாயுதத்தை உடையவன். தாலிக்கு வேலியான் : பெண்கள் மங்கல நாணுக்கெல்லாம் வேலியாக அமைந்தவன் ; உலகத்தைக் காக்க வல்லவன் என்பது கருத்து. ஓல் இடு மா : கத்திய யானையாகிய கஜேந்திரன்.

135. முகுந்தன் ஒரு விமன் : முகுந்தனாகிய ஒப்பற்ற கருடனில் ஏறும் தலைவன். வி : பறவை. அது ஈண்டுக் கருடனை உணர்த்திற்று. அத்திருமாலுக்கு முன்னே தோன்றியவன் சிவபெருமான்.

136. கொண்டல் : மேகம். வண்டு இனம் : வண்டுக் கூட்டம். கொந்து : பூங்கொத்து. அளகம் : கூந்தல். அம் தனங்கள் : அழகிய ஸ்தனங்கள். விண்டு : மலை. செண்டு : பூச்செண்டு. பந்து : விளையாடும் பந்து. கொம்பு : குத்தும் கோடு. மென் குடங்கள் : மென்மையான கும்பங்கள். இவ் அனைத்தும் ஸ்தனங்கட்கு உபமானப் பொருள்கள். கண்டு செஞ்சொல் : இனிமை தரும் பேச்சு கற்கண்டாகும். கண்டு : கற்கண்டு.

137. செம் கணாங் குடங்கை : உள்ளங்கை ஒரே சிவப்பு மயமான கூட்டம். அம்பு சிந்து கொண்ட சங்கு

மாரனுக்கு நேருரைக்கும் வாலசித்ர ரூபன்வெற்றி
மேருவொத்த திரசுத்த வீரன்மிக்க - சீரார் 138

தனதன்அரி ஐந்து தருவெல் கரன்பொன்
மனமகிழ்ந்து வாழும் புயன்பு - வனமடந்தை

விந்தைநிித்த முந்தழைக்கும் வென்றிவிக்ர மன்துதித்து
முந்தழைத்த சிந்துரத்தின் முன்புதித்தோன் -
சந்ததமும் 140

தன்ம தியானம் தழைக்குமதி யான்வதன
நன்மதியான் தெவ்வரைக்கண் ணைல்மதியான் - தென்மலைய

வந்தனத்தான் தந்தைபத வந்தனத்தான் மார்பிலணி
சந்தனந்தான் பொன்னனின்மிச் சந்தனத்தான்-பந்து 142

தொண்டை: நீரால் சிதறித் தள்ளப்படும் சங்குகள் நிகர்த்த கழுத்து. பண்: இசை.

138. மாரன்: மன்மதன். நேர்: சமம். வால சித்ர ரூபன்: சிறந்த வடிவு அழகன். மேரு: மேருமலை.

139. தனதன்: செல்வன். அரி: இந்திரன். ஐந்து தருவெல்கரன்: கேட்டதைக் கொடுக்கும் கற்பகம் முதலிய ஐந்து தருக்களை வென்ற கையையுடையவன். பொன்: இலக்குமி. புயன்: தோள்களை உடையவன். புவன மடந்தை: பூமி தேவி.

·140. விந்தை: வீரலெட்சுமி. சிந்துரம்: யானை. முன்புதித்தோன்: முன்னே தோன்றியவன்; விஷ்ணு மூர்த்தி. சந்ததமும்: எப்பொழுதும்.

141. தன்மம்: தர்மம். தியானம்: நினைவு. மதி: புத்தி. வதனம்: முகம். நல்மதி: நல்ல சந்திரன். தெவ்வர்: பகைவர். தென்மலையம்: பொதிகைமலை.

142. வந்தனத்தான்: வழிபாட்டிற் குரியவன். தந்தை பத வந்தனத்தான்: தாதையின் திருவடி வணங்குபவன். பொன்னனின் மிச்சம் தனத்தான். பொன்னனைவிட மேம்பட்ட பொருள் உடைப்பவன்; பொன்னன் ஈண்டுப் பெரும் பணக்காரனாகிய குபேரன் எனல் பொருந்தும். பொன்னன் திருமகளை ஆள்கின்ற திருமால் என்றும் சொல்லலாம்.

சனத்தான்மிக் கோர்பா சனத்தான் அரியா
சனத்தான் இதவ சனத்தான் - இனித்த 143
கரும்புரசம் போல்முக் கனிரசம்போல் யாரும்
விரும்பு மொழிபகரும் வேந்தன் - பெரும்புகழ்சேர்
மேதினியாள் முத்து விஜய ரகுநாத
சேதுபதி சிங்கா சனபதிக்கும் - ஆதரவாய்த் 145
தஞ்சநீ என்றுவந்து சார்ந்தோர்கள் யாவரையும்
அஞ்சலென்று காத்தருளும் அன்புத்தாய் - மிஞ்சுபெரும்
தன்மப் பயிர்தழைக்கத் தாரணியெ லாந்தழைக்க
நன்மைப் பயிர்வளர்க்கும் ஞானத்தாய் - பொன்மங்கைத்
தேவைப் பதியுமன்பால் சிந்தைவைத்துப் பூசித்த
தேவைப் பதிகாக்கும் செல்வத்தாய் - மாவளஞ்சேர்
வாசமலர் மாதைப்போல் வந்ததாய் சேதுமகா
ராசிமுத்து விராயி ராணிக்கும் - வாசமுள்ள
புத்திரசி ரோமணிஇப் பூமிமுழு தும்புரக்கும்
சத்ரபதி எங்கள்சிவ சாமிமன்னன் - முத்தளந்து 150

---

143. மிக்கோர்பாசனத்தான்: மேன்மக்களை ஆதரிப்பவன். அரியாசனத்தான்: சிம்மம் சுமந்த ஆசனத்தை உடையவன். இதவசனத்தான்: இனிய பேச்சினன்.

145. மேதினி: உலகம். முத்து விஜய ரகுநாத சேதுபதி: பாடல் தலைவனின் தந்தை.

146. அஞ்சல்: பயப்படாதே. அன்புத்தாய்: அன்புவடிவமான தாய்.

147, 148. பொன் மங்கைத் தேவைப்பதி: திருமால் ஆகிய இராமன். இரண்டாவது தேவைப்பதி: இராமேசுவரம். மா வளம் சேர்: பெரிய வளம் பொருந்திய.

149. 150. வாச மலர் மாது: மணத் தாமரை வாழும் திருமாமகள். சேதுமகாராசி முத்து விராயி ராணி: பாடல் தலைவனின் அருமைத்தாய். 146 முதல் நான்கு கண்ணிகள் கூறுவதும் அவர் தம் புகழையே. சத்ரபதி: வாள் வீரன். சிவசாமி மன்னன்: பாடல் தலைவன் பெயர்.

வங்கரங்கர் கொங்கர் மலையாளர் யாழ்ப்பாணர்
சிங்களவி ராடர் திறைகுவிக்கச் - செங்கைகொண்டு 151
வங்காள மன்னர் வணங்கக் கொலுவிருக்கும்
சிங்காச னாதிபதி சேதுபதி - பொங்குமறு
நிதிபதி கோடி நிதிபதிமுத் துச்செல்லச்
சேது பதிக்குத் திருமருகன் - ஓதுதமிழ்
வித்தைக் ககத்தியனை வில்லுக் கருச்சுனனைச்
சித்த சனைவால சிவகனை - மொய்த்த
கன்னனைக் குபேரனைமார்க் கண்டனைமெய்ஞ் ஞான
சனகனைச்சற் கீர்த்திதனைத் தானை - இனியமொழிச் 155
சத்தியவான் மால்ராம சாமிமகா ராசனைத்தான்
மைத்துனனென் றேயழைக்கும் மானபரன் - சித்தமிசை
ஆதரவாய்ப் பாண்டவரை ஆண்ட விஜயரகு
நாதசிவ சாமி நராதிபதி - ஓதுபுகழ்
பாடியகற் றோர்க்குபய பல்லக்குத் தந்துபுகழ்
தேடும் சிவசாமி சேதுபதி - நீடுகவி
ஆழ்ந்த பெரியோர்க் கநுகூலன் கற்றுமனம்
தேர்ந்தோன் சிவசாமி சேதுபதி - வாய்ந்தவெற்றி
வில்விஜயன் ராணிமுத்து வீராயி நாச்சியார்
செல்வன் சிவசாமி சேதுபதி - நல்லமலர் 160
எட்டுக்குப் போலுலகம் ஈரேழும் கீர்த்திநிலை
நாட்டும் சிவசாமி ராஜேந்திரன் - வேட்டணியும் 161

---

151. வங்கர்: வங்காளத்தார். அங்கர்: அங்க நாட்டார். கொங்கர்: கொங்கு நாட்டினர்.

153. கோடி நிதிபதி: கோடி பொருளுக்குத் தலைவன். முத்துச் செல்லத் தேவர் சேதுபதி என்பார்க்கு மருமகன்.

154. சித்தசன்: மன்மதன்.

158. உபய பல்லக்கு :

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

அம்புலிவே ணிப்பெருமான் அம்புயத்தாளைத்துணையாய்
நம்பும் சிவசாமி ராஜேந்த்ரன் - வம்பர்நிலை 162
நாட்டான்தென் பாண்டிவள நாட்டான் உயர்ந்தசெம்பி
நாட்டான் சிவசாமி ராஜேந்த்ரன் - தோட்டுமலர்
மாமானுக் காக வனமான்மேல் வாளிதொட்ட
பூமான் சிவசாமி பூபாலன் - மாமணத்தை
வேட்டரசர் முன்னே மிதிலா புரிச்சிலைநாண்
பூட்டும் சிவசாமி பூபாலன் - நாட்டம்வைத்துத் 165
தேசமெங்கும் செங்கோல் செலுத்தும் மகராஜ
போசன் சிவசாமி பூபாலன் - காசினியில்
ஐந்துதரு வைப்போல் அளகைக்கு பேரனைப்போல்
வந்த சிவசாமி மார்க்கண்டன் - முந்து மங்கை
ஈசன் உதவுமுரு கேசன்மேல் பத்திவிசு
வாசன் சிவசாமி மார்க்கண்டன் - ஆசையாய்த்
தெள்ளமுதும் பாற்குழம்பும் சீனியுங்கற் றோர்க்குதவு
வள்ளல் சிவசாமி மார்க்கண்டன் - விள்ளுபுகழ்த்
தென்முகவை யூர்தழைக்கத் தேவைப் பதிதழைக்கத்
தன்மநெறி என்றும் தழைத்தோங்க - நன்னலமெய்ஞ் 170

---

162. அம்புலி வேணிப்பெருமான்: திங்கள் அணி சடைச் சிவனர். அம்புயத் தாள்: தாமரையை ஒத்த திருவடி. துணை: பற்றுக்கோடு.

163. செம்பிநாடு: சேதுநாடு.

163, 164. தோட்டு மலர் மா மான்: இதழ் விரி கின்ற தாமரையில் உறையும் இலக்குமிப் பெண்; சீதை. வனமான்: காட்டில் வந்த மாயமான். வாளி: கணை.

165. வேட்டு: விரும்பி. மிதிலாபுரி: ஜனகனின் மிதிலையூர். சிலை: வில். நாண்: வில்லில் பூட்டும் கயிறு.

166. காசினி: உலகம்.

167. ஐந்து தருவைப்போன்ற கொடையும் அளகைக் குபேரனைப் போன்ற செல்வமும் உடையான்.

169. பால் குழம்பு: பாசந்தி.

170. முகவை: இராமநாதபுரம். தேவை: இராமேஸ்வரம்.

ஞானந் தழைக்க நலந்தழைக்க, நாளுமன்ன
தானம் தழைக்கத் தவந்தழைக்க - மாநிலத்தில் 171
பொய்யென் றுரைப்பதெல்லாம் பூவையர்கள் சிற்றிடையின்
ஐயமன்றி மெய்யுலகை ஆதரிக்க - வையகத்தோர்
எத்தனைபேர் வந்தாலும் இன்னும்வரு வார்வழிபார்த்து
அத்தனைபே ருக்குமமு தம்படைத்து - முத்தலமும்
சித்தம் களிகூரத் தென்முகவை மேவுமன்ன
சத்திரம்நாள் தோறும் தழைத்தோங்க - இத்தலத்தில்
பொன் முகம்போல் பூத்தகஞ்சப் போதுவளர் மாமாது
தன்முகம்போல் செல்வம் தழைத்திருக்கும்- தென்முகவை 175
வாவிக்குத் தென்கரையில் வாழ்விசுவ நாதருக்கும்
தேவிக்கும் பூஜை தினந்தழைக்க - சேவிக்கும்
தேவர் பணியும் திருப்பணியும் உண்டாக
மூவர் திருவருளும் முன்னிற்க - மேவுமநு
நீதம் தழைக்கச்செந் நெற்பயிரெ லாந்தழைக்க
மாதமும் மாரி மழைபொழிய - மேதினியாள்
நாதன் விஜயரகு நாத சிவசாமி
சேதுபதி செங்கோல் செலுத்துநாள் - ஓதுதிரு 179

---

173. முத்தலம்: கீழ் உலகு, இவ் உலகு, மேல் உலகு.

175. கஞ்சப்போது: தாமரைப்பூ.

176. வாவி: தடாகம்.

177. மூவர்: பிர்மா, விஷ்ணு, ருத்திரன்.

178. நீதம்: நீதி. மேதினி: உலகம்.

179. செலுத்துநாள்: செலுத்துகின்ற காலத்து.

அவதானி பிறப்பு முதலியன

ஆடானை நன்னகரில் ஆதிரத்னம் ஐயனெனும்
தாடாளன் செய்த தவத்துதித்தேன் - நாடுவயது 180

எல்லையோர் ஐந்தில் எனது மனந்திருந்தக்
கல்விச்சா லைக்குள்வைத்துக் கற்பித்தார் - செல்வயது

பன்னிரண்டி லேதெலுங்கும் பைந்தமிழும் ஆரியமும்
கன்னடமும் கற்றுக் கவிபாடிச் - சொன்னவிறைச்

சொல்லத் திரைமறைவில் சூதுவிளை யாடிவரக்
கல்லுநெல்லும் எண்ணிக் கணக்குரைக்க - வெல்லக்

கரும்பு ருசிவெண் கலவோசை யாரும்
விரும்பும் படியே விளம்பப் - பெருஞ்சபையில்

வைத்தசது ரங்கம் மறைவில்விளை யாடிவரச்
சித்திரத்தைத் திட்டியகைச் சிட்டாட - முத்தமிழோர் 185

காட்டுமொழிக் கெல்லாம் கணம்உரைகள் காணஇசை
கூட்டுமுன்னே ராகக் குறிப்புரைக்கப் -
பாட்டுரைப்போர்க்கு

இங்கிதப்ர சங்கம் இசைக்கக் கைலாட
சங்கிலியும் கோவைசெய்து தான்கழற்றர் - சிங்கார

விந்தைக் குதிரையடி வெண்பாச் சொலக்கணித
பந்தனத்தில் சொன்னதொகை பார்த்தடைக்கப் -
பைந்தமிழோர் 188

179, 180. திரு ஆடானை : திருவாடானை என்னும் பாடல் பெற்ற பாண்டி பதினென்கு ஊர்களுள் ஒரு ஊர். தாடாளன் : பெருமையில் சிறந்தோன். ஆதிரத்னம் ஐயன் : அவதானியின் தந்தை பெயர்.

182. முதல் *190* முடியச் சோடசவதானம் சொல்லப் படுகிறது. சோடச அவதானம் : பதினாறு வகைச் செயல்கள்.

அவை வருமாறு :

1. விறைக்கு விடையிறுத்தல்.
2. சொற்கேட்டான் ஆடுதல்.

மெச்சும் படியேவாய் வேலுமயில் என்றுரைக்க
அச்சரவ தானம்அவ தானிக்கப் - பச்சமுள்ள 189
பாடலெழுத் தாணிபதி னாறுக்கும் பாட்டுரைக்கும்
சோடசவ தானியென்று தோன்றினேன் - நீடுதிரு 190

திருமணமும் பிறவும்

மாலிருக்கும் புல்லாணி மங்களையன் பெற்றெடுத்த
சேலிருக்கும் கண்ணுளைத் தேமொழியைக் - கோலத்
துணைமாலை என்னுமொரு தோகை மயிலை
மணமாலை இட்டுநான் வாழ்ந்தேன் - இணைபிரியா 192

---

3. கல்லும் நெல்லும் எண்ணிக் கணக்குச்சொல்தல்.
4. கரும்பு ருசி கூறல்.
5. வெண்கல ஓசை விளம்பல்.
6. சதுரங்கம் ஆடல்.
7. சீட்டாடுதல்.
8. கேட்கும் பாட்டுக்கு உரை கூறல்.
9. இசைக் குறிப்புச் சொல்தல்
10. விரிவுரை நிகழ்த்தல்.
11. லாட சங்கிலி கோத்தல் - கழற்றல்.
12. குதிரையடி வெண்பாக் கூறல்.
13. கணித பந்தனம் அடைத்தல்.
14. வாயினால் வேலுமயில் என்று விளம்பிக் கொண்டிருத்தல்.
15. எழுத்துக் கூட்டிச் சேர்த்தல்.
16. பதினாறு எழுத்தாளர்க்குப் பாட்டுச் சொல்லல்.

191. அவதானி வேட்டகம் உடைய ஊர் திருப்புல்லாணி. மாமனார் பெயர் மங்களையன். சேல்: மீன். தேமொழி: தேன் போன்ற சொல்லினாள். கோலம்: அழகு.

192. துணைமாலை: சோடசவதானி மனைவியின் பெயர்.

ஓர்நாள் திருவுத் தரகோச மங்கையிலே
தேர்நாள்என் றூரத் திருநாட்கு - நேராகச் 193
சென்றேன் ஒருவன் சிறுபயலென் கூடவந்தான்
அன்றே ஒருவே சையைக்கலந்தேன் - நன்றாகக்
காணிக்கை கொண்டுவந்த கட்டி வராகனெலாம்
மாணிக்கத் தாட்கு வழங்கினேன் - பேணி 195
உதயா தியிலெழுந்தேன் ஊர்க்குவந்தேன் தம்பி
இதையார்க்கும் சொல்லாதே என்றேன் - சதிராக
வையாற்றுத் தண்ணீரில் வந்துசந்தி பண்ணினேன்
பொய்யாலே கெட்டமுழுப் போக்கறுவான் - பையமுன்னே
போனான் மனைவியிடம் புன்சிரிப்பா கச்சிரித்தான்
தேனாள் விசேடமுண்டோ செப்பென்றாள் - மானேயுன்
ஐயரையே அல்லால் அதிசயமுண் டோவேசைத்
தையலையே கூடித் தழுவினார் - பையவெளித்
திண்ணையில்இ ராமுழுதும் தெய்வமே என்றுநான்
கண்ணுறக்கம் இல்லாமல் காத்திருந்தேன் - பெண்ணழகி
பொன்னேறு பூண்முலைக்குப் பூசையல்லால் நம்மளம்மன்
பொன்னேறு பூண்முலைக்குப் பூசையில்லை - கன்னியல்குல்

---

193. உத்தரகோசமங்கை: திருவாசகம் அருளிய மணிவாசகனாரால், "மாதாளும்பாகத்தன் வாழ்பதி," "பத்தரெலாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும் உத்தரகோசமங்கை ஊர்" என்று பெரிதும் பாராட்டப் பெற்ற இராமநாதபுரத்துக்குச் சமீபத்திலேயுள்ள, சேது மன்னர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓர் ஊர்.

195. மாணிக்கத்தாள்: அவ்வேசை.

196. சதிர்: ஒழுங்கு.

197. வையாறு: வைகைநதி. சந்தி: சந்தியாவந்தனம்.

200. பெண் அழகி: சண்டுத் தாசி.

201. பொன் பூண் ஏறு முலை: தங்கம் ஏறிய ஸ்தனம்.

தேரோட்டம் கண்டுதெரி சித்ததல்லால் சாமிதிருத்
தேரோட்டம் கண்டுதெரி சித்தறியார் - நாரிமுலைக் 202
கும்ப தெரிசனமே கொண்டதல்லால் கோவிலடிக்
கம்ப தெரிசனமே கண்டறியார் - சம்பிமுகம்
வாடியுத யாதியிலே வந்தார்பிர யாணமென்றார்
நாடியுமை விட்டிரேன் நானென்றாள் - தேடியிங்கு
நாளையே வாரமென்றார் நல்லதுபோய் வாருமென்றாள்
மீள இதோ வாரார்நான் விட்டுவந்தேன் - ஆளழகா! 205
இந்த ரகசியத்தை யார்க்குமுரை யாதேயென்று
அந்தரங்கம் சொன்னார் அவரென்று - வந்ததெல்லாம்
கண்டித்துச் சொல்லிமனைக் கன்னிமனம் வெருக்கி
வண்டப் பயலும்வைச்சு வாங்கினான் - பெண்டி
கொடுகொடுப்பை வந்துகண்டு கொண்டேன் முகத்தில்
கடுகடுப்பையுங்கூடக் கண்டேன் - இடுசோற்றில்
வெஞ்சினத்தை நான்காணேன் வீட்டுக்கும் வாசலுக்கும்
வெஞ்சினத்தைக் கண்டுநான் மெய்மறந்தேன் -
வஞ்சிகிட்டப்
போனேன் வெறுமனே போஎனைநீ தீண்டாதே
சீநீயுன் தாசியிடம் செல்லென்றாள் - ஏனென் 210
உறவேதெனக்கும் உனக்குமினி என்று
பறைபோல் அலறிப் பகர்ந்தாள் - இறைவனோடு
ஏறுமா றான மனையாளும் இம்மூன்றும்
நீறுநீ றாகிவிடும் என்றசொல்லைத் - தேறிமனம் 212

---

202. நாரி : பெண்.

203. கும்பம் : குடம். கோவிலடிக் கம்பம் : கொடிமரம்; த்வஜஸ்தம்பம்.

207. மனைக்கன்னி : மனையாள்.

209. 1. வெஞ்சினம் : காய்கறி. 2. வெஞ்சினம் : கொடும் கோபம். வஞ்சி : பெண்.

211. பறைபோல் : தப்பு அடிப்பதுபோல்

212. தேறி : தெளிந்து.

அவதானி யாத்திரை

தானே வெறுத்துத் தலங்களெல்லாம் போய்ப்பணிந்து
ஞானோ தயம்பெறுவோம் நாமென்று - மேல்கிரம்பும் 213
மாமணியும் ஆபரண வர்க்கமும்செம் பொன்முடிப்பும்
தாமெடுத்தி ராநடுவில் தப்பினேன் - காமவி
காரத்தை நீக்கிக் கதிபெறுவோம் என்றுவரு
நேரத்தைச் சற்றும் நினையாமல் - சீர்பெற்ற 215
நாரியொரு பாகனுக்கந் நாளொருவே ளாளன்முளை
வாரியமு திட்ட மணிநகரும் - காரணமாய்ப்
பொய்ப்பிள்ளை யாயிருந்த பொற்பிள்ளை பாண்டியற்கு
மெய்ப்பிள்ளை யான வியனகரும் - எப்புகழும்
சூடும் இரணியனூர் துன்பத்துக் காஇமையோர்
கூடியளப் பிட்டிருந்த கோநகரும் - கோடி
விஷவாள் அரவணிந்தோன் வேசைஒருத் திக்கு
ரசவாதம் சொன்ன நகரும் - அசுரர்பகை 219

---

214. மாமணி: பெரிய ரத்தினக் கற்கள். ஆபரண வர்க்கம்: நகை வகை. இரா நடு: நள்ளிரவு.

215. கதி: நல்நிலை.

216. நாரி ஒரு பாகன்: உமை ஒரு கூறு உடைய சிவபெருமான். அந்நாள்: அந்தக்காலத்து. முளை: விதை. வாரி: அள்ளி. வேளாளன்: இளையான்குடி மாறநாயனார். மணிநகர்: இளையான்குடி.

217. வியன் நகர்: காளையார்கோவில் என்று வழங்கப்பெறும் கானப்பேரூர். இவ்வூரில் பாண்டியனுக்காகப் பொய்ப்பிள்ளையாக இருந்த பொற்பிள்ளை மெய்ப்பிள்ளை யானதாகக் கூறப்படுகிறது.

218. இரணியன் செய்துன்பம் தவிர்க்கத் தேவர் கூடி ஆலோசித்த வூர், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருக்கோஷ்டியூர் என்பர்.

219. பொன்னனையாள் என்னும் தாசியின் பொருட்டுக் கடவுள் ரசவாதம் செய்ததாகக் கூறப்படும் திருப்பூவணம் என்க.

வென்றுவச்ர பாணிபெற்ற வேழத்தை வேற்பெருமான்
மன்றல் முடித்த வளம்பதியும் - அன்றுதிர்ந்தது 220
ஒட்டுக்காய் தாவென்று உமைபாகன் அன்றொருநாள்
பிட்டுக்காய் மண்சுமந்த பேரூரும் - கட்டளையாய்
மைப்புயல்போல் வண்ணன் வருடத்தி லேயொருநாள்
சப்பரத்தில் ஏறும் தனிமலையும் - பொற்பாவை
மேவுமணி மார்பனொரு வீடணன்கைப் பெட்டகத்தில்
தாவி இருந்த தடம்பதியும் - பூவுலகும்
தேவரும் அஞ்சச் சிதம்பரத்தான் தாணையத்தார்
மூவரில்பின் ஒன்றழைத்த மூதூரும் - மேவுமுகில்
விண்மாரி என்னவொரு மென்சிவந்திப் பூவுக்கா
மண்மாரி பெய்த மணிநகரும் - அண்ணலெதிர் 225
ஆனவடி வப்பிரமன் அன்னவடி வாய்த்திருமால்
ஏனவடி வான எழில்நகரும் - மேன்மைநுதல் 226

---

220. வச்ரபாணி: தேவேந்திரன். அவன் பெற்ற வேழம், தெய்வ யானை யென்னும் அணங்கு; அந் நங்கையை வேல் பெருமானாகிய முருகன் மணம் புணர்ந்த பதி, திருப்பரங்குன்றம் என்பர்.

221. பிட்டுக்காய் மண் சுமந்த பேரூர், மதுரைமா நகரம்.

222. மைப்புயல்போல் வண்ணன்: திருமால். சப்பரத்தில் ஏறும் தனிமலை: அழகர் மலை யென்னும் திருமால் இருஞ்சோலை மலை.

223. பொற்பாவை மேவும் மணி மார்பன்: திருமால். வீடணன்: விபீஷணன். தாவியிருந்த தடம்பதி: திருவரங்கம் என்னும் ஸ்ரீரங்கம்.

226. பிரமன் அன்னவடிவம் எடுத்துச் சிவபெருமான் முடி காண்பதற்கு மேலே பறக்கவும், திருமால் அடி காண்பதற்குப் பன்றி யுருவாகிப் பூமியைக் கிறவும் காண முடியாமல் பரமசிவனார் நீண்ட இடம் திருவண்ணாமலை யென்று கூறுவர்.

கண்ணுடையான் தன்னுடைய கைப்பாத்தி ரங்காட்டி
மண்ணுடையா னைக்காத்த மாநகரும் - எண்ணுமனத் 227
திண்டாட்ட மாகச் சிவனார் ஒருவணிகன்
பெண்டாட்டி யைக்கேட்ட பேரூரும் - பண்டொருநாள்
வள்ளையுண்ட காதிமய மங்கைமுலைப் பாலையொரு
பிள்ளையுண்டு மேன்மைபெற்ற பேரூரும் - கள்ளூறும்
எண்ணிக்கை மாங்கனியை ஈசனரு ளாலழைத்த
பெண்ணிருந்து வாழ்ந்த பெரும்பதியும் - வண்ணவளை 230
துன்று திரைக்கடலைத் தொட்டார் பொருட்டாக
அன்றுவந்த கங்கை அணிநகரும் - சென்றுதிரைக்
கங்கையுடை யான்வணங்கக் கங்கையுடை யான்வணங்கும்
கங்கைநதி ஆடிக் கரையேறி - அங்கிருந்த 232

---

227. கண்ணுடையான் : நெற்றிக் கண் படைத்த சிவபெருமான். கைப்பாத்திரம் : திருஓடு. மண்ணுடையான் : திருநீலகண்ட நாயனார். அந்தமாநகர் : சிதம்பரம் ஆகிய தில்லை மூதூர்.

228. வணிகன் : இயற்பகை நாயனார். சிவனார் அவ் வணிகன் பெண்டாட்டியைக் கேட்ட பேரூர், புகார் நகரம் என்னும் காவிரிப்பூம் பட்டினம்.

229. வள்ளை : கொடிவகை. இமயமங்கை : பருவத ராஜன் மகளாகிய பார்வதி. அவள் முலைப்பாலை உண்டு மேன்மை பெற்ற பிள்ளை, திருஞான சம்பந்தர். அந் நிகழ்ச்சி நடந்த ஊர் சீகாழி. கள் : தேன்.

230. மாங்கனியை ஈசன் அருளால் அழைத்த பெண், புனிதவதியார் என்னும் காரைக்காலம்மை. அவர் வாழ்ந்த பெரும்பதி, காரைக்கால். வண்ணவளை : அழகிய சங்கு.

231. துன்று : பொருந்திய. திரை : அலை. தொட்டார் : தோண்டியவர். கங்கை அணி நகர் : காசிப்பதி.

232. கங்கையுடையான் : கங்கை சூழ் நாட்டான். கம் - கை உடையான் : நீரைக் கைக் கமண்டலத்திலே உடைய பிர்மா.

செப்பரிய சங்கமுக தீர்த்தமா டிச்சினக்
கப்பலிலே ஏறிக் கடல்வழியாய்ச் - செப்புதமிழ்ப் 233
பாமதுரம் பாடிப் பதின்மூன்று நாளையிலே
ராமே சுரத்துக்கு நான்வந்தேன் - சோமனணி
தாணுவையும் போற்றித் தநுக்கோடி நீராடித்
தோணிவழி பாம்பன் துறைகடந்தேன் - தூணிமதன் 235
வில்லாணி முத்துமதன் வெள்ளைமுத்தும் மேவுதிருப்
புல்லாணி மால்பதத்தைப் போற்றிசெய்தேன் -
சொல்வளஞ்சேர்
செல்வ முதுகுளத்தூர்ச் செவ்வேளைப் போற்றியங்கு
கல்வியுடை யோர்கள்சிநே கம்பெற்றேன் - நல்வழியாய்
ஆழ்வார் திருநகரி ஆண்டாரைப் பூஜித்தேன்
வேள்வாழ் திருச்செந்தூர் மேவினேன் - நீளசுரக்
குன்றெறிந்த வேலவரைக் கும்பிட்டுத் தென்புறம்போய்
நின்றுகன்னி யாகுமரி நீராடிச் - சென்றுமனப்
பற்றுக வேநடந்து பாபநா சம்பணிந்து
குற்றால நாதரையும் கும்பிட்டேன் - கற்றோர்வாழ் 240

---

233. சங்கமுகம்; நதிகடலொடு கலக்கும் இடம். ஈண்டுக் கங்கா சாகரம் எனக் கொள்க.

234. பாமதுரம்பாடி என்பதை மதுரப் பாபாடி என மாற்றுக. சோமன்: சந்திரன்.

235. தாணு: சிவபெருமான். தூணி: அம்பறாத் தூணி. மதன்: மன்மதன்.

236. வில்: கரும்பு வில். வில் ஆணிமுத்து. கரும்பு தரும் முத்து. மதன் வெள்ளை முத்து: மன்மதன் அம்புகளாகிய வெண்மலர் முத்து.

237. செவ்வேள்: முருகன்.

238. ஆழ்வார் திருநகரியாண்டார்; நம்மாழ்வார்; அன்றி, திருமாலும் ஆம். வேள்: கந்தன்.

முல்லையப்ப னுலே முளைத்த பரஞ்சோதி
நெல்லையப்பர் தாள்பணிந்து நேசித்தேன்-தொல்லைக் 241
கருச்சுழியை நீக்கும் கழுகுமலை போற்றித்
திருச்சுழிகை யூர்க்குவந்து சேர்ந்தேன் - பருப்பதவில்
கையவனைப் போற்றிக் கனிந்து முதுகுளத்தூர்
ஐயன்முரு கையனைமை ஆண்டபிரான் - செய்யமலர்ப்

வேதமையன் நட்பு

பாதம் பணிசெய்தேன் பத்துநாள் அங்கிருந்தேன்
வேதமையன் நட்பை விரும்பினேன் - ஆதிமறை
ஓதும் திருமருதூர் உட்சேபம் கண்டுவர
மாதவரே நீர்கூட வாருமென்றேன் - ஏதுகாண் ! 245
திர்க்க விசாரணைநீர் செய்யவில்லை யோபுகார்
ஊர்க்குள்ளே செட்டியொரு கோவலன் - பாக்யமுள்ள
கண்ணகியாள் சொல்லைக் கடந்தொருவே சைகைக்குள்
பொன்னையெலாம் தோற்றுப் புலையாடிப் - பின்னுமவன்
பேரிழந்து பேதைதலை வெட்டுண்டு விழ்ந்தான் இப்
பாரிலவன் நாடகத்தைப் பார்க்கலையோ?-நீர்சென்ருல் 248

---

241. நெல்லையப்பர்: திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பெயர்.

242. கருச் சுழி: கருவில் சுற்றுதல். திருச்சுழிகை: பாண்டி பதினுன்கில் ஒன்று. பருப்பதம்: மலை.

244. ஆதிமறை: பழமையான வேதம்.

245. உட்சேபம்: ஊர் நடப்பு. மா தவர்: பெரிய தவத்தையுடையவர்.

246. புகார்: காவிரிப்பூம்பட்டினம்.

247. வேசை: மாதவி.

248. வெட்டுண்டு: கொலைக்களப் பட்டு. நாடகம்: கோவலன் நாடகம்.

மோகன முத்தின் பிறப்பு

ஊதியத்தைக் கேளுமந்த ஊர்க்கோவில் தாசிகளில்
கோதையொரு பொல்லாக் குடிகேடி - மாதவள்பேர் 249

செங்கமல வல்லி திருகுதா ளக்காரி
மங்கைவெகு நாளாய் மலடிருந்து - செங்கிடாய் 250

ஐயனுக்கு வெட்டியப்பால் அம்மனுக்குப் பொங்கலிட்டுச்
செய்யவடி வேலவற்குத் தெண்டனிட்டுத் - துய்யவெள்ளி

எண்ணி விரதமிருந் தீசர்க் கபிடேகம்
பண்ணியபின் ஏழாம் பருவத்தில் - வண்ணவண்ண

மாப்பிள்ளைமார் கைவலுவால் மாப்பழுக்கும் நாளையிலே
பூப்பதுபோல் கர்ப்பம் பொருந்தினள் - வாய்ப்பாகப்

பள்ளத்தில் பஞ்சிட்டுப் பாரம் எழுந்ததுபோல்
வெள்ளையமுக் குப்போல் மிகுந்திட்டாள் - அள்ளியுண்ட

எல்லாம் குமட்டிமசக் கேறி இடைசிறுத்து
மெல்லமெல்லக் கண்குழிந்து மேல்பசந்து - பல்விளர்ந்து

சித்தம் மருண்டாளென் சேதுபதி மால்யானை
மத்தகத்தைப் போல வயிறுளள் - பத்தாகும்

மாத்தையிலே நாகபட வாய்வழியே ரத்னமணி
பூத்ததுபோல் பெற்றுளோர் பொற்கொடியைப் -
பார்த்தவர்கள் 257

249, ஊதியம்: பயன். கோதை; மாலையை அணிந்த மங்கை. குடிகேடி: குடிகெடுப்பவள்.

250. மலடு இருந்து: பிள்ளைப்பேறு இல்லாதிருந்து.

255. குமட்டி: வாந்தியெடுத்து. மசக்கு ஏறி: மசக்கைபெற்று. கண் குழிந்து: கண்கள் உள்ளே போய். மேல் பசந்து: உடம்பு நிறம் பசலையாகி. பல் விளர்ந்து: பல் வெளுத்து.

ஆண்பிள்ளை யேளன்ருர் அப்போதே வேசையிது
விண்பிள்ளையே இல்லையென்று மீண்டெழுந்தாள் -
சேண்புவியில் 258
மிச்சயாய்ச் செம்பொன் விளையும் ரசவாதப்
பச்சிலையி தென்று பரிந்தெடுத்தாள் - முச்சகத்தில்

மோகனமுத்தின் வளர்ப்பு

கோதையிவள் காமக் குளிராட்ட வந்தவளென்று
ஆதரவாய் மஞ்சள்நீர் ஆட்டினுள் - சாதிநாம் 260
ஈரமில்லாச் சாதிநமக் கிரமேன் என்றுடம்பில்
ஈரமில்லா மல்துவட்டி ஏந்தினுள் - காருடக்
கத்தரிப்பும் சூதும் கவடும் பகடமும்
தித்திரிப்பும் திட்டாந் திரத்தொழிலும் - சித்தத்தைப்
பங்கப் படுத்திவைக்கும் பாசாங்கும் வஞ்சமும்பொய்
யுங்கலந்து சேனைப்பால் ஊட்டினுள் - "எங்கருணைக்
கண்ணே! என் கண்மணியே! காம ரசக்கரும்பே!
பெண்ணே! யான் பெற்ற பெரும்பேறே! - வண்ணக் 264

---

258. வேசையர்க்கு ஆண்பிள்ளையால் பயனில்லை யாகலின் ஆண்பிள்ளை விண்பிள்ளை யென்று கூறுகின்ருர்; தாசி செங்கமல வல்லியின் கூற்றுக. ஆண் பிள்ளை யில்லை; பெண்தான் என்றறிந்தவுடன் ஒரு ஆரவார எழுச்சி.

259. செம்மைப் பொன்னுக்கும் பச்சிலை இது என்று விருப்பத்தோடு பெற்ற பெண்ணை எடுத்து இன்புற்ருள்.

260. எல்லோரையும் இவள் காமக் குளிரிலே ஆட்டவல்லவள் என்று அன்போடு மஞ்சள் நீர் ஆட்டினுள்.

261. ஈரம்: இரக்கம். நமக்கு ஈரம் எதற்கு என உடம்பில் ஈரமில்லாமல் துடைத்து எடுத்தாள்.

263. சேனைப்பால்: குழந்தைக்குப் பிறந்தவுடன் ஊட்டும் பால்.

குயிலே! மரகதமே! கோமளமே! பச்சை
மயிலே!'' எனத்துடைமேல் வைத்தாள் - ஒயிலாக 265
ஒற்றைப் பிறைவயிற்றில் உண்டான முப்பிறைபோல்
நெற்றிக் கழகாய்வெண் ணீறணிந்தாள் - முற்றமயல்
பூட்டிவந்த வாலிபர்கைப் பொன்னையெல்லாம் வாங்கக்கை
திட்டென்று சிந்தூரம் தீட்டினாள் - ஆட்டிவைக்கும்
மால்விழிக்கும் போதெல்லாம் வாலிபருக் குண்டாக்கும்
சேல்விழிக்கும் அஞ்சனத்தைத் தீட்டினாள் - மேலுலவு
வன்னப் புதுமதியில் வந்தகளங் கம்போல
கன்னத்தின் ஊடே கறுப்பிட்டாள் - மின்னாசை
மாற்றுவார் தங்களுக்கும் வாலிபர்க்கும் பேராசை
ஏற்றுவாய் என்றுதொட்டில் ஏற்றினாள் - போற்றியுனைச்
சேராரார் கண்டாசை தீராரார் பொன்னையள்ளித்
தாராரார் என்றுதா ராட்டினாள் - ஆராய்ந்து
கொற்றவர்கைப் பொன்னையெல்லாம் கொள்ளையடித்
தவ்வளவும்
சுற்றென்று திட்டிகையால் சுற்றினாள் - உற்றிளைஞர் 272

---

266. ஒற்றைப்பிறை போன்ற நெற்றியில் உதித்த மூன்று பிறைகளைப் போல அழகாக மூன்று கோடு படத் திரு நீற்றை இட்டாள்.

267. கை திட்டு : கையைத் திட்டிவைத்துக்கொள். சிந்தூரம் : குங்குமம். தீட்டினாள் : அணிந்தாள்.

268. சேல் விழி : மீன் போன்ற கண். அஞ்சனம் : மை. மேல் உலவு : விண்ணில் இயங்குகின்ற.

269. வன்னம் : அழகு. களங்கம் : குற்றம். கன்னத்தில் நடுவே ஒரு கறுப்புப் புள்ளி வைத்தாள். அது முகமாகிய மதியில் உள்ள களங்கம் போல் காணப் பட்டது. மின் ஆசை : பெண்ணாசை.

270. மாற்றுவார் : மாற்றிவிட்டவர்.

272. கொற்றவர் : மன்னவர். சுற்று : எடுத்துக் கொள். உற்று : பொருந்தி. இளைஞர் : வாலிபர்.

தேட்டையெலாம் தந்து திரும்பவிருந் தால்வழியைக்
காட்டென்று வெண்ணிலவு காட்டினாள் - நாட்டகர் 273
குத்திப்பொன் அவ்வளவும் கொள்ளையடி என்றுசெவி
குத்திப்பொன் வாளி குலுக்கியிட்டாள் - சித்திரக்கை
வெட்டுவாள் மன்னவர்போல் வீட்டு முதலையெலாம்
கொட்டுவாய் என்றுவட்டில் கொட்டினாள் - இட்டமுடன்
தென்முகவை ஆளும் சிவசாமி சேதுபதி
தன்மம் வளர்ப்பதுபோல் தான்வளர்த்தாள் - மின்னாள்
அடியெடுத்தாள் காமுகர்பொன் அவ்வளவும் கொட்ட
அடியெடுத்தாள் கூன்கிழவெள் ளாட்டி - குடிலமாய்ப்
பார்க்குமிரு கண்மருட்டிப் பார்த்திட்டாள் அவ்வூரில்
யார்க்கும் புதுமுறையுண் டாக்கினாள் - தாய்க்கிழவி
சிற்றாடை இட்டாள் சிலம்பிட்டாள் பீலியிட்டாள்
பொற்றால வடமிட்டாள் பூச்சிட்டாள் - குற்றமிலா
வாப்பிட்ட மெய்யாட்கு மாரன் திருநாட்குக்
காப்பிட்டாப் போலேகைக் காப்பிட்டாள் - தோப்பிலுள்ள

---

273. தேட்டை: பொருள்.

276. தன்மம்: தருமம். தென்முகவையாளும் சிவசாமி சேதுபதியானவன் அறத்தை எப்படி வளர்க்கின்றானோ அப்படி மகள் மோகனமுத்தை வளர்த்தாள் செங்கமலவல்லி.

276, 277. மின்னாள் அடியெடுத்தாள்: மோகனமுத்து ஆகிய மின்னாள், அடி தூக்கி நடக்கத் தொடங்கினாள். அடியெடுத்தாள் கூன் இழ வெள்ளாட்டி: கூனல் கிழட்டுத்தாய் ஆரம்பித்து விட்டாள். குடிலம்: வஞ்சகம்.

279. சிலம்பு: நூபுரம். பீலி: மயில் இறகு. பொன் தால வடம்: பொன்னாலான தட்டை தட்டையாகச் செய்யப் பெற்ற ஒரு கோவை.

280. வாப்பு: கடைந்தெடுத்த. மாரன்: மன்மதன். காப்பிடுதல்: காப்புக் கட்டுதல்; அதாவது விழாத் தொடங்குதல். தோப்பு: சோலை.

வண்டையிட்ட கண்ணாட்கு வாரியிட்டாள் குப்பியிட்டாள்
தண்டையிட்டாள் சொர்ணச் சதங்கையிட்டாள் -
ஒண்டொடியை 281
மாகன மாலையெல்லாம் வாலிபர்க்கு நீகொடென்று
மோகன மாலையிட்டாள் முத்திட்டாள் - சேகரித்துக்
கொண்டுவந்து செம்பொன் கொடாதசிறு சண்டிகளைக்
கண்டியென்று மார்பிலொரு கண்டியிட்டாள் - உண்டாய்
வழியொன்றும் இல்லாமல் வந்தவர்க்குப் பைய
நெழியென்று தங்கநெழி இட்டாள் - அழகாய்
வரிகிடந்த கண்ணாட்கு வாலிபர்பொன் எல்லாம்
சரியிடென்று கூனிசரி இட்டாள் - அரிவையர்க்குத் 285
தக்கையிட்டாள் ஓலையிட்டாள் தங்கப் பதக்கமிட்டாள்
கைக்குவளை இட்டாள் கடகமிட்டாள் - சொற்கடங்கா
முத்துமூக் குத்தியிட்டாள் முப்புவியும் பெற்றவிலைக்
கொத்துமுரு கிட்டாள் கொலுசிட்டாள் - சித்திரக்கல்
மோதிரங் கையிலிட்டாள் மோகனமுத் தென்றுசொல்லிப்
பேதைக் குலகறியப் பேரிட்டாள் - ஆதரவாய்ச் 288

---

281. வண்டை இட்ட கண்ணாள் : வண்டுகளைப் பொருத்தியிருக்கின்ற கண்களையுடையாள். வாரி-குப்பி-தண்டை - சதங்கை இவை அணிகள். ஒள் தொடி : ஒளியுள்ள வளையல். இது ஆகுபெயராக அதனை அணிந்தாளை உணர்த்துகிறது.

282. மாகன மாலை யெல்லாம் : பெரிய கனமான மயக்கங்களை யெல்லாம்.

283. கண்டி 1 : கண்டிப்பாயாக. 2 : மார்பில் அணியும் ஓர் ஆபரணம்.

284. நெழி : 1 வளைந்து கொடு ; 2 ஒரு நகை.

285. வரி : ரேகை. சரியிடு : சரிக்கட்டிவிடு. சரி ஒரு அணி. அரிவை : பெண்.

செந்தமிழும் கன்னடமும் தேன்பாகு போல்தெலுங்கும்
சந்தநய மும்பரத சாத்திரமும் - அந்திரந்தி 289

மோகனமுத்தின் பருவக்குறி

நேர்த்தியா கப்படித்து நித்தம் சரஸ்வதிக்கும்
வாத்தியார் என்ன மகிமைபெற்றுள் - சாத்திரமும் 290
ஆரியமும் கற்றுள் அலங்கார மங்கையொரு
காரியத்தின் மேலும் கருத்தானுள் - பூராயம்
பேசுவதும் கொஞ்சம் பிலுக்குவதும் கிட்டவரக்
கூசுவதும் முத்துக் குலுக்குவதும் - வாசமலர்
சூடுவதும் விண்ணுரம் சொல்லுவதும் கானரசம்
பாடுவதும் கண்மருட்டிப் பார்ப்பதுவும் - ஆடவரைக்
கொண்டாடிக் கொள்ளுவதும் கூடிவிளை யாடுவதும்
கண்டாள் கிழவி களிகூர்ந்தாள் - மிண்டர்
குடியைமுழு துங்கெடுத்துக் கொள்ளையிடும் மாயப்
பொடியை மகட்குரைத்துப் போட்டாள் - படியேறி 295
நல்ல திருநாளில் நாகலிங்கர் சந்நிதியில்
எல்லவரும் காணஅரங் கேற்றினுள் - வல்லுப்போல்
குண்டு மணிபோல் குரும்பைபோல் பம்பரம்போல்
செண்டுபோல் கொங்கை திமிரேறித் - தண்டித்து 297

---

289. சந்த நயம்: நயமான பதம். பரதசாத்திரம் - நடனக்கலை.

291. அலங்காரம்: அழகு. ஒரு காரியம்: அது தான் காம வலை வீச்சு. பூராயம்: விசித்திரப் பேச்சு.

294. களிகூர்ந்தாள்: மகிழ்ச்சி யடைந்தாள்.

296. நாகலிங்கர்: மருதூரில் வீற்றிருக்கும் சிவ பெருமான். அரங்கு ஏற்றுதல்: யாவரும் அறிய அவையிலே ஏற்றி விளம்பரப் படுத்துதல். வல்: சொற்கேட் டானில் ஆடும் சிமிள் போன்ற காய்.

297. செண்டு: பூப்பந்து. கொங்கை: ஸ்தனம். திமிர் ஏறி: மத மதத்து. தண்டித்து: பெருத்து.

மானும் திரண்டாள்பின் வாலிபர்கள் வந்துவந்து
தானும் திரண்டார் தளந்தளமாய்த்-தேன்மொழியாள் 298
நீர்க்கமும்கா மப்பழக்கச் சித்திரமும் ஆடவர்மேல்
நோக்கமும் தாய்க்கிழவி நோக்கினள் - சேர்க்கையுள்ள

மோகன முத்துக்குப் போதிப்பு

பெண்ணை அருகிருத்திப் பேசிட்டு நான்பெற்ற
கண்ணே! யுன் புத்திக்குக் கண்ணுண்டே - வண்ணமணி
வல்லார் தனத்து மயிலே! குலவித்தை
கல்லாமல் பாதிவரும் கண்டாயே - அல்லவடி
பட்டத்துப் பெண்ணே! பலாப்பழத்துக் கீப்பிடித்து
விட்டபேர் உண்டோ விளம்புவாய் - கட்டாகப்
பார்விளக்கில் பற்றவைத்த பந்தம்நீ யானாலும்
தார்குழலே என்புத்தி சற்றேகேள்! - நேராக
என்னை மறந்தாலும் எங்கோன் சிவசாமி
மன்னவன்மேல் கோவை மறவாதே - எந்நாளும்
பாலை பழுக்குமோ? பாற்சோறு கிட்டுமோ?
காலத்து வேளாண்மை கைப்பலனே - மேலான 305

---

298. மானும் திரண்டாள்: மோகனமுத்து மானும் பருவம் அடைந்தாள். தளம் தளமாய்: கூட்டம் கூட்டமாய். தேன் மொழியாள்: தேன் அனைய சொல்லினள்.

299. நீர்க்கம்: முடிவு. காமப் பழக்கச் சித்திரம்: காமத்திலே பழகும் அழகு.

300. அருகு இருத்தி: பக்கத்திலே வைத்து. பேச்சிட்டு: பேசி. வண்ணமணி: அழகிய ரத்தினம்.

301. வல் ஆர் தனம்: சூதாடு காய் ஒத்த ஸ்தனம்.

303. பார் விளக்கு: பெரிய விளக்கு. தார் குழல்: மாலையணிந்த கூந்தல்.

305. பாலை எந்நாளும் பழுக்காது; பால் சோறு எப்பொழுதும் கிடைக்காது; சமயத்தைத் தவற விடக் கூடாது.

செட்டிக் கொருதட்டுச் சேவக னுக்குமொரு
வெட்டுனக்கிப் போதொருவி யாழவட்டம் - கட்டுவிட்டே
ஊடுநரை கண்டுகன்ன மும்சுரித்தால் நம்மைவந்து
தேடிநிதி யார்கொடுப்பார் செல்வமே ! - விடு
பெருக்க வரும்நமக்குப் பேரா முதலைப்
பெருக்கவரு மோஅருமைப் பெண்ணே ! - ஒருத்தருனக்கு
ஆத்தே ! பணத்தை அளந்தளந்து தந்தாலும்
மாத்தைப் படியென்று வாங்காதே ! - நேர்த்தியாய்த்
தம்பலங்கள் தின்பதற்கும் தப்புமொழி சொல்வதற்கும்
சும்பனங்கள் செய்வதற்கும் சோம்பாதே!-வம்பிபெற்ற 310
சேயே ! பணங்கொடுக்கும் சீமான் களுக்குநம்மள்
வாயே படிக்கமடி வாணுதலே ! - ஓயாமல்
முக்கோடி செம்பொன் முகந்தளந்து தந்தாலும்
கொக்கோகம் பார்த்தவரைக் கூடாதே ! - கைக்கெதுவாய்
அண்டிப் பணம்கொடுத்தோர் ஆரொருவர் வந்தாலும்
பண்டுமுறை எவ்வளவும் பாராதே ! - கொண்டுவந்து
தாய்க்கீழாம் பிள்ளைபணம் தந்தணைந்த போதவர்க்கு
வாய்க்கீழ் வடுக்களிட வையாதே ! - பேய்மகளே ! 314

306. வியாழ வட்டம்: குரு சூரியனைச் சுற்றி வருகின்ற பன்னிரு ஆண்டுகள் கொண்ட ஒரு கால அளவு. கட்டு விட்டு : உடல் கட்டு விடுபட்டு.

307. ஊடு நரை கண்டு : அங்கங்கு நரைத்து. கன்னமும் சுரித்தால்: கன்னத்திலும் சுருக்கம் விழுந்தால்.

308. பருவகாலம் மாறிப் போனல் வீட்டைப் பெருக்கலாமே தவிரப் பணத்தைப் பெருக்க முடியாது.

310. தம்பலங்கள் : வெற்றிலை முதலியன. தப்பு மொழி : பொய். சோம்பாதே : சோம்பல் அடையாதே.

311. படிக்கம் : எச்சில் உமிழும் பண்டம். வாள் நுதல் : ஒளி பொருந்திய நெற்றி.

312. முகந்து : மொண்டு. கொக்கோகம் : காம லீலை கூறும் நூல். 314. வடு : அடையாளம்.

பத்துநவ கோடி பசும்பொன் கொடுத்தணைந்த
சுத்தருக்கும் உள்ளவர்மம் சொல்லாதே! - எத்தாக
உல்லாசப் பெண்ணே! உனக்கு முழுக்குநாள்
எல்லையொரு வர்க்கும் இயம்பாதே! - சொல்லிலே
பூசிமெழு கிச்சாடை போட்டு வெறும்பேச்சுப்
பேசுவர்பால் வீண்பேச்சுப் பேசாதே! - மோசமடி!
கள்ளுக் குடித்தவர்க்கும் கஞ்சாக் குடித்தவர்க்கும்
எள்ளளவும் நேசற் றிணங்காதே! - பிள்ளைமார்
கைச்சரசம் காட்டும் கருணீகர் வந்தாக்கால்
கைச்சரசம் எள்ளளவும் காட்டாதே! - மெச்சிக்
கருத்தாய்ச் சிரித்தாலும் காற்காசு காணச்
சிரித்தலே நேர்த்தியடி. தேனே! - பொருத்தியிரா
முப்பது நாழிகைக்கு முப்பதுபேர் வந்தாலும்
கைப்பொருளை வாங்கக் கருதடி - எப்போதும்
தேம்பதும மாதே! செகத்தில் பணமென்றால்
பாம்புந் தலையெடுத்துப் பார்க்குமே - நாம்பார்க்கப்
பைமுதலைக் கொண்டுசிறு பாலகர்வந் தாலவர்க்குச்
செய்யும் கலவி தெரியாது - பையப்
படுக்கைநயங் காட்டிப் பழக்கப் படுத்தி
இடுப்பையுன்கா லுக்குள் இடுக்கி - கொடுக்கைவளைத்து
உள்ளே அமுக்கி உயரநீ ஏறியொரு
துள்ளிவிழுத் தாட்டிச் சுகங்காட்டி - மெள்ளக்கால்
பின்னைப் பறித்தந்தப் பேய்மாலன் கொண்டுவந்த
பொன்னைப் பறித்தகலப் போகவிடு! - மின்னே!

---

315. உள்ள வர்மம் : உண்மைச்சேதி.

322. தேம்பதுமமாதே : தேன் பொருந்திய தாமரை உறையும் திருமகள் போன்றவளே! செகம் : உலகம்.

323. கலவி : சேர்க்கை.

326. பின்னை : பின்னலை. அகல : விலக

நரைக்கிழவர் வந்தால் நழுவாதே முற்றல்
மரத்திலே உண்டு வயிரம் - தரைக்குள் 327
பசுக்கிழடே யானாலும் பாலருசி போமோ?
நிசத்திலிரும் என்று நெருங்கி - வசப்படுத்திச்
சேலைத் துணிபோல் சிசுனம் இருக்குமந்தத்
தோலைப் பிடித்துச் சுழற்றிவிட்டால் - காலுக்குள்
காமப்பா லோடுமவர் கைப்பொருளைக் கொள்ளையிட்டுப்
போமப்பா என்றவரைப் போகவிடு! - "காமியுனக்கு 330
என்மேலே ஆசையுண்டா" என்பா ரவர்களைப்பார்த்து
"உன்னாசை நான்விட் டொழிவேனா? - உன்னைவிட
வேறுமுகம் பார்ப்பேனா? விட்டுப் பிரிவேனா?
தேறுவனா? சிவன் இருக்குமா? - மாறிமனம்
பற்றுவனா? நித்திரையும் பண்ணுவனா? உண்பேனா?
சற்றேயென் காலும் தரிக்குமா? - மற்றவரைப்
போலொருவர் கிட்டவுநான் போவேனோ? முந்தியினி
மேலொருவ ருக்கு விரிப்பேனா? - நிலாஎன்
தேகம் நிலைக்குமா? சிந்தை மறக்குமா?
ஓகோ! உலோகமொப்புக் கொள்ளுமா? - ஆகெடுவாய்!
பூவிற்ற பேர்கடையில் புல்லுவிற்பா ரா?" என்று
கோவித் தழுதுபையக் கூட்டிப்போய்ச் - சிவச்
சவடம் அவனை நடுச் சந்தியிலே போட்டுக்
கவடியடி நான்பெற்ற கண்ணே! - புலியிலிதை 337

---

332. சிவன் : உயிர்.

334. முந்தி : முன்தானையின் மரூஉ; சேலையின் முனை. முந்தியினியேல் ஒருவருக்கு விரிப்பேனா? என்பதற்கு இனி வேறொருவருடன் சேர்வேனா என்பது பொருள்.

336. கோவித்து : கோபித்து.

336, 337. சிவச்சவடம் : உயிர்ப் பிணம். கவடி : வஞ்சித்துவிடு.

ஆளுக்காள் சொல்லி அவர்கள் தலையிலடி!
மீளத்தான் கையால் விளக்கிலடி! - நீளவட்டில் 338
சோற்றுத் தலையிலடி! சொல்லிநூ றாணையிடு!
தேற்றிக் கழுத்தறுக்கும் சிறிதுவே - வேற்றுரைக்கும்
எத்துக்கும் வஞ்சனைக்கும் இட்டிடும்பொய் யாணைக்கும்
சத்தியங்க ளுக்கும்நீ தாழாதே! - தித்திரிப்பும் 340
சூதும் கபடமும் சொல்புரட்டும் வஞ்சகமும்
கோதாய்! நமக்குக் குடியிருப்பே - மாதே!
இனிமை நயவிரக்கம் எல்லாம் நமக்குக்
கனவிலும் இல்லையடி கண்ணே! - தினநமக்குப்
பொய்யே குலவித்தை போடுவதே கண்வெட்டு
மெய்யேது நாமேது மெல்லியலே! - வையுமா
தெய்வம்நம்மை என்னசெய்யும் தேவர் அடியார்நாம்
ஐயமில்லைப் பொய்யாணைக் கஞ்சாதே - தையலே!
அந்நாள் எழுத்தும் அழியுமா உள்ளபடி
முன்னுள் விதிதான் முடியுமடி - தன்மனொரு 345
பொய்சொல்லி வாழ்ந்தான் புகழுமரிச் சந்த்ரனொரு
பொய்கிடையா மல்தேசம் போக்கடித்தான் - கையிலே
செல்லாப் பணம்தருவார் சில்வாய் களைக்கிழித்து
மல்லாற்றி நல்லபணம் வாங்குவேன் - வல்லியிதைப்
பன்னி உரைப்பதென்னே! பார்த்தால் பசுவடிநான்
பொன்னே! புகுந்தால் புலியடி - தன்னுலே
கட்டிவரா கன்கொடுத்த காவல ரும்நமக்குப்
பெட்டிவரா கன்கொடுத்த பேயர்களும் - ஒட்டியிங்கே 349

---

338. வட்டில்: சோறு உண்ணும் கலம்.

339. வேற்றுரை: சொன்னதை மாற்றிச் சொல்லுதல்.

340. தாழாதே: தயங்காதே.

கண்டமட்டும் அந்திசந்தி காத்திருந்தால்
திண்டு முண்டாய்ச்
சொண்டெனக்குச் சொல்லத் தெரியாதா - மண்டுகிறேன்
"வேசைமனே அம்பலமா? வீணரெல்லாம் கூடியென்ன
பேசுகிறீர் ஞாயமல்ல; பெண்மயிலே! - வாசலிலே
போகச்சொல்!" என்கிறேன் போகாட்டால் கிட்டப்போய்
"சோகைத் தடியா! சுடுமுகரா! - ஆகட்டும்!
போ! வெளியி லேபோ! பொதுவீடா! நீஇதற்குக்
காவலா! மொப்பமார் காணியா! - பாவியிது
சத்திரமா! என்வீடு சந்தையா!" என்றதட்டிப்
புத்திசொல்வேன்; அப்படியும் போகாட்டால் -
மெத்தமெத்த
ஏசுவேன்; பின்னும் இருந்தாக்கால் நாயைவிட்டுச்
சூசுவேன்; பின்னதிலும் தொட்டிருந்தால்-வாசல்மாறு
இல்லையா? கையில் எடுக்கிறேன் ரோசமற்ற
மொல்லைகளைத் தூர முடுக்கிறேன் - புல்லறுத்துப்
பாய்விற்ற பேரும் பணங்கொடுத்தால் இந்தவித்தை
தாய்வித்தை என்றே தழுவிவிடு! - நாய்விற்ற
காசு குலைக்குமா? கைத்தவேப் பெண்ணைவிற்ற
காசு கசக்குமா? காரிகையே! - கூசுபுளி
மேவியக ளாக்காய்போல் வெற்றிரசம் கொள்ளுவதே
தேவடியார்க் குள்ள திராணியடி - பாவையே!

---

350. மண்டுகிறேன்: நெருங்கிப் பாய்கிறேன்.
353. சோகைத் தடியா: உபயோகமற்ற தடியா. சுடுமுகரா: சுடுமூஞ்சிப் பயலே.
356. மொல்லை: ஆடு. பயிர்மேயும் ஆட்டை விரட்ட விரட்டத் திரும்ப வரும்.
358. கைத்த: கசப்பான. காரிகை: பெண். கூசு புளி: பல்லைக் கூசவைக்கும் புளிப்பு.
359. மேவிய: பொருந்திய. திராணி: வலிமை. பாவை: பெண்.

ஆடவர்மேல் வைத்திருக்கும் ஆசைபுளி யம்பழமும்
தோடும்போ லேயிரடி தோகையே ! - தேடியுன்பால்
அண்ணனும் தம்பியும்வந் தாலதற்கு நாணாதே ;
திண்ணைவெவ்வே றுண்டடியென் செல்வமே ! - எண்ணாமல்
வாயடியால் வந்தசில வண்டரையென் கைத்தடியால்
நாயடித்தால் போலவே நானடிப்பேன் - நீயே
கெதியடியென் றுன்னைவந்து கெஞ்சுவரை உன்கால்
மிதியடியால் போட்டு விரட்டு - நிதமும்
குருடர் பணத்தில் குருட்டுக்கண் உண்டோ ?
திருடர்பணம் செல்லமாட் டாதா ? - ஒருவர்
தமக்குநாம் சொந்தமுண்டா ? தார்குழலே ! அந்தக்
கமுக்கமெலாம் கேளடியென் கண்ணே ! - நமக்குப்
பணம்கொடுப்பார் தெய்வம் பணம்கொடார் தீண்டாப்
பிணமடிநான் பெற்றெடுத்த பேதாய் ! - குணமுடனே
மன்மதப்பேய்க் கெவ்வளவும் வைத்துப் படைக்காத
சென்மமென்ன சென்மம்வின் சென்மமே - இன்னங்கேள்
வெட்டைகிரந் திக்காரர் வேணதுதந் தாலுமவர்
கிட்டவும்போ காதே கிளிமொழியே! - கட்டழகி!
வட்டஅல்குல் அல்லஇது ! வாலிபர்பொன் அவ்வளவும்
கொட்டிக் குலுக்கும் குழியடி ! - தொட்டேறும்

360. புளியம் பழத்துக்கும் அதன் மேல் இருக்கும் தோட்டுக்கும் எவ்வளவு சம்பந்த முண்டோ, அப்படியிருக்க வேண்டும் ஆடவர்க்கும் உனக்கும் உள்ள தொடர்பு; என்று போதிக்கின்றுள் மகளுக்குத் தாய். புளியம்பழம் அதன் தோட்டோடு ஒட்டாது; வேசியும் எந்த ஆடவன் மீதும் ஆசைவைத்து ஒட்டி விடக் கூடாது ; ஒட்டினுல் பணம் பிடுங்கும் காரியம் கெட்டு விடும் என்பது கருத்து.

362. வாய் அடி : வாய் உருட்டு.

365. கமுக்கம் : ரகசியம்.

சேனைத் தலைவருக்கோர் நேரடி! தம்பிமார்
தானத்திற் கேற்ற தடாகமடி! - மானரசே!
பொல்லாக் குணத்துப் புலவன்மார் வந்தக்கால்
எல்லாரை யும்போலே எண்ணாதே! - மெல்லநயம்
பாடிநிதம் பத்துப் பணம்வேண்டும் என்பரந்தச்
சாடை அறிந்து தழுவிவிடு! - நாடெவர்க்கும்
அஞ்சும் மடபதிகள் அல்லூடே பூனைபோல்
கொஞ்சவரு வாரவரைக் கூட்டிப்போய் - மஞ்சள்
உடையில் படாமல் உரிந்தொதுங்க வைத்துச்
சடையைத் தலையணைய தாக்கிக் - கிடைகிடத்திக்
கையால் சுழற்றியவர் காமத்தைப் போக்கியெங்கள்
ஐயாவே போமென் றனுப்பிவிடு! - மெய்யான
செம்பிநாட் டுத்தலைமைத் தேவமா ருக்குநம்
கும்பிடே போதுமடி கொம்பனையே! - பைம்பொன்முடி
வேந்தரிடம் நீசேர்ந்தால் வேறொருவர் கிட்டவாரார்
மாந்திரிகர் கிட்டவும்பொன் வாங்காதே! - சேர்ந்த

---

370. தானம்: ஸ்நானம்.

372. நிதம் பத்துப் பணம்: தினம் பத்துப் பணம் என்பது தொனிப் பொருள். ஆனால் பொருள் அது அன்று. நிதம்பத்துப் பணம் என்று கொள்ள வேண்டும். நிதம்பம் ஒரு சொல். அது குறியைக் குறிக்கும். பணம்: படம்.

372, 373. நாடு எவர்க்கும் அஞ்சும் மடபதிகள்: நாட்டில் எல்லோர்க்கும் பயப்பட வேண்டிய மடாதிபதிகள். அல் ஊடே: இருட்டுக்கு நடுவிலே. பூனைபோல்: பூனையைப் போல ஒளிந்து ஒளிந்து.

373, 374. மஞ்சள் ஆடையில் படக்கூடாது. ஆம்! சந்நியாசியல்லவா?

376. சேது நாட்டுத் தேவமார்கள் கும்பிடுவதிலேயே திருப்தியடைந்து விடுவார்களாம்.

377. மாந்திரிகர் தொடர்பு வைத்துக் கொண்டால் மந்திரித்து மயக்கி விடுவாரானால் சங்கடமல்லவா?

சலுகைநமக் குண்டுபிர தானிகளாள் விட்டால்
வலியப்போய் மேவிவிடு மானே ? - உலகிலுள்ள 378
சாமாசி கத்தார் சமஸ்தானக் கள்வரந்தச்
சிமான்கள் சேகரமும் வேணுமடி - நேமுகமாய்
அட்டவணைப் பிள்ளைமார் ஆரொருத்தர் வந்தாலும்
இட்ட அணைத்துக் கிடத்திக்கொள் ! - ஒட்டிக் 380
குமஸ்தாக்கள் வந்தால் குறைநமக்குண் டாமே
சமஸ்தானம் நாமடியென் ,தாயே ! - இமைக்குமுன்னே
ராயச காயருக்கு நாமிணங்க வேணுமவர்
ஆயாசம் வந்தால் அழகலவே ! - தோயவரும்
நம்பியார் ஐயருக்கு நம்மைத்தொட் டென்னஒரு
கும்பிடல்லால் பின்னையென்ன கொள்ளையடி - கெம்பாமல்
மாதே இருட்டில் வருவார் குருக்களையர்
பேதாய் அதைவெளியில் பேசாதே ! - ஓதுவான்
தந்தவரி சைக்குச் சரசமாய் நீசிரிக்கும்
தந்த வரிசை சரிதாண்டி - வந்திசையாய்ச் 385
சத்தமிட்ட நாகசின்னச் சங்கீதக் காரனுக்கோர்
முத்தமிட்டா லும்போதும் மொய்குழலே ! - எத்தியெத்தி
நட்புடனுன் தேடியுண்ணும் நாளையிலோர் வேடிக்கை
செப்பக்கேள் மைமந் திரமுடுக்கன் - தப்பிலியோர் 387

---

378. பிரதானிகள் : தலைவர்கள்.
379. சாமாசிகத்தார் : வழக்குத் தீர்ப்போர். நேமுகம் : நியமனம்.
382. ராய சகாயர் : ராஜ பக்தர். தோய வரும் : அநுபவிக்க வருகின்ற.
383. கெம்பாமல் : பேச்சு மூச்சில்லாமல்.
384. ஓதுவான் : கோவிலில் தேவாரம் பாடுபவன்.
385. தந்த வரிசை : கொடுத்த சிறப்பு. இரண்டாவது தந்த வரிசை : பல் ஒழுங்கு.
387. மை மந்திர முடுக்கன் : மைப் போடும் மந்திர வல்லவன். தப்பிலி : இழிந்தவன்.

ஆரியப் பன்திருவை யாற்றிலொரு தாசிமுத்துக்
கூரிகைப் பொன்னையெலாம் கொள்ளையிட்டான் - நேரான
கொச்சிச் சிவக்கொழுந்தைக் கொட்டிக் குலைத்தவனைப்
பிச்சைக்கு விட்டான் பிளந்தெறிவான் - இச்சையாய்ச்
செந்தூர்க் கமலிமுதல் சேரப் பறித்தவனைச்
சந்தியிலே விட்டான் சதிகேடன் - இந்தமுறை 390
வெள்ளவரத் தால்தேடும் வேசையர்கைப் பொன்னையெலாம்
கொள்ளையடித் தான்மடைவாய்க் கொக்குப்போல் - கள்ளமடைக்கு
எல்லாரும் வாரி எதுப்பைகட்டி னார்களல்லால்
வல்லான்கைப் பொன்னொருவர் வாங்கவில்லை - சல்லியென்னை 392
இட்டமாய்த் தேடிவந்தான் இன்றுசமை யல்புரையின்
கிட்டமுயல் வந்ததென்று கெர்ச்சித்துக் - கட்டளையாய்ச்

---

388. ஆரியப்பன் : அவன் பெயர். திருவை யாற்றிலே ஒரு தாசி ; அவள் பெயர் முத்துக் கூரி.

389. கொச்சிச் சிவக் கொழுந்து : கொச்சி நகரி லுள்ள சிவக் கொழுந்து என்னும் பெயர் கொண்ட வேசி.

390. செந்தூர்க் கமலி : திருச்செந்தூரிலுள்ள கமலி என்னும் பெயரினள். சேரப் பறித்து : எல்லாவற்றையும் பிடுங்கி. சதி கேடன் : சதி செய்கின்றவன் ; கேடும் உடையவன்.

391. வெள்ள வரம் : ஏராளமான வரப்பிரசாதம். கள்ள மடை என்பது அந்த ஆரியப்பனை.

392. எதுப்பை கட்டுதல் : எதிர்ப்பையிலே பணத்தை நிரப்புதல்; அதாவது மாற்றானுக்குக் கொடுத்தல். எதிர்ப்பை எதுப்பை எனத் திரிந்து நின்றது. சல்லி : சில்லறைப் பயல்.

393. இட்டம் : இஷ்டம். சமையல் புரை : சமையல் கட்டு. கெர்ச்சித்து ; ஆரவாரித்து.

செம்மராட் டங்கறியைத் தின்பழக்கிப் பார்ப்பமிந்தப்
பொம்மலாட் டென்றவனைப் புல்லினேன் - வெம்முனைக்கை
வாளுருவிச் சோற்று மயக்கம் சரிசாம
வேளையிலந் தாம்நாள் வெளியேறிக் - கேளாய் 395
ஒருகால் செருப்பிட் டொருகணுக்கு மையிட்டு
ஒருகாதுக் கோலையும்நான் இட்டுப் - பெரியசடை
பின்னிஓ டேந்திப் பிறந்தகோ லத்துடனே
உன்னிமயா னத்தில் ஒருகுழியில் - கன்னிகள்ளப்
பேறுல் உடன்புதைத்த பிள்ளைமண்டை நெய்வடித்துக்
கூறுய் அதைவீட்டில் கொண்டுவந்து - சோறதிலே
தானிட்டுப் பாலிலிட்டுச் சர்க்கரையில் இட்டவலில்
தினிட் டவன்கைத் திரவியத்தை - மானரசே !
பண்டுபெரும் பூதமுலைப் பாலுமுயி ருந்திருமால்
உண்டதுபோல் நானுறிஞ்சி ஓட்டிவிட்டேன் - கண்டாயோ
சந்தியிலே நின்று தலைபுழுத்த நாயைப் போல்
அந்தா சுணைகெட் டலைகிறுன் - முந்தத் 401

---

394. பொம்மலாட்டு : பாவைக் கூத்து. புல்லினேன் : தழுவினேன். வெம் முனை : கொடிய போர்க் களம்.

395. சோற்று மயக்கம் சரிசாம வேளையில் : உண்ட அயர்ச்சி நிங்கும் நடு நிசியில்.

397. பிறந்த கோலத்துடன் : நிர்வாணமாய்.

397., 398. கன்னி கள்ளப் பேறுல் உடன் புதைத்த பிள்ளை : மணமாகாதவள் கள்ளத்தனமாகப் பெற்று உடனே புதைத்த பிள்ளை. கூறு : பகுதி.

399. தின் இட்டு : தினியில் போட்டு.

400. பூதகியின் உயிரோடு பாலுண்ட திருமால் போல் நான் அவனைப் பருகி விரட்டி விட்டேன்.

401. அந்தா : சுட்டுப்பொருள். சுணை : சரணை,

தினக்கட் டளையாய்ச் சிறுகச் சிறுக
எனக்குச் செலவுபோய் இன்னம் - உனக்கோர் 402
கரண்டி இருக்குதுன்மேல் காதல்கொண்ட பேரைக்
கரண்டிவிடு நான்பெற்ற கண்ணே ! - பிறந்ததுபோல்
தானே துலாவேறித் தாசி முழுமோசம்
போனதுபோல் நீமோசம் போகாதே ! - மானததால
வெட்டுண் டவளையொரு மின்காரித் துப்பினதும
பெட்டிமணல் வாரும் பெருங்கதையும் - சட்டமாய்ப் 405
பண்டுரைக்கக் கேட்கலையோ ? பாவாயிச் செய்தியெலாம்
விண்டுனக்குச் சொல்லவுந்தான் வேண்டுமோ -
கெண்டைவிழி
வெட்டுமொரு வேசை விடகூ ரணப்பொடியாள்
பட்ட அபகடமும் பார்த்துக்கொள் - கெட்டிகெட்டி
தாழி வராகனுக்காச் சர்ப்பனையோர் வேசைசெய்த
காளிதா சன்கதையும் கேட்கலையோ ? - வாள்விழியாய்
இந்தவகை யாய்த்தேடி ஈழத்து வள்ளியென்றும்
செந்தூர் முழுகியென்றும் சின்னியென்றும் - சந்தான
நெல்லூர் மருதியென்றும் நெட்டூர் அழகியெனறும
புல்லாணிச் செங்கமலப் பூவியென்றும் - செல்வமுள்ள 410

---

403. கரண்டிவிடு : சுரண்டி விடுவாயாக.
404. துலா : தராசு.
405. மின் : பெண்.
406. பாவாய் : மங்கையே. விண்டு : விரித்து. கெண்டை : கெண்டை மீன்.
407. விட கூரணப் பொடியாள் : அவ்வேசையின் பெயர். அபகடம் : அவமானம்.
408. தாழி : வாய் அகன்ற சட்டி. சர்ப்பனை : வஞ்சகம். காளிதாசன் : சாகுந்தலம் எழுதிய மகாகவி. வாள் விழி : கத்தி போன்ற கண்.
409. ஈழத்து வள்ளி: ஈழ நாட்டிலுள்ள வள்ளி யென்பாள். ஈழம், யாழ்ப்பாணம். முழுகி, சின்னி பெயர்கள்.
410. செங்கமலப்பூவி ஒருத்தி பெயர்.

வெங்கணூர்ச் செல்வியென்றும் மேன்மைபெற்றூர்
என்றுமெத்தச்
சங்கையிலா மாயமெலாம் தாய் சொன்னாள் - இங்கே 411
வெகுமதிகள் சொன்னதெலாம் மின்னாள் நமக்கு
வெகுமதிதான் என்றுவிருக் திட்டாள் - செகமீது

மோகனமுத்தின் திருவிளையாட்டு.

வேடிக்கை வாலிபராம் வேங்கைப் புலிகளைக்கை
ஆடிக்கண் விச்சுவலை யால்விசிக் . கூடிப்
பிடித்தாசைச் சங்கிலியால் பின்னியொரு பாய்ச்சல்
கொடுத்துமுலை யானையால் குத்தித் - தொடுத்தாலங்
காட்டில் ஒதுக்கியிரு கம்பத்தி னாடுகுரங்
காட்டியல்குல் கூட்டில் அடைத்திட்டாள் - தேட்டமுறத்
தோயவரும் வாலிபர்கைச் சொர்னமலை யைப்பிடுங்கிப்
பாயும் அநுமனுக்கொப் பாயினாள் - மாயவித்தை

மோகனமுத்தின் தோழிகள் சிறப்பு.

ஆட்கண்ட ராமியென்றும் ஆனைமா ரூடியென்றும்
கோட்கண்ட மாயைக் குளிகையென்றும் - நாட்கொண்ட

---

411. சங்கையிலா : அளவில்லாத.

412. வெகு மதி : 1. நிறைந்த புத்தி. 2. சன்மானம்.

413. வாலிபராகிய வேங்கைப்புலிகளைக் கையாண்டு கண் விச்சு என்னும் வலையால் வீசினாள்.

414. ஆசைச் சங்கிலியால் அப்புலிகளைப் பின்னினாள் ; முலையானையால் ஒரு பாய்ச்சல் கொடுத்துக் குத்தினாள். ஆலம் : கருமை.

415. கம்பம் : துடை. தேட்டம் : விருப்பம்.

416. தோய : அனுபவிக்க. சொர்னமலை : பணக்குன்று.

417, 418, 419. 1. ஆட்கண்ட ராமி, 2. ஆனைமாரூடி, 3. கோட்கண்ட மாயைக் குளிகை, 4, நாட்கொண்ட

காருடக் கள்ளியென்றும் கண்டவரை எத்தியென்றும்
விரியத்து ராக்காயி வெட்டியென்றும் - போராடிப் 418
பாதை மறித்தாள்என்றும் பையப் பசப்பியென்றும்
தாதியெட்டுப் பேர்களுண்டு நையலுக்குச் - சாதகமாய்
அக்கினியில் நீர்பிழிவார் ஆற்றுமணலைத்திரிப்பார்
கைக்குள்ளே வைகுந்தம் காட்டுவார் - தொக்காக 420
வானத்தை வில்லாய் வளைத்திடுவார் கொல்லவரும்
கானப் புலியையும்வாய் கட்டுவார் - தேனனைய
சேயிழையார் இந்தமுறை செய்திடப்பொன்
தேடிவைக்கும்
மாயமங்கை மூரலுக்கும் வாயிதழ்க்கும் - சாயலுக்கும்
செல்விழிக்கும் வாணுதற்கும் தேமொழிக்கும்வாசனைக்கும்
கால்களுக்கும் நூலிடைக்கும் கார்குழற்கும் - மால்பிடித்து,

மோகனமுத்தின்மீது மோகங்கொண்ட காமுகர்

காட்டும்நெடும் பாய்மரத்துக் காகம்போல் சுற்றுவரும்
சேட்டுமத்தில் ஈப்போல் தியங்குவரும் - கோட்டுவர்ண

காருடக் கள்ளி, 5. கண்டவரை எத்தி, 6. விரியத்து ராக்காயி வெட்டி, 7. போராடிப் பாதை மறித்தாள், 8. பையப் பசப்பி என்று சொல்லக் கூடிய எட்டுத் தாதியர் மோகன முத்துக்கு உளர்.

420. அக்கினியில் நீர் பிழிவார்: நெருப்பிலே நீர் எடுப்பர். ஆற்று மணலைத் திரிப்பார். மணலைக் கயிறாகத் திரிப்பார்கள்.

421. கானம்: காடு.

422. சேயிழையார்: பெண்கள். மூரல்: புன் சிரிப்பு. இதழ்: உதடு.

423. நூல் இடை: நூலனைய இடை: கார் குழல்: மேகம் போன்ற கூந்தல். மால்: மயக்கம்.

424. காட்டும்: எடுத்துக் காட்டுகின்ற. நெடும்: நீண்ட. பாய்மரத்துக் காகம் போல் சுற்றுவர்: கப்பல்

வம்பிட்ட கொங்கைநல்லாள் வாசல் தலைக்கடையில்
கும்பிட்டு வீழ்ந்து குழைவாரும் - சொம்பிட்ட 425
வாளாம் சிவந்தவிழி மாதாட் கிருபுறமும்
காளாஞ்சி ஏந்திக் கனிவாரும் - நாளெல்லாம்
ஆணிப்பொன் ஆழி அளந்தளந்து தந்தவட்குக்
காணிக்கை வைத்தடப்பம் கட்டுவரும் - பேணியிரு
கையைப் பிடித்திரண்டு காலுமடி மேலிருத்திப்
பையச் சுடக்குப் பறிப்பாரும் - ஒய்யாரச்
சேலேறும் கண்ணாட்குத் திண்டோரம் நின்றுகொண்டு
மேலே மயில்விசிறி வீசுவரும் - நாலிடமும்
கன்னிமஞ்சள் நீரையள்ளிக் கண்ணிரண்டும் தாம்கழுவிச்
சென்னியிலுங் கூடத் தெளிப்பாரும் - முன்னிருந்த 430
வெள்ளித்தாம் பாளத்தை விற்றுக் கருங்கிழட்டுக்
கொள்ளித்தே ளுக்குக் கொடுப்பாரும் - உள்ளாகக் 431

பாய்மரத்தில் சுற்றுவதைத் தவிர நடுக்கடலில் அகப்பட்ட காகத்துக்கு வேறு கதியில்லை; அப்படிச் சுற்றுகின்றார் மோகன முத்தை ஆடவர். கடல்வாய்த் தத்தளிக்கும் பறவையின் நிலையை “எங்கும் போய்க் கரை காணாது எறிகடல்வாய் மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே” என்று சித்திரிக்கின்றார் குலசேகர ஆழ்வார். சேட்டுமம் : மூச்சு இழுத்தல். கோட்டு-வர்ண : கொம்பை ஒத்த-நிறம் விளங்குகின்ற.

425. வம்பு : வாசனை. குழைதல் : வருந்துதல். சொம்பு : அழகு.

427. ஆழி : மோதிரம்.

428. இரண்டு காலும் மடிமேல் இருத்தி : மோகன முத்தின் இரண்டு கால்களையும் தன்மடிமேல் வைத்து. பைய : மெதுவாக. சுடக்குப் பறித்தல் : நெட்டி யொடித்தல்.

429. திண்டு : ஒலுகு. மயில் விசிறி : மயில் இறகினால் செய்யப்பட்ட சிவிறி.

கொட்டகையில் வந்துவந்து கூடி நரைத்தகிழட்டு
ஒட்டகையைக் கண்டே உலைவாரும் - இட்டமாய் 432
மின்னாளைக் காணவரும் வேளைநரைக் கூன்கிழட்டுச்
செந்நாயைக் கண்டே திகைப்பாரும் - கன்னிநம்மைக்
காப்பாடு வாளென்று காணவந்த பேர்கிழட்டுத்
தோப்பாடி யைக்கண்டே சோர்வாரும் - சிப்பிட்ட
மைக்கார் குழலியிடம் வந்தபேர் கூனல்நரைக்
கொக்கால் அகப்பட்டுக் கொள்வாரும்-பொய்க்கிழட்டு 435
மூளிதான் சாகாளோ முற்றும் மதமதக்கத்
தாழியோ என்று சலிப்பாரும் - காளிமுன்னே
திக்கொளுத்தி மாதவிடாய்ச் சேலைசுட்டு மந்திரத்தைத்
தாக்கியொரு சக்கரமும் தாபித்துத் - தோல்கிழட்டுத்
தீப்பாவை மாளவென்று சென்றுநடுச் சாமத்தில்
மாப்பாவை தான்புதைத்து வைப்பாரும் - பேய்ப்படுவார்

---

432. நரைத்த கிழட்டு ஒட்டகை, தாய்க் கிழவியாகிய செங்கமல வல்லி. உலைதல் : வருந்துதல். இட்டம் : இஷ்டம்.

434. காப்பாடுவாள் : காப்பாற்றுவாள்.

435. மைக் கார் குழலி : இருட்டைப் போன்ற கரிய கூந்தலாள்.

436. மூளி : உடற் குறை; ஈண்டு ஒரு வசவு. முற்றும் : முழுதும். மதமதக்கத் தாழி : இது 'முதுமக்கள் தாழி' என்பதன் மரூஉச் சொல் தொடர். முதுமக்கள் : வயதானவர்கள். தாழி : பாத்திரம். வயது பெரிதும் ஏறியவர்களை ஒரு தாழியுள் அடக்கம் செய்து இவ் உலகில் நின்றும் பிரித்து விடுவது ஓர் பழய முறை என்று கூறக் கேட்கின்றோம்.

437. தாக்கி : ஏற்றி. தாபித்து : ஸ்தாபித்து.

438. தீப்பாவை : கொடிய பெண். நடுச்சாமம் : நள் இரவு. மாப் பாவை : மாவினால் செய்யப்பட்ட மந்திரப் பாவை. பேய்ப் படுவார் : பேய் பிடித்தவர்.

வெட்கமெலாம் போட்டுமங்கை வீட்டுப் புழக்கடையின்
பக்கமெலாம் எட்டியெட்டிப் பார்ப்பாரும் -
கைக்கெதுவாய்க் 439
கஞ்சமுக மங்கையிரு கண்காண அம்மியிலே
மஞ்சள் அரைத்து வழிப்பாரும் - கெஞ்சியே 440
தேமல் அழகுமுகம் சிந்துகுறு வேர்வையெலாம்
சோமனால் மெல்லத் துடைப்பாரும் - நேமுகமாய்
வண்டுவந்த கண்ணாட்கு மாங்கனியும் தேன்குழலும்
கொண்டுவந்து தின்னக் கொடுப்பாரும் - ஒண்டொடிக்குக்
கால்பிடித்து மேல்பிடித்துக் கைபிடித்து நிற்பாரும்
மால்பிடித்து நின்று மலைப்பாரும் - பால்கொடுக்க
மாடு கொடுத்ததற்கு மங்கைநல்லாள் என்னதந்தாள்
ஓடு கொடுத்தாளென் றோதுவரும் - சோடாகச்
சீப்புக் கொடுத்ததற்குத் தேனார் குழலியரை
ஆப்புக் கொடுத்தாளென் றஞ்சுவரும் - சாப்பிட்ட 445
வட்டில் விளக்குவரும் வாசல் பெருக்குவரும்
முட்டியிலே தண்ணீர் முகப்பாரும் - கட்டளையாய்
நெல்லெடுத்துக் குத்துவரும் நெய்யுருக்கி வைப்பாரும்
புல்லறுத்துக் கொண்டுவந்து போடுவரும் - கல்லடுப்பில்

---

439. புழக்கடை: வீட்டின் பின்புறம்.

440. கஞ்சம்: தாமரை.

441. குறு வேர்வை: சிறு வியர்வை. சோமன்: வேட்டி. நேமுகமாய்: முறைப்படி.

440, 443. "செங்கையினால், மஞ்சள் அரைத்துக் கொடுப்பேன், வண்ணமலர்க் கால் பிடிப்பேன், இன் சொல்படி நடப்பேன் என்னிஷ்டம்" என்ற வரிகள் இவற்றோடு ஒப்பன.

444. பால் கரக்கும் மாட்டைக் கொடுத்து அதற்குப் பதில் திரு ஓடு வாங்கிக் கொண்டான் ஒருவன். சோடு: இரண்டு.

தீயூது வாருமவள் தின்றதம்ப லந்தனக்கு
வாயூறிக் கொண்டே வருவாரும் - சாயுமிடை 448
ஆடையிலே சுற்றிநிழல் ஆடையிலே உப்பரிகை
மேடையிலே கண்டு மெலிவாரும் - நீடியகைர்
சாட்டையிலே பம்பரம்வை சாட்டையிலே சுற்றுமதில்
கோட்டையிலே ஏறிக் குதிப்பாரும் - நீட்டுவிழிக்
கெண்டையிலே முன்சரிகைக் கெண்டையிலே பூமுடிக்கும் 450
கொண்டையிலே ஆவி குலேவாரும் - திண்டுமேல்
சாயையிலே பின்னழகுச் சாயையிலே வேல்விழிகள்
பாயையிலே ஆவி பதைப்பாரும் - ஓயாமல்
கெண்டையிட்ட கூர்விழிக்காய்க் கீசகனும் வீமனும்போல்
சண்டையிட்டு மற்பிடித்துச் சாய்வாரும் - ஒண்டொடிக்கு
மேற்கட்டி கட்டினபேர் மெத்தமன்னே கட்டியதில்
சிக்கட்டி கொண்டே திரிவாரும் - நோய்க்கிடமாய்
ஆயாசப் பட்டிருமி அச்சுக் குலேந்தொதுங்கித்
தேவாங்குபோலே திரிவாரும் - பாவையரைக் 455
கண்கண்ட தெய்வமென்று கையெடுத்த பேர்கிரந்திப்
புண்கண்டு மேலசந்து போவாரும் - விண்கண்ட 456

---

452. பின் அழகுச் சாயை: பின் அலங்காரத் தோற்றம். வேல் விழிகள் பாயையிலே: வேலாயுதம் நிகர்த்த கண்கள் பாயும் போது.

453. கெண்டையிட்ட கூர் விழி: கெண்டை மீனைப் பழிக்கப் பெற்ற கூரிய விழி; இங்கு அவ்விழி பெற்ற மோகன முத்து. அவளைப் பெற ஒருவரோடொருவர் வீமனைப் போலவும் அவனால் கொல்லப்பட்ட விராட மன்னன் மைத்துனன் கீசகனைப் போலவும் மற்போர் புரிந்து சாய்ந்தனர்.

454. மோகனமுத்துக்கு மேற்கட்டி கட்டும் திருவிழா நடத்தி 'அடே! அப்படிக்கட்டு! இப்படிக்கட்டு' என்று கத்தி அதனால் தொண்டை கட்டித் தொண்டையில் புண் கூடத் தோன்றி விட்டது சிலருக்கு.

பாவாடை விசமணிப் பல்லக்கில் ஏறியந்தப்
பூவை,தலை வாசல்வழி போவாரும் - யாவர்களும் 457
கண்ணாரக் காண அந்தக் கன்னிமுட்டுச் சேலைகொண்டு
வண்ணான் துறைக்கு வருவாரும் - எண்ணவொண்ணாக்
காமவித்துப் போலெழுந்த காரிகைக்குக் காணிவிற்றுப்
பூமிவிற்றுத் தட்டழிந்துபோவாரும் - நாமிருந்த
வீட்டைவிற்றோம் மாட்டைவிற்றோம் மெத்தைவிற்றோம் வட்டில் விற்றோம்
ஆட்டைவிற்றோம் என்றே அலைவாரும் - கோட்டைமன்னர்
கன்னியிடம் வந்தணையக் கட்டிலுக்கால் உள்ளோடி
முன்விருந்த பேர்பயந்து முக்குழிக்க - அந்நேரம்
பாழான இந்திரியம் பல்லிடுக்கி லேவழியக்
கிழாய்ப் பதுங்கிக் கிடப்பாரும் - ஊழ்வினையால்
யாருமே இப்படி அலைந்திருக்கும் நாளிலிந்த
ஊரிலே ராமய்யனென் றோர்பார்ப்பான் - பாரவான்
ஆளில் அழகன் அருச்சுனன் கோவலன்
நாளுமிந்த ஊர்க்கொருபி ராமணிகன் - கேளும்
ஒருகணிசம் பைய உரசப்போய் மாடு
திருகுணிக்குள் ளாகிவிட்ட சீர்போல் - கருதி 465
ஒருபொழுது நாடிமரு தார்தேடிப் போனான்
தெரிவையரைக் கண்டவனைச் சேர்ந்தான் - அரசழிவாள்

---

457. சில பிரபுக்கள் ஆடம்பரமாகப் பல்லக்கில் ஏறித் தங்கள் பெருமையைக் காட்டி மோகன முத்தின் வீட்டின் வழியே தங்களை விளம்பரம் செய்துகொண்டு செல்கின்றார்.

459. காம வித்து : காமத்துக்கே விதை. காணி : ஒரு காணி நிலம். தட்டழிந்து : நிலை தடுமாறி.

463. பாரவான் : பெரிய மனிதன்.

464. பிராமணிகன் : பிராமணத்தன்மையுடையவன்.

466. அரசு அழிவாள் : பிள்ளையைப் பறிகொடுத்து அழிவை அடைவாள்.

கூடிமருந் திட்டாள்பொன் கொள்ளையிட்டாள் கையிழந்த
சாடையறிந் தாள்வெளியே தள்ளினாள் - சேடியரின் 467
முன்கடுகி வந்தொருத்தி முட்டினாள் மற்றொருத்தி
பின்குடுமி தன்னைப் பிடித்திழுத்தாள் - வன்கொடிய
நக்குவாய்க் காலகடி நாய்தனையும் சூழவிட்டாள்
பொக்குவாய் நாயும் புகுந்ததே - திக்குவேறு
இல்லாமல் தன்னொழுக்கம் எல்லாம் தவறிமனப்
பொல்லாத நோய்கொண்டு புண்ணாகிப் - பல்விழுந்து 470
ராமய்ய னென்றுசொன்ன நாதிப்பேர் பூதிமங்கி
ஊமையன் என்றுபேர் உண்டானான் - மாமனதும்
பேதகமாய் இங்கே பிறந்தகோ லத்துடனே
பாதையிலே போரான்நீர் பார்க்கலியோ? - ஈதல்லால்
அப்புவையன் போய்ச்சேர்ந்தான் அன்றுமுதல் இன்றுவரை
வெப்புவையன் ஆனான்காண் வேதியரே ! - கப்பலூரர்ச்
சங்கரையன் போய்ச்சேர்ந்தான் தாலிவிற்றுக் கூறை விற்றுப்
பங்கரையன் ஆனான்காண் பாவலரே ! - வெங்களூர்ப்
பாற்கரையன் போய்ச்சேர்ந்தான் பாமே கிரந்திகொண்டு
மூர்க்கரையன் ஆனான்காண் முன்னவரே ! - மாற்கமிலாப்

467. கை இழந்த : கைப் பொருளை இழந்துவிட்ட. சாடை : குறிப்பு.

468. வன்கொடிய : வலிய கொடுமையுடைய.

469. காலகடி நாயும் பொக்குவாய் நாயும் தாய்க்கிழவி.

471. மா மனது : பெரிய மனம்.

472. பேதகமாய் : பேதலித்து.

473. வெப்புவையன் : வெறும் ஆள்.

474. கூறை : ஆடை. பங்கரையன் : அழகு பறி கொடுத்தவன்.

475. பாற்கரையன் : பாஸ்கர ஐயன். மூர்க்கர் ஐயன் : மூர்க்கர்கட்குத் தலைவன்.

பேரிப் படிமயங்கிப் பேய்கொண் டலைந்தவர்கள் 476
ஊருக்கூர் மெத்த ;இந்த ஊரிலே - பாருமையா !
இந்தா ஒருவன் இளைக்கிறான் சந்தியிலே
அந்தா ஒருவன் அலைகிறான் - கொந்திமன்னன்
வல்லிகிட்டப் போய்த்திரும்ப வந்தானா உள்ளதெல்லாம்
சொல்லிவிட்டேன் என்பேரில் தோஷமில்லை - கல்வியுள்ள
ஞானியையன் சொன்னபுத்தி நாடிநட வாமல்அவ
தானியையன் போனதுவும் தானறிவீர் ! - ஆனதினால்
இவ்விதமாய்த் தேடியுன்னும் ஏந்திழையாள்
வாழ்மருதூர்க்கு
எவ்விதம்போ வீர்வருவ தெவ்விதங்காண் ! -
சொல்வீரென்று 480

அவதானி மருதூர் சென்றமை.

ஆரியம் தேர்ந்தகுரு ஐயர்புத்தி சொல்லநல்ல
காரியந்தான் என்றிரண்டு கைகொட்டி - விரியமாய்
அங்கே நகைத்திங்கே அந்தப்பாம் பாடாது
பொங்கியபால் நெஞ்சில் புரையுண்டா ? - தங்காட்டை
விட்டுப் புலிபசித்தால் மீண்டுபுல்லைத் தின்னுமா ?
பட்டும் அறியேனா ?கற் பாறையிலே - நெட்டுமுனை 483

---

477. இந்தா, அந்தா எல்லாம் பக்கத்தைச் சுட்டிக் காட்டிச் சொல்லுவது.

479. ஞானியையனும் அவதானி ஐயனும் சுப்ரதீபக் கவிராயர் பாடிய "கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது" என்னும் நூலில் வருகின்றனர். ஞானியையன் புத்திமதியைக் கேளாமல் அஷ்டாவதானி மதுரைநகர் சென்று சொக்கேசர் கோவில் தாசியாகிய மதனாபிஷேகத்தின் மையலில் படுக் கெட்டகதை உமக்குத் தெரியுமே எனச் சோடசவதானிக்கு வேதமய்யர் விளம்புகின்றார்.

481. ஆரியம் : வடமொழி.

கைக்கடிசால் ஏறுமா? கட்டுமெழு குப்பாவை
அக்கினிப் பந்தலுக்குள் ஆடுமா? - மெய்க்குமுன்னே 484
நிற்குமா பொய்யும்? நிறைகுடம்த ளும்புமா?
பிக்கில் உடம்பறியாப் பேயாட்டா? - எக்காலும் 485
தன்னெஞ் சறியாப்பொய் தானுண்டோ போம்போம்நீர்
என்னெஞ் சறியீர் எனவுரைத்தேன் - சொன்னேனுன்
பட்டறி கெட்டறி பத்தஞ் சிறுத்தறியென்று
எட்டிவந்தார் புத்திசொன்னார் என்பிறகே - கட்டளையாய்
பொன்மேனி நெல்விளைவு பூத்த வயல்வளஞ்சூழ்
நென்மேனி தாண்டிவையை நீராடி - நன்மதுர
வெல்லங் கடந்தமதன் வில்மகவான் வில்லைமுட்டும்
வல்லம் கடந்து வழிக்கொண்டு - மெல்ல
இருமருதூ டேநடந்தான் இந்திரன்விண் போற்றும்
திருமருதூ ருக்கருகே சென்று - வரமுதவு 490
மாகதீர்த் தம்போலிம் மண்டலத்தில் பண்டுதித்த
நாகதீர்த் தம்புகுந்து நான்படிந்து - சேகரமாய்ச் 491

484, கைக்கடிசு: கை வலு.

485. பிக்கு - இல்: பிசகு இல்லாத.

487. பத்து அஞ்சு இறுத்து அறி: பத்து அஞ்சைக் கொடுத்துத் தெரிந்துகொள்.

489. வெல்லங்கள் தந்த மதன் வில்: வெல்லத்தை உண்டாக்குகின்ற மன்மதன் வில்லாகிய கரும்பு. மகவான்: இந்திரன்; அவன் வில் இந்திர தநுசு. கரும்பு வானளாவ வளர்ந்தது என்பது கருத்து. வல்லம், ஓர் ஊர்.

490. இரு மருது ஊடே நடந்தான்: இரண்டு மருதமரத்துக்கு நடுவில் நடந்தவனாகிய திருமால். விண்: தேவலோகம். வரம் உதவு: வரம் கொடுக்கும்.

491. மாகம்: ஆகாயம். நாக தீர்த்தம்: திருமருதூரிலுள்ள தீர்த்தம்.

சந்தி நியமம் தவருமலேமுடித்துச்
சிந்தை புலன் சென்றவழி செல்லாமல் - பந்தித்துப் 492
பொன்னுகர் சேவடியைப் போற்றிசெய்து சந்நிதிக்கு
முன்னுக வந்துநந்தி முன்பணிந்து - பன்னுமறைக்
கஞ்சரத்தை முன்புபெற்ற கண்மணியை வெண்மருப்புக்
குஞ்சரத்தைக் கண்டுகையால் கும்பிட்டு - மஞ்சுதொடும்
கம்பமெதிர் வந்து,தென்றல் காலிருக்கும் குன்றையொரு
கும்பனுக்குத் தந்த குணக்குன்றை - இன்பமுற 495
ஆகம் பசந்த அழகிய நாயகியோர்
பாகம் சுமந்த பரஞ்சுடரை - மோகமுள்ள
தொண்டருள்ளத் தேவிளங்கும் தூண்டா மணிவிளக்கை
அண்டருக்கும் தேடரிய ஆரமுதை - முண்டகத்தாள்

---

492. சிந்தை புலன் சென்றவழி செல்லாமல் : உள்ளத்தைப் பொறி வழிப்படி போக்காமல்.

493. பொன் நாகர்: பொன் போன்ற நாகநாதர்; நாகநாதர் திருமருதூர்ச் சுவாமி பெயர். பன்னு மறை: வேதத்தைச் சொல்லுகின்ற.

494. கஞ்சர் : தாமரையில் உதித்த பிர்மா. அத்தை: அவர்தம் அத்தையாகிய பார்வதி. முன்புபெற்ற கண்மணி : அவ் உமாதேவியார் முதன்முதலில் பெற்றெடுத்த கண்மணியாகிய கணபதி. வெண் - மருப்பு - குஞ்சரம்: வெள்ளைக்கொம்பையுடைய யானை. மஞ்சு : மேகம்.

495. கம்பம். கொடிமரம். தென்றல்கால் இருக்கும் குன்று : தென்றல் காற்றின் பிறப்பிடமாகிய பொதியமலை. ஒரு : ஒப்பற்ற. கும்பன் : அகஸ்தியன். குணக்குன்று : குணமலை; ஈண்டுக் கடவுள். உற: : பொருந்த.

496. ஆகம்: உடம்பு. பசந்த: பச்சை நிறமான. அழகிய நாயகி, திருமருதூர் [illegible]ஞ் MAHAMAHOPADHYAYA
சுடர் : கடவுள்.

497. முண்டகம்: தாமரை.

நித்தம் துதித்துமுத்தி நீணெறிசேர் மூவரன்புச்
சித்தம் தழைத்த சிவக்கொழுந்தை - முத்தமிழின் 498
பண்காட்டி அந்தாதி பாடியமெய்த் தொண்டனுக்குக்
கண்காட்டி ஆண்டுகொண்ட கண்ணுதலை - மண்காணத
தாய்பேசு பேசென்று சாற்றினும்பே சாமூங்கை
வாய்பேசச் செய்தமகா மந்திரத்தை - மீயுலவும் 500
வில்வத்தின் பால்முளைத்து வேதமுத லாய்க்கிளைத்த
செல்வத்தைக் கண்டு தெரிசித்து - நல்லதெய்வ
வாரணத்தைத் தோய்ந்தமத வாரணத்தை ஓர்மருப்பு
வாரணத்தை ஈன்றபிடி வாரணத்தை - ஆரணத்தாய்
“ஏனப்பா காழிவளர் என்னப்பா உண்ணப்பா”
ஞானப்பால் என்றூட்டும் நாயகியை - வானிறைஞ்சும்
தன்பதத்தில் ஏற்றிமலர் தானருச்சிப் பார்வணங்கும்
முன்பதத்தில் ஏற்றிவைக்கும் முக்கனியை-அன்புத்தேன்

---

498. முத்தி நீள்நெறிசேர் மூவர் : நீண்ட வீட்டு வழியிலே பொருந்திய தேவாரம் பாடிய மூவர். சித்தம் தழைத்த : உள்ளத்திலே துளிர்விட்ட.

500. மந்திரம் : சிவபெருமான்.

501, 502. தெய்வ வாரணத்தைத் தோய்ந்த மத வாரணம் : தெய்வயானையை அனுபவித்த மத யானை போன்ற முருகக்கடவுள். ஓர் மருப்பு வாரணம் : ஒற்றைத் தந்தத்தையுடைய யானைமுகக் கடவுள். ஈன்ற : பெற்ற. பிடி வாரணம் : பெண் யானையாகிய பார்வதி. ஆரணத் தாய் : வேத மாதா.

503. காழிவளர் என் அப்பா : சீகாழியில் வளர்கின்ற என் அப்பனாகிய ஞான சம்பந்தா. உண் அப்பா ஞானப்பால் : அறிவுப்பால் அமுதத்தைப் பருகு அப்பா. வான் இறைஞ்சும் : விண்ணவர் வணங்கும்.

504. அருச்சிப்பார்: அருச்சிப்பாரை என்று இரண்டாம் வேற்றுமையாகக் கொள்க. வணங்கும் முன் பதம் : யாவரும் போற்றும் முதல் பதவி. முக்கனி : தமிழ் நாட்டார் சிறப்பாக எடுத்த வாழை, பலா, மா, ஆகிய முப்பழம்.

ஊற்றிருக்கும் மெய்யடியார் உள்ளமலர் ஆலயத்தில்
வீற்றிருக்கும் ஜோதி விளக்கொளியை - நாற்றிசைக்கும்
அன்னை மருதூர் அழகிய நாயகியைச்
சந்நிதிமுன் நின்று தரிசித்தேன் - அந்நேரம்

மோகன முத்தின் மீது கொண்ட மோகம்

மாகனக மண்டபத்தில் வந்துநிற்கும் போதுகண்டேன்
மோகனமுத் தென்னுமொரு மொய்குழலை - ஏகநுதல்
வில்லழகும் பாய்ந்தவிழி வேலழகும் காலழகும்
சொல்லழகும் மாலையிட்ட தோளழகும் - பல்லழகும்
கையழகும் மார்பழகும் காதழகும் மூக்கழகும்
மெய்யழகும் கண்டவுடன் மெய்மறந்தேன் - ஒய்யாரச்
செப்புமுலை கண்டு தெரிசித்தேன் திவாயில்
ஒப்புமுலை வாய்மெழுகாய் உள்ளுடைந்தேன் - கொப்பிலங்கும்
கட்டழகி வள்ளிமணிக் காதுகண்டேன் காடைவலைத்
தட்டில்விழுந் தாப்போல் தட்டழிந்தேன் - இட்டமின்னாள்

---

505. அன்பர் உள்ளமாகிய மலர் ஆலயத்தில் கடவுள் விற்றிருத்தலை "மலர்மிசை ஏகினான்" என்றார் புலவர் பெருமான்.

506. அந்நேரம் : அந்தச் சமயம்.

507. மா கனக மண்டபம் : பெரிய பொன் மாளிகை. மோகன முத்து, நடன மாது. மொய் குழல் : வண்டு மொய்க்கும் கூந்தல் உடையவள்.

507, 508. நுதல் வில் : வில் போன்ற நெற்றி. பாய்ந்த விழிவேல் : வேலனைய பாய்ந்த கண்.

510. செப்பு : கிண்ணம். திவாயில் ஒப்பும் உலைவாய் மெழுகு : உலைத்திவாயில் பொருந்திய மெழுகு. கொப்பு : காதில் அணியும் ஒருவகை அணி.

511. காடை வலைத்தட்டில் விழுந்தாப்போல் : வலைத் தட்டிலே மாட்டிக்கொண்ட காடைப்பறவைபோல்.

MAHAMAHOPADHYAYA

வாய்ந்தமயற் குள்ளாய் மதயானை போயளறு
பாய்ந்தகதை போலே பதைபதைத்தேன் - காந்திமணிச்
சங்கம் தரித்தசெங்கைத் தாமரைகண் டேன்மேனி
அங்கம் தெரித்தநெற்போல் ஆயினேன் -
கொங்கையென்று
கல்லையோ பண்ணிவைத்தான் கஞ்சனிவ ளுக்கிடையும்
இல்லையோ என்றுமனத் தெண்ணினேன் - சொல்லியசங்
கீதத்தைப் பாடினுள் கின்னமுலைப் பேதையவள்
பாதத்தைப் போய்ப்பிடிக்கப் பார்த்திட்டேன் -
கோதற்ற 515
தேன்பிறந்த சொல்லாளைச் சேராமல் நாம்வினுக்கு
ஏன்பிறந்தோம் பூமியிலென் றெண்ணினேன் -
மான்போல்வாள்
சேல்வைத்த கண்ணைச் சிமிட்டினுள் மங்கையிதென்
மேல்வைத்த பார்வையென்று மெச்சினேன்-கால்வைத்து
மத்தளத்துக் கொக்கவடி வைத்தாள்நான் மெய்ம்மறந்து
தத்தளித்துக் காலசந்து தட்டழிந்தேன்-தித்திகுழல்
கைத்தாளத் துக்கேற்பக் கைபிடித்தாள் காமனனை
அத்தாளம் போடும்வகை ஆயினேன் - தத்தைவெகு 519

512. மயற்கு உள்ளாய் : மையலுக்கு உள்பட்டு. அளறு : சேறு. காந்தி : ஒளி.

513. சங்கம் : வளையல். தரித்த : அணிந்த. அங்கம் : எலும்பு.

514. கஞ்சன் : பிர்மா.

515. கோது : குற்றம்.

516. தேன்பிறந்த சொல்லாள் : சொல்லில் தேனைக் கொட்டுவாள். வினுக்கு : வினைக.

518. மத்தளத்துக்கு ஒக்க அடிவைத்தாள் : தாளத்துக்குப் பொருந்த நடனம் ஆடினுள். தித்தி குழல் : இனிக்கும் தேன் ஒழுகும் மலர் சூடிய கூந்தலையுடையாள்.

519. கைத் தாளத்துக்கு ஏற்பக் கை பிடித்தாள் : கைத் தாளத்தின் வழி அபிநயம் செய்தாள். காமன்

முத்துமுத்தாய் ஆடினாள் மொய்குழலார் சூழவொரு
சித்திரம்போல் தன்மனைக்குள் சென்றிட்டாள் -
புத்திசொல்லி 520
ஒக்கவந்த வேதியரை உள்ளேகல் தூண்மறைவுப்
பக்கத்தில் விட்டுமெள்ளப் பம்மினேன் - வக்கணையாய்
ஐயர்சொன்ன புத்தியெலாம் ஆலைவாய்த் தின்கரும்பாய்க்
கைதவறிக் கொட்டும் கமழ்பாலாய் - ஐயையோ !
இரையாய் மாவடுவாய்க் கெட்ட புளிச்சாறாய்க்
கார்கடலி லேகவிழ்ந்த கப்பலாய் - ஏருழுத
சேற்றில்நட்ட கம்பமாய்ச் சிந்தியதண் ணீரெழுத்தாய்
ஆற்றில் கரைத்தபுளி ஆனதுவே - தோற்றுமல்
நங்கையுடன் நானும் நடந்தேன் அலங்கார
மங்கைவரக் கண்டோர் வழிதோறும் - அங்கங்கே 525
சேணாறும் பாக்குவெட்டிச் சிவயிலே மெய்ம்மறந்து
வீணே தன் கைவிரலை வெட்டுவரும் - பூணார
வண்ணமணித் தோள்வேட்டி மந்தையினா டேநழுவத்
திண்ணமொடு காணாமல் செல்வாரும் - வெண்ணீற்றை
நாசித்தூள் போடுவரும் நாசித்தூள் வெண்ணீறுப்
பூசித்தான் மெய்சோர்ந்து போவாரும் - வேசைக்காய்

எனை அத்தாளம் போடும்வகை ஆயினேன் : மன்மதனானவன், அந்தத் தாளத்தைத் திருப்பி என்மீது போடுவது போல் நான் ஆகிவிட்டேன். தத்தை : கிளியனைய மொழியாள்.

520. மொய்குழலார், சேடிப் பெண்கள். சித்திரம் : ஓவியப் பதுமை.

521. ஒக்க வந்து : உடன்வந்த. பம்மினேன் : சமயம் பார்த்தேன்.

525. வழி தோறும் : வழி நெடுக. அங்கங்கே : இடங்கள்தோறும்.

526. சேண்: உயரம். மெய்ம்மறந்து: தன் வசம் இழந்து.

528. நாசித்தூள் : மூக்குப் பொடி. வெண்ணீறு : திருநீறு.

இன்னவித மாய்மயங்கும் எல்லையிலே சூழ்ந்துநின்று
கன்னியர்கள் ஏந்திவரும் கைலாகில் - வன்னமணிக்
கும்பம்போல் விம்முமுலைக் கோதை மனைபுகுந்தாள்
கம்பம்போல் வாசலில்நான் காத்துநின்றேன் -
வெம்பாரப் 530

தோழிகள் ஜாலம்

பொய்யிட்ட கப்பலரிப் பூச்சிகள்ளக் கூளியென்னும்
பையப் பசப்பியொரு பாங்கிவந்தாள் - ஐயரே!
நீரிருப்ப தெந்தவூர்? நீரிங்கே வந்ததென்ன?
பேருரைப்பீர்! என்றுமெள்ளப் பேச்சிட்டாள் -
காரிகையே!

ஆடானை யென்னூர் ஆதிரத்னம் ஐயன்மகன்
தாடாளன் முத்தையனென் சம்பந்தி - கூடலூர்
நாரணய்யன் மாமனுன் நாகமய்யன் தம்பிநான்
ஆரணய்ய னுக்குநான் அம்மான்சேய் - பேரெனக்குச்
சல்லாப சோடசவ தானகவி சுந்தரையன்
இல்லாள் மனவெறுப்பாய் எங்கும்போய் - தொல்லுலகில்
எந்நதியும் ஆடிவந்தேன் எத்தலமும் நாடிவந்தேன்
அன்னமே! இந்நகர்ப்பொன் ஆலயத்தில் - சந்நிதிமுன்
சொன்னக் கொடிபோலே சுற்றிவலைந் தாடிவந்த
மின்னற் கொடியார்? விளம்பென்றேன் - மன்னவரே! 537

---

530. கம்பம் : தடிமரம். வெம் : வெம்மையான.

531. பொய் இட்ட கப்பல் : பொய்களை நிரப்பிய நாவாய். அரிப்பூச்சி : அரிக்கும் பூச்சி.

533. ஆடானை : திருவாடானை. ஆதி ரத்னம், தந்தை பெயர். திருவாடானைச்சிவபிரான் பெயர் அது.

537: சொன்னக்கொடி : தங்கவல்லி.

தெள்ளமுதை ! பாற்குழம்பை ! செண்பகவல்
லிக்கொழுந்தை!
பிள்ளைமுடி திர்க்கவந்த பெண்ணரசை ! - கள்ளவிழும்
சோலைக் கருங்குயிலை ! சொர்னப் பசுங்கிளியை !
கோலப் பருவமுலைக் கோமளத்தை ! - வேலையன்ன
காமரச தாழிக் கரும்பை ! செழுங்கனியை !
தேமலிளங் கொங்கைத் திரவியத்தை ! - காமுகருக்கு
அற்புதத்தை ! தேனை ! அதிமோக ரஞ்சிதத்தை !
கற்பகத்தை ! சர்க்கரையை ! கற்கண்டை ! - செப்புமுலை
இங்கிதப்பொன் மோகனமுத் தென்னுமெங்கள்
பெண்ணரசை !
செங்கமல வல்லிபெற்ற செல்வத்தை ! எங்கும்
தெரிந்திருக்க நீர்தாம் அறியீரோ என்று
சொரிந்திருக்கும் தேமல்முலை சொன்னாள் - திருந்திழாய் !
வில்லன்ன வாணுதலாள் வீட்டுக்கின் றூர்வருவார்
சொல்லென்றேன் சொல்லத் தொடங்கினாள் - கல்வீட்டுச்
சுப்பையரோ சத்திரத்துச் சோமாசி பட்டரோ
அப்பைய தீட்சதரோ அண்ணாவோ குப்பையரோ

538. செண்பகவல்லிக் கொழுந்து : செண்பக மரத்தில் படர்ந்த கொடியின் கொழுந்து. கள் - அவிழும் : தேன் விரிகின்ற.

539. கோலம் : அழகு. வேலை அன்ன : கடலை ஒத்த.

540. காமரசதாழிக் கரும்பு : இன்பக் கருப்பஞ்சாறு நிறைந்த பண்டம்.

542. இங்கிதம் : குறிப்பறிதல். செங்கமல வல்லி, தாய் பெயர்.

543. தெரிந்திருக்க : உலகப் பிரசித்தமாக இருக்க. சொரிந்திருக்கும் தேமல் முலை, சேடியருள் ஒருத்தி. திருந்துஇழாய் : திருத்தமான நகை அணிந்தவளே.

நட்டுமுட்டுக் காரனே நாகசின்னக் காரனே
கட்டழகன் தானக் கணக்கனே - பட்டனே 546
ஆணிமுத்த னேஉள் ளுறைமணிய காரனே
காணும் பலவேலைக் காரனே - சேணியனே
ஊர்மணிய காரனே ஓதுவார் மூர்த்தியோ
பேரான சம்புருதிப் பிள்ளையோ - காரிகைமேல்
காதல்வைத்துப் பொன்முடிப்புக் காணிக்கை கொண்டுமன
ஆதரவாய் ஓரிரவுக் காயிரம்பேர் - மோதி
வருவாரும் தாதியர்க்கு வாரிவா ரிப்பொன்
தருவாரும் எத்தனையோ சாலம் - புரிவாரும் 550
மன்மதனைப் போலழகு வாய்த்தவரும் எத்தனைபேர்
அன்னவரில் ஆர்க்குமெங்கள் ஆரணங்கு - பொன்னை
மலிவாய்த்தந் தாலும் மனதிணங்காள் சற்றும்
புலிபசித்தால் தின்னுமோ புல்லை - உலகிலுமைப்
போலே அழகுகல்வி போதமுள் ளன்புடையோர்
மேலே மனது விரும்புவள்காண் - சீலமறை
வேதியரே கல்வியுள்ள வித்தகரே என்றுசொல்லித்
தாதியுள்ளே சென்றுள் சகிப்பேனே - காதல்மிஞ்சித்
தேக்கிலைநீர் போலத் தியங்கயிலே மற்றொருத்தி
பாக்கிலைநீர் தாருமென்று பையவந்தாள் - தாக்குமிரு 555
குன்றுவந்த பாரமுலைக் கோமளப்பெண் ஆரமுதை
இன்றுவந்து சேர்வார் எவரென்றேன் - நன்றுநன்று 556

---

551. ஆரணங்கு : மங்கை.

553. போதம்: அறிவு. சீலம்: ஒழுக்கம். மறை: வேதம்.

555. தேக்குமரத்தின் இலையில் பட்டநீர் அங்கும் இங்கும் உருளும். பாக்கு - இலை : பாக்கு வெற்றிலை. தாக்கும் : மோதுகின்ற. இரு : இரண்டு.

556. பாரம். பெரிது. கோமளம் : அழகு. ஆர் அமுது : நிறைந்த அமிழ்தம். சேர்வார் : அணைவார்.

சொந்தம் ஒருவருண்டோ சொர்னமுமக் குண்டானல்
மந்தையிலே நிற்பதேன் வாருமென்ருள் - தந்தமெலாம்
முத்துமுலை மாதே! ரா முப்பதுக் கெத்தனைபொன்
குத்துமுலை யாட்குக் கொடுப்பதென்றேன்-மெத்தவில்லை
மங்கைநல்லாட் காயிரம்பொன் மாமிக் கதிற்பாதி
எங்களுக்குக் கால்வாசி என்றுசொன்னள் - செங்கையால்
அங்கா யிரத்தெழுநூற் றைம்பதுபொன் ஓர்முடிப்பாய்
நங்காய் பிடியென்று நான்கொடுத்தேன் - தங்காமல் 560

பணிப்பேண்கள் உபசாரம்

கள்ளிருந்த கூந்தலிடம் கன்னிகொண்டு
போய்க்கொடுத்தாள்
உள்ளிருந்து வந்தார்கள் ஒன்பதுபேர் - மெள்ளஎன்னை
வந்துநின்று கும்பிட்டார் வாழ்த்தினர் வாருமென்ருர்
சந்தடிவி லக்கினர் தாக்கினர் - முந்தியொரு
சுப்பிஅடப் பம்பிடித்தாள் சோமிபடிக் கம்பிடித்தாள்
குப்பிமுன்னே கைவிளக்குக் கொண்டுவந்தாள் -
அப்பாலும்
மாரிகை லாகுதந்நாள் வள்ளிநடை மெத்தையிட்டாள்
வீரிவெட்டி வேர்விசிறி வீசினள் - ஓர்புரத்தில் 564

---

557. மந்தை: தெரு. தந்தம்: பல்.

558. ரா: இராத்திரி. முப்பது: முப்பது நாழிகை.

561. கள்: தேன்.

562. சந்தடி: அங்குநின்ற கூட்டத்தின் இரைச்சல். தாக்குதல்: வழிவிடாதவர்க்கு அடி கொடுத்தல்.

563. அடப்பம் பிடித்தல்: தாம்பூலம் ஏந்துதல்.

564. கைலாகுதரல்: கை கொடுத்து அழைத்து வரல்.

பொன்னிசெம்பு கொண்டுவந்தாள் பூரணிபன்
னீர்தெளித்தாள்
சின்னிகுஞ்சம் போட்டாள் ஜெயம்சொன்னாள் - அந்நேரம்

மனைக்குள் சென்றிருத்தல்

கப்பல் கவிழ்ந்ததுபோல் கானவலை வெம்புலிபோல்
கொப்பத்தி லேவிழும் குஞ்சரம்போல் - தப்பாமல்
ஒட்டில்விழும் சிட்டுப்போல் ஓடி விளக்கில்விழும்
விட்டிலைப்போல் நானுமவள் விடுசென்றேன் -
கட்டுமெட்டாய்
அண்ட முகட்டை அளாவுமணி மண்டபத்தில்
கண்டு விரித்தரத்னக் கம்பளத்தில் - திண்டொலுகு
பாசாங்காய்ப் பொட்டுவைத்தார் பையவிரு வாய்நடந்து
ராசாங்க மோடியாய் நானிருந்தேன் - கூசிநடந்து

மோகனமுத்தின் முகமன்

ஆணிப்பொன் மோகனமுத் தன்றிரண்டு தேங்காயும்
காணிக்கை கொண்டுவந்து கையெடுத்தாள் -
நாணித்தான்

---

565. குஞ்சம் போடுதல் : சாமரை வீசுதல். ஜெயம் சொல்லுதல் : அவதானிக்கு ஜே போடுதல்.

563, 564, 565. சுப்பி, சோமி, குப்பி, மாரி, வள்ளி, வீரி, பொன்னி, பூரணி, சின்னி என்பன பணிப் பெண்களின் பெயர்கள்.

566. கானவலை வெம்புலிபோல் : காட்டில் விரித்த வலையில் வீழ்ந்த கொடிய புலியைப் போல. கொப்பம் : யானை பிடிக்க வெட்டும் குழி. குஞ்சரம் : யானை.

567. ஒட்டு : குருவி பிடிப்பதற்குப் பசையை ஒட்டி வைத்தல். சிட்டு : சிட்டுக்குருவி. கட்டுமெட்டு : கட்டுக் கோப்பு.

568. கண்டு : அளவு பார்த்து. திண்டு : சதுர வடிவமான அணை. ஒலுகு : வில் வடிவமான அணை.

569. பாசாங்கு : வஞ்சகம். விருவாய : மிடுக்காக. ராஜாங்க மோடி : ராஜ தர்பார் மோஸ்தர்.

570. ஆணிப்பொன் : மாற்றுயர்ந்த தங்கம்.

நின்றாள் தலைகவிழ்ந்தாள் நேர்வரவும் கூசினாள்
ஒன்றுமறி யார்போல் ஒதுங்கினாள் - நன்றுதட்டில்
கொஞ்சம் சிரித்துக் குளிர்ந்துவாய் பொத்திமனம்
அஞ்சி ஒதுங்கி அடுத்துநின்று - வஞ்சகமாய்
என்னைமுகம் பார்த்துருகி என்சாமி உம்மைநான்
சந்நிதியில் ஆடையிலே தான்கண்டேன்-பொன்னியைவிட்
டுக்கூட்டி வாவென்றேன் உம்மையெங்கும் காணோம்
அக்கக்கா வெட்கக்கே டாஇதென்ன - பக்கமா
தூரமா காதமா சொந்தம்நீர் இங்குவந்தால்
ஆருந் தடுப்பாரா அப்புறத்தில் - நீர்நிற்க
வேண்டிய தென்இந்த வீடுமக்கு வேற்றுமையா
ஆண்டவர்நீர் நாங்களுமக் காளடிமை - பூண்டிருக்கும்
பாக்கியமெல் லாமுமது பாக்கியமே எங்களுக்கு
நாக்குமூக் குங்கொடுத்த நாதனே - யோக்கியமென்
சாமிவலு வுண்டு சலுகையுண்டு வாய்ச்செலவும்
ஆமாமா என்னிதுகாண் ஐயரே !-சீமையிலே
கண்குளிர்ந்த மாப்பிள்ளையைக் கண்டணைந்த பெண்களல்லோ
பெண்களென்று ஜாலமெல்லாம் பேசினாள் - எண்காணாக்
கள்ளம் கரையில்லாக் காந்தாரி பெற்றமகள்
உள்ளம் கரைய உருகினாள் - எள்ளளவும்

---

571. ஒன்றும் அறியார்போல்: ஒன்றும் தெரியாத அப்பாவிபோல. நன்று உதட்டில்: நல்ல உதட்டிலே.

573. ஆடையிலே: நடனம் ஆடியபொழுது. பொன்னி; ஒரு வேலைக்காரி.

574. அக்கக்கா, ஆச்சரியச் சொல்.

579. ஜாலம்: தந்திரம். என் காணா: கணக்குக் காணமுடியாத.

580. கள்ளம்: வஞ்சனை. கரை யில்லா: எல்லையற்ற. எள் அளவும்: கொஞ்சமும்.

கல்லார்போல் அந்தவஞ்சக் கன்னிசொன்ன
பொய்ப்பாசாங்கு
எல்லாம் நிஜமென்றே எண்ணிவிட்டேன் - வல்லிஎன்னை

எத்துகின்ற வஞ்சமறி யேன்தேவைக் காரனுக்குப்
புத்திகொஞ்சம் என்றகதை போலானேன்-தத்தைமொழி

கையைப் பிடித்திருத்திக் கண்குளிர நான்பார்த்தேன்
பையச் சிரித்தரைக்கண் பார்வையிட்டுக் - கையிலே

வீணையெடுத் தாளிசையை மீட்டினாள் மூடர்மன
வீணையெடுத் தாள்விழியை வீசினாள் - கோணாமல்

நாகேசர் மேற்பதமும் ராமேசர் மீதுதேன்
பாகேபோல் கீர்த்தனையும் பத்தியமும் - சேகரமாய்ச் 585

சோதிவடி வேலர்மேல் சொன்னவண் ணத்துறையும்
நாதர்மங்க ளேசர்பத நல்தெலுங்கும் - சேதுபதி

தேவைத் துரையென் சிவசாமி மன்னவன்மேல்
கோவைத் துறையும் குயிலிசைபோல் - நாவிசையக்

கான இசைகாட்டிக் கண்காட்டிப் பண்காட்டிப்
பால்மொழியாள் நானுருகப் பாடினாள் - மானரசை

இச்சையுடன் கொண்டாடி என்னூறு பொன்பெறுமோர்
வச்ரயணி மாலையவள் மார்பிலிட்டேன் - அச்சணத்தில்

---

581. கல்லார் போல்: படிக்காதவர்களைப்போல. வல்லி: கொடியனையாள்.

582. எத்துகின்ற: ஏமாற்றுகின்ற. தத்தைமொழி: கிள்ளைப் பேச்சினாள்.

583. இருத்தி: உட்கார வைத்து. அரைக் கண் பார்வை: கடைக்கண்வீச்சு.

584. மூடர்கள் மனமாகிய வீணையையும் எடுத்துத் தன் விருப்பம்போல் மீட்டுகின்றவள்.

585. நாகேசர், மருதூர் ஈசர். ராமேசர், ராமேஸ்வரத்திலுள்ள இறை. தேன்பாகு: தேன் குழம்பு. பத்தியம்: இசைப்பாட்டு.

586. மங்களேசர், உத்திரகோசமங்கைக் கடவுள்.

589. வச்ரம்: வைரம். அச்சணத்தில்: அந் நேரத்தில்.

தாய்க்கிழவி உபசாரம்

தோப்பைமுலை யுஞ்சுரித்த சொள்ளைமுக முங்கிழட்டு
மூப்பும் வறட்டுடலும் முக்காடும் - சாய்ப்பும் 590
குணுகுணுத்த மூக்கும் குறுகுறுத்த கண்ணும்
முணுமுணுத்த வாயின்மேல் மூச்சும் - துணிவளைத்து
நீட்டுங் கழுத்தும் நெழிப்பும் எலிச்செவியும்
போட்ட புகையிலையும் பேழ்வாயும் - காட்டித்
தடிக்கம்பும் ஊன்றித் தலையும் நடுக்கி
அடிக்கடிகால் தூக்கித் தள்ளாடி - கிடுகிடென்று
கூனிக் குறுகிக் குமட்டித்தோல் வற்றிநரைச்
சூனைவயிற் றுத்தாயும் தோன்றினள் - மான்மயிரைக்
கொத்தையார் பஞ்சைநிகர் கூந்தலா ரேநமக்கும்
அத்தையார் ஆமென் றறிந்துகொண்டேன் - எத்தியென்னை, 595
" தங்கத் துரையே! தமிழ்க்கடலே! நான்பெற்ற
மங்கைக் குயிரே! நீர் வந்திரோ? - எங்களைநீர்
தேடிவந்த தெங்கள்முன்னோர் செய்தவமோ? அல்லதிந்த
வீடுசெய்த புண்ணியவி சேடமோ? - நாடிநான்
செய்தநன்மை தானோ? திருவுளச காயமோ?
தையலிவள் செய்த தவப்பயனோ? - ஐயர்சொன்ன
சோசியமும் ராக்கண்ட சொற்பனமும் மேலாந்தை
வீசியதும் சோதிவிளக் குப்பொறியும் - பேசும்
வனக்குறத்தி கைக்குறியும் வள்ளுவனார் சொல்லும்
உனக்குநல்ல மாப்பிள்ளை உண்டாம் - எனச்சொன்னேன்
மைவிழிக்குச் சொன்ன மறுநாளே எங்கள்குல
தெய்வம்போல் வந்தீரே! சேயிழையைக்-கைதவற 601

---

590. சுரித்த: சுருக்கம் விழுந்த.
592. பேழ்வாய்: பிளந்தவாய்.
594. சூனை வயிறு: பெரு வயிறு.
595. எத்தி: ஏமாற்றி.

விட்டுவிடா தேயும்! பின் வேறுகதி இல்லை! என்
கட்டழகிக் கும்மிடமேல் காதல்மெத்த! - எட்டிரண்டு 602
சொன்னாலும் தோற்றாது சூதுதெரி யாள்பலவிடு
இன்னமறி யாள்வினயம் ஏதுமில்லை - சின்னவயசு
அன்னம் இதுவரைக்கும் ஆண்பூடு கண்டறியாள்
கன்னியழி யாப்பருவ காலமிது - பின்னுமனக்
கள்ளம் அறியாள் கபடறியாள் பொய்யறியாள்
எள்ளளவும் கைப்பொருள்மேல் இச்சையில்லை -
அள்ளிச்சோறு 605
உண்ணத் தெரியாதே உம்மிடத்தில் கூசாமல்
வண்ணத் துரைச்சிகிட்ட வந்தாளா? - பெண்ணுமது
கம்பளமும் சேர்ந்தாளா? கண்விழித்துப் பார்த்தாளா?
செம்பதும வாயும் திறந்தாளா? - மின்போல்
மருங்கிலையென் றாலும் மருவிஉமைக் கூட
மருங்குண்டு நீர்பட்சம் வைத்தால் - தரும்தருவோடு
எண்ணாயி ரங்கோடி இந்திரன்வந் தாலுமினிக்
கண்ணாலும் பாராள் கனவினிலும் - பெண்ணுடனே
பூவும்மண மும்போல் புகழ்குருவும் சிடனும்போல்
சீவனுங்கூ டும்போல் தினங்கலந்து - மேவிப் 610
பிதிர்வாழ நீங்கள் பெருவாழ்வு வாழ்ந்து
பதினாறும் பெற்றுப் பலுகி - நிதமிருங்கள்
இன்னார்க்கு மாமியிவள் என்றுலகில் யாருமெனைச்
சொன்னால் அதுபோதும் சொற்பமோ? - மன்னவரே! 612

---

603. வினயம்: வஞ்சகம்.

607. செம்பதும வாய்: சிவந்த தாமரை போன்ற வாய். மின்போல்: மின்னலைப்போல.

608. மருங்கு: 1. இடை. 2. இடம். தரும் தருவோடு - கொடைவல்ல கற்பகதருவோடு.

610. சீவனும் கூடும்: உயிரும் உடலும்.

தேகவடி வாளிவளைச் சேர்ந்திருநீர்" என்றுசொல்லி
மாகவடி பின்னுக்கு வாங்கினாள் - போகையிலே 613
கன்னிக்குச் சற்றேகண் காட்டினாள் சாடைகண்டு
தன்னிச்சை யாய்நடந்தார் தாதியரும் - என்னைப்பார்த்து

பள்ளியறைச் சிறப்பு

உள்ளறைக்குள் வாருமென்றாள் ஒண்ணுதலாள் பின்போனேன்
வெள்ளிவட்டத் தூண்நிறுத்தும் மேல்முகப்போ! - பள்ளியறைத் 615
தூங்குமஞ்சப் பத்தியோ! சொர்னமணி மண்டபமோ!
தாங்குநவ ரத்னமிட்ட சட்டமோ! - ஓங்கியமேல்
கட்டியோ! திண்டு! தலையணையோ! கண்ணாடிப்
பட்டமோ! தங்கப் படிக்கமோ! - கொட்டகையில்
ஒத்திருக்கும் கம்பளமோ! உப்பரிகை மேடையோ!
வைத்திருக்கும் தூண்டா மணிவிளக்கோ! - சித்திரமாய்
ஒன்றுகை லாகுதர ஒன்றுவழி கூட்டிவர
ஒன்றிருகை ஏந்தி உபசரிக்க - ஒன்றுமனச்
செம்மைபண்ணி என்னைரத்னச் சிங்கா சனத்தில்வைக்கப்
பொம்மைபண்ணி வைத்த புதுமையோ! - அம்மதிற்கால்
மேலெழுதும் சித்திரத்தோர் மின்னாளைக் கூனவைத்து
நாலுபேர் செய்யும் நடத்தையோ! - காலிரண்டும்
தாழப் பிளந்திருக்கும் தையல்நிதம் பத்தொருவன்
வாழைப் பழம்சுவைக்கும் வாஞ்சையோ! - ஏழுபெண்கள்

---

613. தேகவடிவாள்: உடல் அழகி. மா கவடி: மகா வஞ்சகி.

596-முதல் 613-வரைத் தாய்க்கிழவி கூற்று.

615. உள் அறை: பள்ளியறை.

616. தூங்கும் மஞ்சம்: தொங்குகின்ற ஊசல்.

617. பட்டம்: படம்.

620. மதிற் கால்: சுவற்றை ஒட்டிய தூண்.

சில்லாய்ந்த நாகபடம் திட்டவொரு பாழுறுவான்
மல்லாந்து சாய்ந்திருக்கும் மார்க்கமோ ! - சல்லாமேல்
ஒரொருத்த ராய்க்கிடத்தி ஒன்பதுபே ருக்கொருத்தி
கேரளத்து லீலைசெய்யும் கேலியோ ! - நேர்கண்டே
பாழ்த்தடத்தி லேதவறிப் பாரப் பொதியெருது
விழ்ந்ததுபோல் சப்ரமஞ்ச மேல்படுத்தேன் -
ஏந்திழையார் 625

மாமி வரவிட்ட வரிசை

வள்ளத்தில் சந்தனமும் வாச மருக்கொழுந்தும்
வெள்ளிக் கமலத்தில் வெள்ளிலையும் - புள்ளிநிற
வண்ணப்பிங் கானில் மணத்தசவா தும்புழுகும்
கிண்ணத்தில் ஏலம் கிராம்புகளும் - உண்ணப்பால்
பைங்கனியும் தண்ணீரும் பன்னீரும் வெந்நீரும்
கொங்குமலர்ச் செண்டுகளும் கொண்டுவந்தார் -
இங்கேஎன்
சாமிதர விட்டகுறை தானென்றே உங்களுடை
மாமிவர விட்ட வரிசையென்றுள் - ஆமாமென்று 629

---

624. கேரளம்: மலையாளம்.

625. பாழ்த் தடத்திலே: பாழான தடாகத்திலே. பாரப் பொதி எருது: பெரும் சுமை தூக்கும் மாடு. சப்ர மஞ்சம்: அலங்காரக் கட்டில். ஏந்து இழையார்: ஆபரணங்களை ஏந்தியவர்கள்.

626. வள்ளம்: கும்பா. கமலம்: தாமரைமலர்போல் செய்யப்பட்ட தட்டு. வெள்ளிலை: வெற்றிலை, புள்ளி நிற: புள்ளியையுடைய நல்ல நிறமான.

627. வண்ணப் பிங்கான்: அழகான கண்ணாடி டப்பி.

628. பைங்கனி: பசுமையான பழம். கொங்கு: மணம்

629. வரிசை: சீர்.

எண்ணுமுன்னே அத்தைசுருள் என்றொருத்தி
ஐந்துபொன்னென்
கண்ணுமுன்னே வைத்திரண்டு கைதொழுதாள் -
பெண்ணழகி 630

மாப்பிளைக்கென் றுருடனே மாமிக்கூ றைக்காயோர்
பூப்புடவை நான்கொடுத்துப் போகவிட்டேன் -
வாப்பிடுபெண்

போகம் துய்த்தல்

சன்னையால் மாதர்சென்றார் தையலும் நானுமல்லால்
பின்னையார் தானுமில்லைப் பேதைபோய் - வன்னமணிக்

கோலக் கதவடைத்தாள் கோகிலம்போல் வந்தாளென்
சோலைக் கிளிமொழியே! தோய்என்றேன் - வேல்விழியை

வீசினாள் அஞ்சிமனம் வெட்கினாள் கிட்டவரக்
கூசினாள் கொஞ்சம் குனுகினாள் - வாச

முலையைத் திறந்தாள்பின் மூடினாள் சற்றே
தலையைக் கவிழ்ந்தாள்பின் சாய்ந்தாள் - கலகலென 635

வன்னக் கலைபிடித்தேன் வாரிமடி மீதுவைத்தேன்
சொன்னமணிக் கச்சவிழ்த்தேன் - தோள்கொடுத்தேன் -
கன்னத்தைக் 636

---

630. எண்ணு முன்னே: நினைப்பதற்கு முன்னர். அத்தை சுருள், ஒரு முறை.

631. இவைகள் எல்லாம் மாப்பிள்ளைக்கு என்று சொன்னாள். மாமிக் கூறை: மாமியார் புடவை. வாப்பு இடு பெண் : வார்க்கப்பட்ட நங்கை.

632. சன்னையால்: குறிப்பறிந்து. மாதர், பாங்கிகள். தையல், மோகனமுத்து. பின்னை : வேறு.

633. கோலக் கதவு: அழகிய படுக்கையறைக் கதவம். கோகிலம்: கூவும் குயில். தோய்: அநுபவி.

636. கலை: சேலை. கச்சு: ரவிக்கை

கிள்ளினேன் முத்தமிட்டேன் கெஞ்சினேன் சந்தனத்தை
அள்ளினேன் கொங்கையின்மேல் அப்பினேன் - மெள்ள
வருடினேன் கோதினேன் வள்ளமுலைக் காம்பை
நெருடினேன் நீட்டி நிமிர்ந்தேன் - இருகையால்
கட்டிப் பிடித்தேன் கனியதரத் தேனுண்டேன்
கிட்டப் படுத்தேன் கிடத்தினேன் - எட்டியெனை
மற்கட்டுக் கட்டினாள் வந்துமடி மேற்படுத்தாள்
பிற்கட்டாய்க் கையிறுகப் பின்னினாள் - சொற்கட்டாய்
மின்னினாள் மேலேறி வீழ்ந்தாள் தொடைக்கலையை
மன்னினாள் லீலை வகைதொடுத்தாள் - என்மார்பில்
வள்ளத் தனக்கோட்டு வாரணத்தைப் பாயவிட்டாள்
கள்ளத் தனத்தையெல்லாம் காட்டினாள் - உள்ளேறித்
தவ்வினாள் பீறினாள் சற்றே சிணுங்கினாள்
கொவ்வையிதழ் உண்டாள் குணுகினாள் - ஒவ்வினாள்
ஊடினாள் தம்பலத்தை உண்ணக் கொடுத்தாள்கை
ஆடினாள் முத்திட்டாள் அண்ணாந்தாள் - சோடாக
மல்லாந்தாள் என்சோமனையும்உரிந் தாள்சரசம்
எல்லாந்தான் செய்தாள் இணங்கினாள் - சல்லா

---

637. அப்புதல் : நன்றாகப் பூசுதல்.

639. அதரத்தேன் : இதழ் அமிழ்தம்.

641. தொடைக்கலை : தொடைமீதுள்ள ஆடை.

642. தனக்கோட்டு வாரணம் : ஸ்தனமாகிய யானைக் கொம்பு.

643. கொவ்வை இதழ் : கொவ்வைக் கனிபோன்ற செவ்வித உதடு.

644. ஊடுதல் : பிணங்குதல். தம்பலத்தை உண்ணக் கொடுத்தல் : வெற்றிலையை உண்ண ஊட்டுதல். முத்து : முத்தம்.

645. சோமன் : வேட்டி.

உருக்கத்துச் சேலை உரிந்துவிட்டேன் உள்ளே
பருக்கும்மத பீடம்எட்டிப் பார்த்தேன் - கருத்தில்இதை
நாகபடம் என்றே நவிலலாம் மற்றுமந்த
நாக படத்திலே நஞ்சுண்டே ! - சேகரமாய்
மாங்கனியை நேராய் வகுக்கலாம் அக்கனியும்
தூங்கி வடுப்பட்டுச் சோருமே ! - பாங்கான
மான்குளம்பைச் சொல்லலாம் மாறாமல் அக்குளம்பில்
தேன்குழம்பு தத்தளித்துச் சிந்தாதே ! - கான்சிறக்கும்
தண்டா மரைப்பூவைச் சாற்றலாம் அப்பூவும்
வண்டாரச் சோர்ந்து வதங்குமே ! - கொண்டாடி
ஒப்பாகத் தேன்ராட்டை ஓதலாம் ஆகிலதில்
எப்போதும் செந்தேன் எழும்பாதே ! - அப்பப்பா !
தங்கவள்ளம் ஆகுமென்று சாற்றலாம் அவ்வள்ளத்தில்
எங்கும் சிறுரோமம் இல்லையே ! - மங்களமாய்ச்
சென்றுவரும் சிங்காரத் தேரெனலாம் அத்தேருக்கு
என்றும் திருவிழா இல்லையே ! - நன்றாய்த்தேன்
பெற்றிருக்கும் பூஞ்சுனையைப் பேசலாம் அச்சுனையும்
வற்றியொரு காலம் வறண்டிடுமே ! - பற்றி
இதுவே இதற்கிணையென் றெண்ணி முத்தமிட்டு
மதிமுகத்தோ டேமுகத்தை வைத்து-முதுகையொரு

---

646. மத பீடம் : காமன் கொலுவிருக்கும் ஆசனம்.

647. நாகபடம் : நல்ல பாம்பின் படம்.

648. வகுத்தல் : பிளத்தல்.

649. மான் குளம்பு : மானின் காலின் அடியிலுள்ள பிளவு. கான் சிறக்கும் : சோலையிலே சிறந்து விளங்கும்.

650. வண்டு ஆர : வண்டு விழ.

652. தங்கவள்ளம் : தங்கத் தட்டு.

654. பூஞ்சுனை : அழகிய தடாகம்.

கையால் தடவிக் கழுவிமுலை யும்சுவைத்து
மையார் விழிகளைநா வால்தடவி - எய்யாமல் 656
உச்சிநகம் வைத்தழுத்தி உந்தியிலும் கீறியிரு
கைச்சரசம் மீறிக் கழுத்தணைத்து - வைச்சு
நமசிவய என்றெழுதி நஞ்சுமிலை தள்ளி
அமுத நிலைகண் டழுத்திக் - கமலமலர்க்
கைகோத்துக் கால்கள்பின்னிக் காதில்நுனி நாவைவிட்டு
மெய்யோடு கட்டி விரல்சுவைத்துக் - கைவிரல்
விட்டு நடுமணியை மெல்ல நிமுண்டியிரு
தட்டை விடுத்துத் தலைமாறிக் - கட்டியணைத்து 660
ஏறினேன் சாமி ! இதுசமயம் என்றுள் ;மால்
மீறினேன் மற்றுமொரு வேலைசெய்தேன் - கூறுமங்கை
சும்பனவி தம்புரிவள் சுந்தரந யம்தெரிவள்
கும்பமுலை முண்டுவள்கு டங்கையிலு - டம்பிணைவள்
சந்துகள்பி ணைந்திடுவள் சங்கொலிமு ழங்கிடுவள்
பந்தெனவெ ழும்புவள்ப சந்துடல்ந - ணைந்திடுவள்
அஞ்சுவிசை கொஞ்சுவளோர் ஐம்பதுத ரங்குனிவள்
பஞ்சினடி கொண்டுதைவள் பம்பரமெ - னுஞ்சுழல்வள்
தொங்குவள்தி ரும்புவள்து லங்குவள்கு லுங்குவள்ம
யங்குவள்தி யங்குவள்மு யங்குவள்கு - ணங்குவள்எ 665
ழும்புவள்கி ளம்புவள்வி ழும்புகள்பி துங்கவும்நி
தம்பமதில் என்குறிந எம்பிடவி - டும்பொழுது
மிஞ்சியப னம்பழம்வி ரிந்ததுசி வந்தென
நெஞ்சறிவ யர்ந்துடனெ ருங்கவுயர் - பஞ்சணையில் 667

656. சுவைத்து : பருகிச் சுவை பார்த்து. மையார் விழி : அஞ்சனம் தோய்ந்த கண். எய்யாமல் : எய்ப்பு இல்லாமல்.

657. உந்தி : கொப்பூழ்.

664. பஞ்சின் அடி : பஞ்சுபோன்ற மெல்லிய பாதம்.

மஞ்சணைந்து வண்டிடம ருங்குலுரு டங்கிவிழ
அஞ்சலைம ழிந்திடவ ணிந்தவளை - யுஞ்சிதற 668
மென்குழல விழ்ந்திடமி ரும்மலர சம்பெருக
நன்கலவை சந்தனம ணைந்துதிர - பொன்குலவு
தண்டைகள்சி லம்புகள்ச தங்கைகள்பு லம்பமலர்
விண்டுதிர வெண்புளொலி மிஞ்சவெயர் -
வொண்டரணி 670
சிந்தவிசை கொண்டெதிர்எ ழுந்துவிழு ஜீவனுற
வந்தமத மென்புனல்வ ழிந்தணைமி - தந்திடவே
பாயுமொரு பாற்கடலில் பாவை மணிமார்பன்
சாயும் அனந்த சயனமாய் - ஆயாச
யோகநித்ரை கொண்டோம் ஒருநா ழிகைக்குமேல்
சேகரமாய்ச் சோபத் தெளிவானோம் - வாகாய்
எனதுகம்பிச் சோமன் எடுத்தொருமுன் தானை
தனையிடுக்கிப் போய்க்கதவைத் தள்ளிப்-பனிமொழியாள்
போனாள் அவள்பிறகே போனேனான் வெந்நீரால்
தானேக போகம் தனைத்துடைத்தோம் - மானாளும் 675
நானும் திரும்பிவந்தோம் நங்கைமடி மேற்சாய்ந்து
தானிருக்க யாலென் தலைவனைத்து - மேனோக்கி

மோகனமுத்து அவதாரியைப் பாராட்டுதல்

ஆவிமுத்தம் இட்டுமைப்போல் ஆரிப்ப டிக்கலவி
பாவிப்பார் மன்மதனும் பற்றுதே - தேவரீர் 677

---

671. அணை : படுக்கை.

672. பாவை மணிமார்பன் : திருவைச் சுமந்த அழகிய மார்பை உடைய கடவுள்.

674. கம்பிச் சோமன் : கம்பி வேட்டி. ஒருமுன் தானை: ஒரு முனை. பனிமொழியாள் : குளிர்ந்த பேச்சினள்.

676. நங்கை, எழுவாய்; நங்கையானவள். மடிமேல்: என் மடிமீது.

677. ஆவி முத்தம் : உயிரைப் பற்றுகின்ற முத்தம்.

அல்லால் இனியொருவர்க் காசையுண்டோ? நட்சத்ரம்
எல்லாம் நிலவுக் கிணையாமோ? - வில்லிவட்டு 678
வெல்லக் கரும்புதின்றோர் வேப்பங்காய் தின்பாரோ?
எல்லைப் புவிமேல் இருக்குமட்டும் - நல்லபுது
மாப்பிள்ளைநீர் என்றுகனி வர்க்கமற்ற சிற்றூணும்
சாப்பிடுமென் றூட்டியுப சாரமிட்டாள்-பார்ப்பானுன் 680
உண்ணப்பின் வாங்குவனு உண்டேன் மறுபடியும்
எண்ணத் தொலையாதே என்கலவி - பெண்ணரசே!

விடிந்தபின் தடுமாற்றம்

பாதிசொல்ல ஆனாலும் பத்துநாள் செல்லுமிராப்
போதுவிடிந் தூருணிக்குப் போனேனான் - ஆதளையைப்
பைந்துழாய் என்றே பறித்தேன் தருப்பையென்றே
அந்துவிழும் கோரைமுடி அள்ளினேன் - இந்தமட
மான்முழுக்கு நாளும் மருவவரந் தாருமென்று
நான்முழுக நாகசுனை நண்ணினேன் - மேன்மைநீர்
ஆடினேன் செம்பைமறந் தப்பால்போய் மீண்டும்வந்து
தேடினேன் காணேன் திரும்பினேன் - நாடிவரும் 685
சூத்திரரைக் கண்டால் தொழுதேன் பிராமணரைப்
பார்த்தாசிர் வாதமென்றப் பாலேகி - ஆத்திரமாய் 686

678. நிலவு: அதனைப் பொழிகின்ற மதி. வில்லிவட்டு, தூத்துக்குடி வட்டு.

680. கனி வர்க்கம்: பழ வகை. சிற்றூண்: சிற்றுண்டி.

681. பெண்ணரசே, என்பது ஈண்டு விறலியை அழைத்துச் சொல்வது.

682. ஊருணி: ஊரரால் உண்ணப்படும் நீர்நிலை. ஆதளை: ஒரு செடி.

684. நாக சுனை: மருதூர் தீர்த்தக் கட்டம்.

வன்னமுத்துப் பல்லாளே வந்துகண்டேன் சாமியுமக்கு
அன்னமுத்து வீட்டிலே அன்னமென்றாள் -
சொன்னசொல்லைச் 687
சென்னிமேல் கொண்டு திரும்பியவள் ஆத்திலிற்போய்
உன்னி இலைமுன் உழுக்காந்தேன் - என்னெனவோ
வைத்தாள் அவையெலாம் வாய்க்கே வழங்கவில்லைக்
கைத்தே இருந்ததுநான் கையலம்பித் -
தத்தையைப்போய்க்
கண்டணைந்தேன் ஆசைக் கடலாய் விளக்கில்வந்து
வண்டணைந்தால் போலே மயங்கினேன் - சண்டாள 690

அவதாரியை வஞ்சிக்க மூலிகை சேர்த்தல்

மைமயக்குக் காரியுந்தன் மாதாவும் கூடியென்னைக்
கைமயக்குச் செய்யக் கருவெடுத்தார் - செய்மருந்தில்
மின்னிக்காய் மாங்காய் விளங்காய்புல் லாமணக்குக்
கன்னிக் கிழங்குவெரு கங்கிழங்கு - புன்னைக்காய்
காட்டுக் கிழங்கு கருவாழைச் சல்லிவேர்
காட்டுப்பா கைக்காய்க் கருநாவி - ஆட்டுக்கால்
முள்ளி முருக்கம்பூ முட்குறண்டி வெப்பாலை
வெள்ளரளி செவ்வரளி வெள்ளறுகு - வள்ளி 694

---

687. வன்னமுத்துப் பல்லாள்: அழகிய முத்துக் கோத்ததுபோன்ற பல்வரிசையுடைய மோகனமுத்து.

688. ஆத்திலில்: அகத்திலில். அகம்; வீடு. உழுக்காந்தேன் என்பது வேண்டா வெறுப்பைக் காட்டுகிறது.

689. கைத்து: கசந்து.

690. ஆசைக்கடலாய்: கடல்அனைய பெரிய ஆசை கொண்டு.

691. மை மயக்குக்காரி: மையிட்டு மயக்குகின்றவள். கருவெடுத்தார்: தொடங்கினர்.

692-முதல் 706-வரை அவ்வளவும் மூலிகை வகை.

முருக்கரிசி வேப்பரிசி முத்துமல்லி நெல்லிப்
பருப்பு களாச்சிப் பருப்பு - மருக்காரைச் 695
சுண்டைகரு வேற்கொழுந்து தோதகத்தி போதகத்தி
தொண்டைசிறு கீரை சுடுதுரத்தி - இண்டு

முடக்கொத்தான் மாவிலங்கை முன்னை புளிய
மடல்குரண்டை பாம்பு வணங்கி - கிடைப்பூக்
கரிப்பான் இலைச்சாறு கற்றுளஞ் சோறு
பருத்தியிலைச் சாறு பணுட்டு - மருக்கொழுந்து

மத்தங்காய் வெள்ளரிம ரூமத்துச் செவ்வகத்தி
கொத்தவரை பச்சைசங்கம் குப்பிவேர் - அத்திமொக்குத்
தைவேளை வெட்டிவேர் தான்றிகொடி வேலிவேர்
ஐவிரலி குன்றி அவிரிதொயில் - செய்யாரை 700

ஆடைதொட்டி செந்தொட்டி ஆமணக்குச் சின்னிவேர்
பாடவரை தும்பை பழம்பாசி - காடுமுட்டி
பேய்த்துவரை பேய்த்துமுட்டி பேய்வாளை பேய்மிதுக்கு
பேய்ப்பாகல் பேய்க்குமுட்டி பேய்மருட்டி - நாய்க்கடுகு

தொட்டில்சு ருட்டிதொட்டில் சுண்டிதொட்டில் வாடியல்லி
நெட்டிவெள்ளைக் குன்றி நிலம்புரண்டி - எட்டி
மனமடக்கிக் கொண்டான் மயக்குதிகைப் பூடு
பனைபிரியா நங்கை பசலி - சுனையறுகு

வேம்புமேல் புல்லுருவி வேலாமேல் புல்லுருவி
மாம்பூ நெறிஞ்சிப்பூ மாதுளம்பூ - சேம்பூ 705
திருகுகள்ளி எல்லாம் திருட்டுக் கிழட்டுத்
திருகுகள்ளி கொண்டுவந்து சேர்த்தாள் - பரிவாய்ப்

கடைச் சரக்குச் சேர்த்தல்

பொரிகாரம் போரத்தை பூலாங் கிழங்கு
கரியப்பவ ளம்காசுக் கட்டி - கெருடபச்சை 707

707-முதல் 714-வரைக் கடைச்சரக்கு.

கட்டுபுக் கஸ்தூரிக் கன்மதங்கற் பாசிநவ்வல்
கொட்டைகோ ரோசனைகோ தம்பையகில் - கட்டையரி
தாரமொடு செந்தூரம் சாதிலிங்கம் இஞ்சிகடல்
ஆரையூ சிக்காந்தம் அக்ராணி - கார்போகி
பாசாணம் நேர்வாளம் பச்சைகற்பூ ரம்குடன்
தேசா வரந்துருக செண்பகப்பூ - மாசக்காய் 710
தேவதா ரங்கமுகு சென்னுவி வான்மிளகு
சாவற்பூ செந்தி சவுக்காரம் - பூவழலை
சித்திரமூ லஞ்சாரம் சினக்கா ரம்கோட்டம்
துத்தம் சிறுதேக்குச் சுக்காக்கு - எக்காரம்
திப்பிலிகற் றைக்காம்பு சித்திரத்தை சினிசத
குப்பைமஞ்சள் பாஷாணம் குங்கிலியம் - செப்பில்
உருட்டுமுண்டை மாத்திரையும் ஓவாய்க் கிழட்டுத்
திருட்டுமுண்டை கொண்டுவந்து சேர்த்தாள் -
மருட்டுவிழிப்

பிராணிகளின் உறுப்புக்கள் சேர்த்தல்

புள்ளிமான் மூளை புலிநகம்செம் போத்திறகு
கள்ளியடிச் செஞ்சுகைக் கண்பீழை - முள்ளெலிப்பல் 715
காக்கைக் கடைக்கண் கருநாகத் இந்திரியம்
தூக்கணத்தான் ஈரல்பருந் துப்பிடரி - ஈக்கடைவாய்
பெட்டைநாய் வால்பூனைப் பின்தட்டுக் கூகைமுகம்
நட்டுவக் காலிக்கால் நாய்முகரை - அட்டையுடல்
கட்டெறும்புப் பின்வால் கரிக்குருவி வால்முசுறு
முட்டை கறுங்கரடி முன்வாய்ப்பல் - ஒட்டகைப்பால்
ஆட்காட்டிப் பித்துமா டப்புரு எச்சமனைத்
தேட்கொடுக்குப் பேயனுடல் சிக்குமுக்குத் - தாக்கும்
பொலிப்பெருசுப் பீசம் புழுகுபூ னைத்தோல்
எலிக்கொசுகி ரத்தமுள்ளான் எச்சம் - கலையலகு 720

715-முதல் 723-வரைப் பிராணிகளின் உறுப்புவகை.

கொண்டலத்தி நாக்கு குதிரைக் குடலாந்தை
முண்டவிழி வெளவால் முதுகுத்தோல் - நண்டோடு 721
கிரிச் செவியரணை கிழ்வாய் அலகுகிழட்
டோரி முதுகுகாட் டோணன்பல் - தேரைவால்
மான்முதுகும் பச்சை மயில்முதுகும் மாக்கிழட்டுக்
கூன்முதுகுத் தாய்க்கிழவி கொண்டுவந்தாள் -
ஊன்மருந்தை

மருந்து கூட்டினமை

ஆனைக்கண் தாழியிலிட் டாறுநாள் ஊறவைத்துக்
கானப் பெருமருந்தைக் கண்டித்துத் - தேன்விட்டுக்
கட்டுங் கடைமருந்தில் கள்ளைக் கலந்தபினை
இட்டுத் தயிலம் எடுத்திறக்கி - ஒட்டுக்குத் 725
தள்ளிப் புடம் போட்டுச் சத்தெல்லாம் வாங்கியிரா
வெள்ளி எரிந்து விழும் வேளையிலே - கள்ளமகள்
பல்லழுக்கும் நாவழுக்கும் பாவி தலையழுக்கும்
அல்குல் அழுக்குமதில் மத்தித்துக் - கொல்புலிப்பால்
கள்ளிப்பால் ஆன்பால் கறுப்பிமுலைப் பால்கூட்டி
அள்ளியம்மி மேல்வைத் தரைத்துருட்டிக்-கொள்ளிவாய்க்
கன்னிலி தன்மகளைக் கண்காட்டி இந்த மருந்து
என்னவோ என்றுநீ எண்ணாதே - முன்னமே
கொந்திமன்னன் வாழ்வைக் குலைத்ததிது தாசிகளுக்கு
இந்தமுறை தானடி என்மகளே !- வந்தவரைச் 730
செள்ளையடி யாயடித்துச் செம்பொனெலாம் ஓயாமல்
கொள்ளையடி யென்று கொடுத்திட்டாள் - கள்ளச் 731

---

724. ஆனைக்கண் தாழி : ஆனைக்கண்போன்ற பாத்திரம். கானம் : காடு கண்டித்தல் : நறுக்குதல்.
725. ஒட்டுக்கு : எல்லாவற்றையும்.
729. கல்நீலி: கல்போன்ற வலியமனம்படைத்த நீலி.
731. செள்ளை : கன்னம்.

சிறுக்கியதை வாங்கியொரு செப்பிலே மூடி
இறுக்கியெனக் கப்பளத்தில் இட்டாள் - மறுத்தவலில்

மருந்துண்டு மயங்கியமை

பார்த்திட்டாள் வாழைப் பழத்திலிட்டாள் மாப்பொடியில்
சேர்த்திட்டாள் நானெல்லாம் தின்றிட்டேன் -
தேர்த்திருநாள்
எல்லாம் மறந்துவிட்டேன் எவ்வளவும் சோற்றிறக்கம்
செல்லாது கண்ணுறக்கம் தேடாது - வல்லியிடம்
தள்ளாட்டங் கொண்டு தவறித் திருகுணிக்குள்
எள்ளாட்டும் செக்கின் எருதானேன் - வள்ளம்போல்
வல்லார் முலைக்குமரி வாசற் படிநடக்கும்
கல்லாய்க் கிடந்து கரைந்துவிட்டேன் - வல்லிவாய்த்
தம்பலத்தைத் தின்பதல்லால் சாமி திருக்கோவில்
அம்பலத்தை நான்கண் டறிந்ததில்லை - வம்பிதுடை
நாக தரிசனமே நான்கண்ட தல்லாது
நாக தரிசனத்தை நான்காணேன் - மோகமுள்ள
நாயகியைத் தெண்டனிட்டேன் அல்லால் அழகிய
நாயகியைத் தெண்டனிட்டு நானறியேன் - தீயாள்
அவதானம் பார்ப்பதே அல்லாமல் நான்செய்
அவதானம் பார்ப்பார் அறியேன் - அவளே
குலதெய்வம் என்றவளைக் கும்பிட்ட தல்லால்
குலதெய்வம் கும்பிடஉட் கொள்ளேன் - கலகமொன்றை

வஞ்சிக்கச் சதி

எண்ணினள் கூனி இதுகண்டால் கேட்பாளோ
ஒண்ணுதற்குச் சொன்னாள் உபாயத்தைப் - புண்ணியரே!

---

734. சோற்று இறக்கம் செல்லாது : சோறு இறங்கி உள்ளே போகாது.

735. தள்ளாட்டம் - தடுமாற்றம்.

736. வல் ஆர் : வல்லை நிகர்த்த.

நீரோடும் வாய்க்கால் நெருங்கும் திருச்சுழிகைத்
தேரோடு தென்னூர் திருநாட்டு - நீரும்போய் 743
வந்தால் எமக்குஅன்மை வாராதோ என்றுரைத்தாள்
அந்தக் கணமேநான் ஆமென்றேன் - பந்துமுலைத்

திருவிழாக்காணப் போதல்

தோகாயுன் செய்தியென்ன சொல்லென்றேன்
உம்மைவிட்டு
மாகாணி நாழிகையும் வாழுவதுண்டோ? - மோகியென்று
முத்தணையும் பல்லால் மொழிந்துநகை அவ்வளவும்
பித்தனையால் பூட்டியென்றன் பின்வந்தாள்-அத்தையரும்
கூடவந்தார் அன்றே கொடுமளூர் வந்துடையில்
நாடியசெவ் வேளைவள்ளி நாயகனை - ஆடுமயில்
ஏறுபெரு மானையன்பர்க் கின்பம் தருவானை
ஆறுமுகத் தானையென்னை ஆண்டானை - நீறணிந்த
மெய்யானைச் சோதிவடி வேலானைப் பன்னிரண்டு
கையானை அன்பருள்ளங் கையானைப் - பொய்யரெதிர்
வாரானைத் தென்கொடுமூர் வந்தானைப் பூங்கடப்பந்
தாரானைத் தண்ணருளைத் தந்தானை - நேராகக் 750

743. திருச்சுழிகை: திருச்சுழியல் என்னும் தலம்.

744. அந்தக்கணமே: அந்த க்ஷணமே. பந்துமுலை: பந்துபோன்ற தனம்.

746. அணைதல்: கலத்தல்.

747. உடையில்நாடிய செவ்வேள்: உடையில் அடங்கிய ஆயுதத்தையுடைய செவ்வேள். "உறை நீறுத்திய வாளினால் பகையிருள் ஒதுக்கி" என்றார் பரஞ்சோதி முனிவர்.

749. மெய்: உடம்பு. வடி: கூர்மை. இரண்டாவது 'கையான்' கசக்கமாட்டான்.

750. கடப்பந்தார்: கடப்ப மாலை.

கண்டெதிரே நின்று கருத்துருகிக் கைகுவித்துத்
தெண்டனிட்டு வாழ்த்தித் திரும்பினேன் - பண்டுபுத்தி
சொன்னகுரு வேலுஐய்யர் சுக்கிரவா ரத்துக்கோ
என்னகவைக் கோவங் கெதிர்வந்தார் - அந்நாள்
ஒதுங்கி யொருபால் உடைமரத்துக் குள்ளே
பதுங்கினேன் சென்றூர்தன் பாட்டில் - பிதுங்குமுலைப்
பொற்றொடியும் தாயும் புறப்பட்டார் பாதையில்வந்
துற்றோம் திருச்சுழிகை ஊர்புகுந்தே நாம் - முற்றும்
கருமேனி நாயகனும் கஞ்சனும் காணாத
திருமேனி நாதர்பதஞ் சேவித்து - ஒருமனதாய் 755
நின்றோர் நிமிடத்தில் நேரிசைவெண் பாக்கவிதை
ஒன்றோதி வாழ்த்தினேன் உள்ளன்பாய்த் - துன்றும்
துணைமாலை வென்றகுழல் சுந்தரியென் னம்மை
துணைமாலை பாதம் தொழுது - மணமாலை
பட்டரையர் தந்தார் பணிந்திருகை யால்வாங்கி
ஒட்டிவந்தங் கோர்நாள் இருந்திட்டோம்-ஒட்டகையும் 758

---

751. பண்டு : முன்னே.

752. சுக்கிர வாரம்; வெள்ளிக் கிழமை. கவை: வகை.

755. கருமேனி நாயகன்: விஷ்ணு. கஞ்சன்: பிர்மா. திருமேனி நாதர்; திருச்சுழிகை விற்றிருக்கும் சிவனார் பெயர்.

757. துணைமாலை வென்ற குழல் சுந்தரி: உடன் பிறந்த திருமாலை (நிறத்தால்) வெற்றி கொண்ட கூந்தலை யுடைய அழகி. இரண்டாவது 'துணைமாலை' திருச் சுழியல் தேவியாரின் திருப்பெயரைக் குறிக்கிறது. இந்நூல் அவதானியின் மனைவியின் பெயரும் இவ்வம்பிகை பெயராகிய துணைமாலையே. "துணைமாலை என்னும் ஒரு தோகை மயிலை மணமாலை இட்டு நான் வாழ்ந்தேன்" என்பது காண்க.

பேரானையுமோர் பிடியானை யும்போலே
ஊர்நாடி வந்தோம் உதயத்தில் - நேராய்க் 759

திரும்புகையில் செய்த மோசம்

கருதிப் பரம்பைநகர் கண்டுவைகை ஆற்றில்
வரும்பொழுது மாது வயிற்றைப் - பொருமி 760
வலிக்கிறதொரு சுக்குவர வேணுமென்றாள் நெஞ்சம்
கலக்கமுற்றுச் சென்றேன் கடையில் - விலைக்கொண்டு
எடுத்துவரு முன்நகைகள் எல்லாம் கழற்றிக்
கொடுக்கிவிட்டு முன்சென்றாள் கூனி - அடுத்துநான்
போனேன் கரிக்கட்டை போலநின்றாள் ஏனென்றேன்
தானே வலிபோச்சுத் தாய்க்கிழவி - மானரசே
வாபோக என்றாளென் மாப்பிள்ளையை விட்டுவரேன்
நீபோனால் போவென்றே நீங்கினாள் - மாபாவி
கள்ளனிங்கே வந்தான் கனத்தநகை யவ்வளவும்
கொள்ளைகொண்டான என்றாள்நான் குப்புற்றேன் - மெள்ளக் 765
கொடியிடையைத் தேற்றிநான் கூட்டிவந்தேன் கண்டாள்
கடினமனத் தாய்மகளைக் கட்டி - அடிநாச
காலிநகை எங்கென்றாள் கள்ளர்பறி கொண்டதென்றாள்
நீலியிரு கையும் நெரித்திட்டாள் - மேல்வயிற்றைப்

கிழவியின் பொய்ப்புலம்பல்

பிச்சாள் விழுந்தாள் பிசைந்தழுதாள் தாரைவிட்டாள்
கைச்சாள் உடைமைகொண்ட கள்வனை-நைச்சடித்துக்
கொன்றாலும் கொல்வனே கொள்ளை கொடுக்கிறநாள்
இன்று நமக்குவிதி இப்படியா - நன்று நன்று 769

---

760. பரம்பை நகர்: பரமக்குடி.
765. குப்புற்றேன்: திகில் அடைந்தேன்.
768. தாரை விட்டாள்: கண் நீரைப் பெருக்கினாள்.

பாவியிதோர் பேச்சுப் பழியாச்சே நம்மையொத்த
தேவடியாட் கெல்லாம் சிரிப்பாச்சே - பாவியிது
கொஞ்ச நகையா குறைந்த பொருளா என்
நெஞ்சு தரிக்குமா நிட்டூரம் - அஞ்சு
தலைமுறையாய் வந்ததல்லோ தப்பிலி உன்தேட்டு
உலையேறச் செம்புக்கா சுண்டா - பலவிதமாய்க்
கஞ்சாவுக் கிட்டானோ கள்ளுக்கு விற்றானோ
பஞ்சாப் பறந்ததோ பாவிநகை - கொஞ்சமா
அட்டியலுக் கொத்த அழகிதென்றே நான்பண்ணி
இட்டமுத்து மாலை இழந்தாயோ - தொட்டபுவிக்கு
ஆதரவாய்த் தென்முகவை ஆளும் சிவசாமி
சேதுபதி சங்கராந் தித்தினத்தில் - மாதேயுன்
நாட்டியத்தைக் கண்டுநவ ரத்னமய மாய்ச்சமைத்துப்
பூட்டுபதக் கங்கோடி பொன்பெறுமே - நாட்டிலிசைத்
தென்னவன்போல் வந்தமுத்துச் செல்வமகா ராசனிட்ட
பொன்னரைஞாண் அஞ்சுலட்சம் பொன்பெறுமே -
மன்னர்புகழ்
தாமோ தரன்ராம சாமிமகா ராஜனிட்ட
கோமே தகம்விலை கொஞ்சமோ - காமலிகர்
தண்டிகைக்கோ மான்குழந்தைச் சாமிமக ராசஜனிட்ட
கண்டிவிலை சொல்லக் கணக்கிலையே - முண்டகப்பூப்
பொன்மருவு மார்பன்வள்ளிப் பூலாரு சாமி தந்த
பொன்முருகு போற்கிடைக்கப் போகுதோ - மின்
மலர்க்கைத்

---

771. தரிக்குமா : பொறுக்குமா. நிட்டூரம் : கொடுமை.
772. தேட்டு : சம்பாத்தியம்.
775. சங்கராந்தித் தினம் : பொங்கல் நாள்.
776. இசை : புகழ்.
777. தென்னவன் : பாண்டியன். பொன் அரைஞாண் : இடுப்பில் அணியும் தங்கக் கயிறு.
779. தண்டிகைக் கோமான் : பல்லக்குக்கு அதிபதி. முண்டகம் : தாமரை.

துங்கவளை யேந்தும் துரைராம ராஜனிட்ட
தங்கவளை போற்கொடுப்பார் தானுண்டோ - பொங்குமதி
மந்திரிசா மாவைய மானபரன் கல்லழுத்தித்
தந்தமணி ஓலை தலம்பெறுமே - சுந்தரவேள்
வெங்கிடசுப் பையரிட்ட வெண்முத்து மாலையைப்போல்
எங்கடசிப் போனாலும் எய்துமோ - பொங்குசெல்வ
மாகனவான் பார்புகழும் வாலகிஷ்ண மால்கொடுத்த
மோகனமா லைக்கெவரும் மோகமே - தோகையர்வேள்
திக்கரசர் கொண்டாடும் சேஷய்யங்கார் முன்புதந்த
கைக்கடகம் போலஇனிக் காண்பேனோ - மிக்கசிவ 785
கங்கை நகராளும் கவுரிவல்ல பேந்த்ரனிட்ட
தங்கச் சரிக்குச் சரியுண்டோ - இங்கிதமால்
எட்டமா ராஜன்மகிழ்ந் திட்டகொப்புப் போலுமொரு
தட்டான் அறிந்து சமைப்பானோ - நட்டுலகில்
ஆர்க்குமுப காரி அரியலூ ரான்கொடுத்த
மூக்குத்தி யார்க்கு முதலாச்சோ - தார்க்குழலாய்
நாமினிஎன் செய்வோம் நமைமதிப்பார் யாரென்று
மாமி புலம்பி மயங்கினாள் - காமிநான்

புதிதாக நகை செய்தல்

பண்பாகத் தேற்றிப் பதினாயி ரம்பொனெண்ணிக்
கண்பார்த்துத் தட்டான் கடைக்குப்போய்ப் -
பெண்பாவை 790

---

782. தலம்: உலகம்.
783. எங்கு அடசி: எவ்வளவு தூரம்.
784. மா கனம்: மகாகனம்.
785. கைக்கடகம்: கையில் அணியும் ஒரு நகை.
786. சரி: ஒரு நகை.
787. எட்டமா ராஜன்: எட்டயபுரம் மகாராஜா. சமைத்தல்: செய்தல். நட்டு உலகு. நட்டுவ உலகம்.

வாட்டமெலாம் தீர வகைவகையா நான்செய்து
போட்டழகு பார்த்துடம்பு பூரித்தேன் - கோட்டுமுலை 791
நீலிப் பறிபாதி நிட்டூரத் தட்டார்கைக்
கூலிப்பறிபாதி கொள்ளையிட்டார் - கோலமெத்தை

ஆடை வாங்கிக் கொடுத்தல்

மேலிருந்து நாங்கள் விளையாடும் போதுகிழ
நீலிவந்து பக்கத்தில் நின்றுபையச் - சேலையெல்லாம்
வன்னமில்லைக் கோடியில்லை மாற்றுடை இல்லையென்று
சந்நிதிக்குப் போகத் தடைஏண்டி? - மின்னே!
நிறைந்த குடந்தளும்பி நிற்குமோ யார்க்கும்
பிறந்தஅழ கேயல்லால் பின்னுண்டே - ?
குறைந்திருந்தால் 795
நாணலென்ன கோணலென்ன நாடறிந்த பார்ப்பார்க்குப்
பூணூலும் வேணுமோ போவென்றாள் - வேணதெல்லாம்
என்னிடத்தில் சொல்லாமல் ஏனிருந்தாய் என்றுடனே
கன்னியரைக் கூட்டிக் கடைக்குப்போய் - அந்நேரம்
ஈரஞ் சுணைரோசம் இல்லாக் கழுநீலிக்கு
ஆரஞ்சுச் சேலையிலே ஈரைஞ்சு - பாரிலெனைக்
குட்டைக் கரைச்சேல கூறுமுழுப் பாதகிக்குப்
பட்டைக் கரைச்சேலை பன்னிரண்டு - துட்டக்
குரக்குச்சா யற்கிழட்டுக் கூனிபெற்ற மூளிக்கு
அரக்குச்சா யச்சேலை ஆறு - மருட்டிப் 800

794. வன்னம்: நிறம்.
796. வேணதெல்லாம்: வேண்டியதெல்லாம்.
798. ஈரம்: இரக்கம். சுணை: சுரணை. கழுநீலி: கழுவில் ஏற்றத் தக்க கொடியவள். ஈர் அஞ்சு: பத்து.
799. குட்டு: ரகசியம். குட்டைக் கரைச்சு: ரகசியத்தை வெளியாக்கி. ஏல: பொருந்த.
800. குரக்குச் சாயல்: குரங்கு போன்ற வடிவம். மருட்டி: மயக்கி.

படக்குத்துங் கண்ணுட்குப் பஞ்சவர்ணச் சாய
வடக்குத்திச் சேலையொரு வர்க்கம் - மடக்கூன்

குணக்கேடி ஈன்ற கொடுஞ்சூரக் கள்ளிக்கு
அணக்குடிச்சல் லாச்சேலை அஞ்சு - பணம்பணமென்று

என்னைக் கருக்கும் எமக்கூனி பெற்றமகட்கு
அன்னக் கருக்கிலே ஆறேழு - மின்னிப்

பசந்தகெண்டைச் சேலைப் பழிக்கும் விழியாட்கு
உசந்தகெண்டைச் சேலையிலே ஒன்று - கசந்தமுற்றல்

வேம்புவர்ணச் சொற்கிழட்டு வீணிபெற்ற பாவிக்குப்
பாம்புவர்ணக் கண்டாங்கி பத்தெட்டு-விம்பைவென்ற

வெற்றிக்கம் பத்துமத வேழமுலைச் சேயிழைக்குச்
சுற்றுக்கம் பிச்சேலை சோடிரண்டு - முற்றுமன

வஞ்சத்துச் சல்லாப மாரீசக் கள்ளிக்குக்
கஞ்சத்துச் சல்லாவில் கட்டிரண்டு - செஞ்சேல்

அயிர்க்கண்ணுச் சேயிழையாள் ஆச்சரியம் கொள்ள
மயிற்கண்ணுச் சேலையொன்றும் வாங்கி - உயர்த்தி

அடுக்கினேன் மங்கையுங்கள் அத்தைக்கோ என்றுள்
திடுக்கிட்டேன் மூன்றுசல்லாச் சேலை - எடுத்தேன்

முலையுயர்ந்த மங்கையைத்தன் முன்கண்ட செட்டி
விலையுயர்ந்த வேடிக்கை மெத்த - நிலவு நுதல்

---

801. படக் குத்தும் கண்ணுள்: பட்டுப் போகுமாறு குத்துகின்ற கண்ணையுடையவள். வர்க்கம்: வகை.

802. குணக்கேடி: கெட்ட குணம் உள்ளவள்.

804. பசந்த கெண்டைச் சேல்: பசுமையான கெண்டை மீன்.

805. வேம்பு வர்ணச் சொல்: கசக்கும் பேச்சு. விம்பு: மங்கையர்.

806. கம்பம்: ஆனை கட்டும் தறி. ஜோடு இரண்டு: நான்கு.

807. மாரீசம்: வஞ்சகம். கஞ்சத்துச்சல்லா: கஞ்சம் சேலை. கட்டு இரண்டு: இரண்டு கட்டுகள்.

810. நிலவு நுதல்: திங்கள் போன்ற நெற்றி.

கீற்றினாள் தாயாம் கிழட்டொட் டகைமுதுகில்
ஏற்றினாள் விட்டிற்போய் இன்புற்றோம் - சோற்றுவட்டத்

பலவகைப் பொருட்கும் கொடுத்தல்

தட்டென்றும் செப்பில் சவாதென்றும் கொச்சிவர்னப்
பட்டென்றும் தங்கப் படிக்கமென்றும் - வட்டென்றும்
சிப்பென்றும் தந்தச் சிமிழென்றும் கைக்கிசைந்த
காப்பென்றும் வாடைக் கதம்பமென்றும் - சாப்பிடநெய்
மீனென்றும் குத்து விளக்கென்றும் மானென்றும்
தேனென்றும் பாலென்றும் சீனியென்றும் - தானையிலே
வன்னமென்றும் முத்தென்றும் மாணிக்கக் கல்வயிரச்
சன்னமென்றும் நாட்குநாள் சாதகமாய் - என்னை
வழிக்கட்டிக் கேட்பார்கள் வாரிவா ரிப்பொன்
கிழிக்கட்டிக் கட்டிநான் கெட்டேன் - விழித்து

சாமிக்குக் கொடுத்தல்

வலைசுற்றும் கண்மருட்டி மாறியொரு ராவே
தலைசுற்றி யாடிவந்தாள் தையல் - வலியகிழட்டு
ஓரி தலையாட் டொருபங்கி னும்அந்த
நாரி தலையாட்டு நாலுபங்கு - பாருமென்று
நான்கண்டு நிற்கையிலே நாடிவந்தாள் கூனியத்தை
ஏன்கண்ட கூறிதென்றேன் எங்களிலோர் - மான்பண்டு

---

812. செப்பு : கிண்ணம்.

814. தானை : ஆடை.

816. கிழி : முடிச்சு.

817. ராவே : இராத்திரியே. தையல், மோகன முத்து.

819. ஏன் கண்ட கூறு இது என்றேன் : இந்த நிலைமைக்குக் காரணம் என்ன எனக்கேட்டேன். எங்களில் ஓர்மான் : எங்களுக்குள்ளே ஒரு பெண்.

கன்னிதீப் பாய்ந்தமருள் காணுமென்றாள் மாமியிதற்கு
என்னசொல்லும் என்றேன்மற் றேதுமிலை -
வன்னநிறப்
பட்டொன்று வேலொன்று பன்றியொன்று மாமுனிக்குத்
துட்டுத் தடியொன்று சோமனஞ்சு - கட்டுகருங்
கச்சையெட்டுச் சேவல்பத்துக் கப்பறைப்பூ சைச்செலவும்
மிச்சமொரு சூலாடும் வேணுமென்றாள் - அச்சணமே
என்ஊறு பாடகல இந்தா பிடியுமென்று
முந்நூறு பொன்னைத் முடித்தெறிந்தேன் - அந்நாள்

அவதானி தன் கையிருப்புப் பொருளைக் கொடுத்து வைத்தல்

அரிவையிடம் நான்கேட்டால் அன்றுநீ தாவென்று
ஒருவைரம் கையகலம் உண்டு - பருவி
உழக்குமுத்தும் ஆயிரம்பொன் னும்கொடுத்து
வைத்தேன்
வழக்குமுற்றும் என்றறிய மாட்டேன் - முழக்கமுள்ள

கடன்கள் தீர்த்தல்

பூதநரைக் கூனிவந்த பேயர்களைச் சிறியடி
சேதி தெரியாதா சிறுக்கிகாள் - ஏது
கரும்பு ரசனையென்று கண்டீரோ ஏண்டி
இருந்தஇடம் மேவுதோ ஏதும் - தரும்படிக்குத்
தம்பியிடம் கேட்டால் சரிப்படா தென்பள்ந்த
வம்பிகிட்டப் போயிவரை வைவானேன்-செம்பொனிதைக்

---

820. கன்னி தீப் பாய்ந்த மருள்: கன்னிகையாகத் தீக்குழிபாய்ந்ததால் ஏற்பட்ட மயக்கம்.

823. என் ஊறுபாடு அகல: எனது காதலி காரணமாகத் தோன்றிய துன்பம் நீங்க.

824. அரிவை: பெண்.

826. பூதநரை: மிக்க நரை. பேயர்கள், கடன் கேட்க வந்தவர்கள்.

கோள்வாய்ச் சிறுக்கிகட்குக் கொட்டுமென்று
நான்கொடுத்தேன்
பேழ்வாய்ச் சிறுக்கி புதையலிட்டாள் - நீள்கண்ணன் 829
செம்புவில்லை என்றுவந்தான் செலவில்லை என்றுசெட்டி
வம்புசெய்தான் பொன்எவ் வளவென்றேன் - தம்பி 830
ஒருநூறு பொன்என்றாள் ஒட்டிக் கிரட்டி
இருநூறு பொன்னை எறிந்தேன் - அரிசிவிற்ற
நாரிவந்தாள் உங்களுக்கு ஞாயமோ என்றாள்நான்
வாரி எறிந்தேன் வராகனெலாம் - வீரியமாய்
மீனாறு மாத்தைவில்லை என்றொருத்தி வந்திட்டாள்
நானூறு ரூபாயை நான்கொடுத்தேன் - மானாள்முன்
பட்டுநூற் காரன் பழையகடன் என்றுவந்தான்
எட்டுநூ றள்ளி எடுத்தெறிந்தேன் - கட்டளையாய்க்
கள்ளென்று விற்றகடைக் காரன்வந்தான் பின்னுக்குத்
தள்ளென்று முப்பதுபொன் தான்கொடுத்தேன் -
பிள்ளைநெற்றிச் 835
சுட்டிக்கு வேணுமென்றாள் தோப்பை மூலைக்கிழட்டுச்
சுட்டிக்கிட் டேன்ரூபாய் தொண்ணூறு - வட்டவெள்ளி
முக்காலி வேணுமென்றாள் மூளிக்கா துக்கிழட்டு
முக்காலிக் கீந்தேன்பொன் முந்நூறு - கொக்கித்
திருமுரு கில்லையென்றாள் செம்பொன்இரு நூறு
திருமுருகன் னாளுக்குச் செய்தேன் - அரிவை சிறு 838

829. புதையல் இட்டாள் : புதைத்து வைத்தாள்.

832. நாரி : நங்கை.

834. கட்டளையாய் : முறையாக.

837. முக்காலி : 1 மூன்று காலுடைய ஒரு பீடம். 2 இரண்டு காலோடு கம்பை மூன்றாவது காலாகக் கொண்ட கிழவி.

838. திருமுருகு அன்னாள் : அழகும் இளமையும் கொண்ட அவள்.

வாலு நரிபோல் மயிரிலெண்ணெய் வாங்குவது
போலே பறித்தாளென் பொன்னையெலாம்-மேலிழந்து 839

அவதானி தன் நகையும் விற்றது

பாவை எனநான் பசையற் றிருக்கையில்பொன்
தரவென்றாள் பொன்னரைஞாண் தான்விற்றேன் - மேலும்
கடுக்கன் விற்றேன் கண்டிவிற்றேன் கள்ளிக்கு மேலும்
கொடுக்கவகை யற்றுக் குனிந்தேன் - ஒடுக்கமென்று

அவதானியைத் துரத்த முயற்சி

கண்டுகொண்டார் என்னைக் கடத்த வழிபார்த்தார்
வண்டுகொண்ட கண்ணிகிட்ட வந்துமிராள் - பண்டிருந்த
பாராட்டை விட்டாள் படுக்கவராள் வந்தாலும்
போராட்டம் கொள்வாள் புழுங்குவாள் - ஓரி
செருமுவாள் அந்தச் செருமலைக்கேட் டிந்த
அரிவைவெளி யேறுவாள் அங்கே - ஒருவரல்ல
முப்பது மாப்பிள்ளைமார் மூலைக்கு மூலையதை
எப்படிநான் பார்த்திருப்பேன் ஏங்கினேன் - அப்பால் 845

கிழவி தன்னை ஏசினமை

எனக்கு வயிற்றெரிச்சல் இவ்வளவென் றில்லை
மனக்கவட்டுத் தாய்க்கிழவி வந்தாள் - உனக்கு நெஞ்சில்
ஈரம் இல்லையா? இருந்தஇடம் காணியா?
ஆரும்வந்தால் கண்டொதுங்கல் ஆகாதா? - தூர 847

---

840. பாவை என: உயிரற்ற பொம்மை போல.

841. குனிந்தேன்: தலையைக் கீழே தொங்கப் போட்டேன். ஒடுக்கம் என்று: எல்லாம் திர்ந்து விட்டதென.

843. ஓரி, தாய்க்கிழவி.

846. மனக் கபடு: மனவஞ்சனை.

847. காணி: சொந்தம்.

மடத்திற்போ! திண்ணையிற்போ! மந்தையிற்போ! என்றுள்
அடித்தமுளைப் போலிருந்தேன் அங்கே-மடக்கொடியைக்

தாய் மகளை வைதல்

கிட்டவைத்துக் கூனிசொல்வாள் கெட்டபுத்திக் காரன் முழு
மட்டி இவன் மேலாசை வையாதே! - கெட்டிவெகு
சட்டமொரு காசுமில்லைத் தன்கை இழந்தவனை
விட்டு விரட்டல்லோ வேணுமடி! - மட்டியுனக்கு
என்னசொன்னான் நீயவனுக் கென்னசொன்னாய் நீயுமென்ன
சின்ன வயசா தெரியாதா! பின்னிவனைத்
தொட்டுநமக் காவதென்ன? சுட்டமண்ணும் பச்சைமண்ணும்
ஒட்டுமா? மாப்பிளைமார் ஒட்டுக்கு - வட்டமிட்டுப்
பாந்தித் திரியப் பசையற்ற பையலை நீ
ஏந்தித் திரிவ திழுக்கடி - காந்தமருந்து
இட்டானு கிரைவேர்க் கேவேலும் வேணுமா
தெட்டும் உபாயம் தெரியாதா - தொட்டுனக்கு
மைக்கணிநான் தந்த மருந்துக்குச் சூரியனும்
தெற்குவடக் காகத் திரும்புமே - சக்கைப்

---

850. தன்கை இழந்தவன்: தன்கையில் ஒன்றுமில்லாமல் எல்லாப்பொருளையும் இழந்தவன்.

852. ஒட்டுக்கு: ஒருசேர.

853. பாந்தித் திரிய: ஆசை கொண்டு நேசித்துச் சுற்ற.

854. கிரைவேர்க்கே வேலும் வேணுமா: கிரை வேரைப் பிடுங்கப் பெரிய வேலாயுதமா வேண்டும். தெட்டும் உபாயம்: விரட்டும் வழி.

855. 856. சக்கைப்பயல்: சாரம் இழந்த கரும்புச் சக்கையைப் போன்ற பயல். தட்டி அயல்: தட்டிக்குப் பக்கம்.

பயலைவிரட் டென்றுள்நான் பையவொண்டித் தட்டி
அயலினின்று கேட்டேன் அசந்தேன் - கயவர்க்கு 856

சண்டையிடல்

எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாமேல்
எழுநூறும் தீதாகும் என்று - நழுவிவந்தேன்
பாயிலே சேர்ந்தோர் பணத்தையெல்லாம் கொள்ளையிட்டு
வாயிலே தேய்த்தனுப்பும் மாமியார் - ஓயாமல்
காசைக் கொடுத்தோர் கலவித் தொனிகேட்டு
வாசற் படியிருக்கும் மாமியார் - பேசிவைத்த
பொன்னைக் கொடாமலெட்டிப் போவாரைப் போய்ப் புலிபோல்
மன்னைக் குழிபாயும் மாமியார் - பன்னாளும் 860
செல்லக் கலவியோர் செம்புத்தண் ணீர்தனக்கும்
வல்லிக்கும் சாய்க்குமொட்டை மாமியார் - நல்லமகள்
சேர்ந்தகல வித்தொழிலைத் திட்டிவா சற்கதவில்
ஆந்தியாந் திப்பார்க்கும் அத்தையார் - பாந்தமாய்க்
கைப்பொருளுள்ள பேரைக் கணவனென்றும் வீணர்களை
அப்பனென்றும் சொல்லும்வறட் டத்தையார் - தப்பிமெள்ளப்
பிக்குரைத்துப் போவாரைப் பிசத்தைப் பற்றியிழுத்து
அக்கணமே பொன்பறிக்கும் அத்தையார் - சிக்கெனவந்து

856, 857. கயவர்க்கு - எழுநூறு நன்றி செய்து ஒன்று தீதாயின். எழுநூறும் தீதாய் விடும்" என்பது நாலடியாரிலுள்ள ஒரு வெண்பாவின் பிற்பகுதி. இங்கே அது நன்கு ஆளப்பட்டிருக்கிறது.

859. பேசி வைத்த: ஒப்பந்தம் செய்த.

862. திட்டிவாசல் கதவு: சிறுவாயிலுள்ள கதவு. ஆந்தி ஆந்தி: எட்டி எட்டி.

864. பிக்கு: பொய். பிசம்: விரை. சிக்கென வந்து: விரைந்து வந்து.

ஏதடா பார்ப்பான்நீ என்னசொன்னாய் சொன்னதற்குன்
காதை அறுத்திரண்டு கண்பிடுங்கி - மோதிவிழச்
சில்வாயைப் பேர்த்தெடுத்துத் தேங்காயைப் பின்குடுமி
யில்விழக் கட்டினால் என்சினம்போம் - அல்லவடா
வாவென் றுனையார் வரவழைத்தார்? உன்பாட்டில்
போவென்றால் போகாயோ போக்கறுவாய் - பாவியிவட்கு
அம்மான் மகனாநீ அத்தைமக ளாஇவளும்
சும்மா வருவாளா சொந்தமுண்டா - பம்மியொரு
முக்கிலே நின்று முணுமுணுப்ப தென்னடா
நக்கலே வாடாவுன் நாற்றமெலாம் - பக்கத்தில்
பீத்தாதே சும்மா பிதற்றாதே அக்காடி
ஆத்தே கொடுப்பேனே ஆகட்டும் - பேர்த்துன்
கடையெடுத்துக் கட்டென்று கர்சைகட்டி வந்தாள்
அடைகிடக்கும் பாம்புசினந் தாப்போல் - உடனே
நெருங்கி எருக்கிலைக்கு நீர்வார்த்தால் போலே
இருந்ததே பாதகத்தி! ஏழைக் - குரங்கொன்று
உபகாரம் செய்ய ஒருபாவி வேடன்
அபகாரம் செய்தகதை ஆச்சே! - விபகாரம்
வந்ததே அத்தே! மருமகனென் றில்லையோ
எந்தன் வயிறும் எரியுதே - தந்திரமாய்
என்னதந்தாய் என்றுரைத்தாய் இவ்வூர் அறியாதா
கன்னியறி யாளாநீ காணாயா - பின்னும்

---

866. சினம் : கோபம்.

867. உன்பாட்டில் : நீபாட்டுக்கு. போக்கு அறுவாய் : போக இடம் இல்லாதவனே. பாவி, விளி.

868. பம்மி : பதுங்கி.

869. முக்கு : மூலை.

871. கர்சை கட்டி : ஆடையை இறுக்கிக்கட்டி.

ஒருகை அடித்தால் ஒருகை அணையாதா
விரிவாய்நான் தந்ததெல்லாம் வீணா - இருபத்து 876
நாலாண்டுக் குண்டுமக்கு நான்கொடுத்த
தென்றுரைத்தேதன்
காலாந்த கன்பேச்சைக் கண்டீரோ - கிலாநீ
தந்ததுகால் காசுண்டா சாட்சியுண்டா இத்தனைபேச்சு
இந்தப் படுவானுக் கேதென்று - வந்துவந்து
தில்லுமல்லாய்ப் பேசினாள் சிறுமாட் டின்கழுத்துச்
சல்லிபோல் வெள்ளைநரைச் சண்டாளி - நல்லபட்டாக்
கத்திகொண்டு மேற்சிலுப்பாக் கர்ரனொரு மொங்காரிச்
சத்திரியன் அங்கே சலுகைவந்தான் - அத்தறுவாய் 880
பித்தவெறி மட்டாய்ப் பிரட்டுத் திருநாவி
பத்தமிலாப் பொல்லாப் படுக்காளி - செத்தநாய்ப்
பல்லா ! சுணைகெட்ட பாழ்ப்பதரே ! சீரழிந்த
மொல்லாய் ! கடைப்பட்ட முட்டாளே ! - பொல்லாத
சங்கைகெட்ட மாடே ! தறிபட்ட குக்கலே !
பொங்கல்முட்டி தூக்கி ! புழுக்கையா ! - பங்கரையா !
சத்திகெட்ட பேநாயே ! சாதிகெட்ட ஓநாயே !
புத்திகெட்டு லச்சைகெட்டுப் போனாயே ! - வித்தையாய்
வண்டுபண்ணும் கண்ணியிடம் வைத்திருக்கு தென்றாயே
உண்டுபண்ண வாடா ஒழுவாடி - சண்டிமட்டா! 885

---

877. காலாந்தகன் : எமப்பயல். 'கிலா' என்பதற்கு மலாய் மொழியில் கிறுக்கன் என்பது பொருள். இந்நூலாசிரியர்க்கு மலேயாத் தொடர்பு இருக்கலாம் போலும்.

878. படுவான் : தொலைவான்.

880. மேல் சிலுப்பாக்காரன் : நிறையத் தலைமயிரை வைத்துக் கொண்டு மேலே முறுக்கி விட்டிருப்பவன். சலுகை வந்தான் : துணையாக வந்தான்.

883. குக்கல் : நாய்.

என்றுமடி யைப்பிடித்தாள் எட்டிமயிர் நான்பிடித்தேன்
அன்று குடுமி அவள்பிடித்தாள் - நின்றுசிலம் 886
பத்திலொரு லாகுகொண்டு பாய்ந்துவலு சாறுபோல்
அத்தையைக்கீ ழேபோட் டமுக்கினேன் - தத்தியவிழ்ந்து
என்சோ மனுமுரிய ஈனக் கிழட்டோரி
தன்சேலை யும்போய்ச் சமுசியமாய் - முன்சே
கரித்துநின்றூர் எல்லாம் கடைக்கண்ணால் பார்த்துச்
சிரிக்களன்பீ சத்தைத் திருகி - நெரித்தவள்கை
யால்பிசையப் பூணூல் அவள்கழுத்தைச் சுற்றஅவள்
தோப்பைமுலை என்கழுத்தைச் சுற்றிவரச் -
சாய்ப்பிலே 890
கூனிமிரக் கீழே குழல்பறிய நீர்மலமும்
தானொழுக மாமிதலை பஞ்சுதிரக் - கூனியொரு
வவ்வால்போல் தொத்தவலு சாறுபோல் நானமுக்கச்
செவ்வாய்க் கொடிய சிறுக்கிவந்து - தவ்வி
விலக்கடியாய் என்னை வெளுக்கநரைக் கூனி
பிலக்கநகத் தால்துடையைப் பிய்க்க - அலக்கழிவாய்
நானுமோர் ஆரியப்பேய் நாரியுமோர் மோகினிப்பேய்
கூனியுமோர் புல்லிப்பேய்க் கோலமாய் - மானமற்று
வாழைமரத் தூடே மருமகனும் மாமியரும்
கீழ்மேலு மாகக் கிடக்கையிலே - சூழத் 895

887. வலுசாறு : ஒருபறவை. தத்தி : தாவி.

888. சமுசியம் : சந்தேகம்.

891. கூன் நிமிர : கூனல் நிமிர.

892. தவ்வி : தாவி.

893. விலக்கடியாய் : விலக்குவதற்கு அடிப்பது போல. வெளுக்க : நன்றாகப் புடைக்க. பலக்க : பலமாக. பிய்க்க; கிழிக்க.

895. வாழை மரத்தூடே : வாழை மரத்துக்கு மத்தியில்.

துறட்டை விலக்கிவிட்டார் சுற்றிநின்றார் பின்பு
வறட்டோரி சிறி மகளைப் - புறப்படென்று 896

சபையில் வழக்கிடல்

கந்தைசுற்றி மேலெல்லாம் காரைமுள்ளால் குத்திரத்தம்
சிந்தவடித் தென்னைச் சினந்துறுத்திப் - பைந்தொடியை
முன்னே நடத்தி முறையோ முறையோஎன்று
அந்நேரம் போயழுதாள் அம்பலத்தில் - பின்னாலே
நானும்போய் அங்குநின்றேன் ஞாயம்நடு வில்லையோ
தானிகரே கோயில் தலத்தாரே - மாவிரென்று
ஓலமிட்டாள் கூவென் றுரைத்திட்டாள் மெத்தமெத்தச்
சாலமிட்டாள் பின்னுமுத்துச் சாமிபட்டர் -
நாலுமறை 900
ஐயமில்லா மல்தேர்ந்த ஐயாத் துரைப்பட்டர்
வையகத்தோர் போற்றுமகா லிங்கபட்டர் - செய்யில்
மணக்கும் கமலம் மருதூர்ப்பொற் கோயில்
கணக்குத் துரைராஜ காமன் - இணக்கம் 902

---

896. துறட்டை: சண்டையை. வறட்டோரி, தாய்க்கிழவி.

897. கந்தை சுற்றி: பழய கந்தல் துணியை உடுத்தி. உறுத்தி: பயமுறுத்தி. பைந்தொடியை: மகளை.

898. அம்பலத்தில்: சபையில்.

899. மாவிர்: மானம் உடையவர்களே.

900. ஓலம் இட்டாள்: சத்தம் போட்டாள். சாலம்: தந்திரம். நாலுமறை: நான்கு வேதங்கள்.

901. ஐயம்: சந்தேகம். தேர்ந்த: தெளிந்த. செய்: வயல்.

902. மணக்கும் கமலம்: தாமரை நாறும்.

பழகியநா வாளன் பதியரசர் நேயன்
அழகிய நாகலிங்க அண்ணல் - மழஏறு 903
எருதப்பர் பாதமலர் எப்பொழுதும் போற்றும்
மருதப்ப சுந்தரவில் மாரன் - கருதுசுவைப்
பால்போல் மனது படைத்த குணசாலி
மால்ராம சாமி மதியூகி - கோல 905
மதன்ராம சாமியையர் வள்ளல்பிச்சு வையர்
முதலானோர் முன்னர்முறை யிட்டாள் - பதைபதைத்தாள்

கிழவி கட்சி

சண்டி-இந்தப் பார்ப்பான் சனியன்போல் என்விட்டில்
பண்டொருநாள் வந்தான் பணங்கொடுத்தான் -
ஒண்டொடியை
ஆவலுடன் சேர்ந்திருந்தான் அப்பால் விடிந்தவுடன்
போவானென் றேயிருந்தேன் போகவில்லைப்-பாவியிவட்கு
என்னபொடி போட்டானோ என்னையும்வாய் கட்டிவிட்டான்
பின்னொருவர் கிட்டவந்தும் பேசவொட்டான் - கன்னிலப்
பாமரனுக் கையோ பகலென்றும் ராவென்றும்
ஏமமென்றும் சாமமென்றும் இல்லையே-காமுகனுக்கு 910
அல்குல்பணி யாரமா! அப்பமா! தோசையா!
வெல்லவட்டா! தேன்ராட்டா! மென்கரும்பா!-செல்லமகள்

903. நேயன்: அன்பன். அண்ணல், பெருமையில் சிறந்தவன். மழ ஏறு: இளமையான ரிஷபம்.

904. எருதப்பர்: எருதேறும் சிவபெருமான்.

905. குணசாலி: குணமிக்கவன். மதியூகி. நுண்ணறிவினன்.

907. சண்டி: சண்டிப்பயல்.

909. பேச ஒட்டான்: பேசவிடமாட்டான்.

910. பாமரன்: அறிவு அற்றவன்.

பொன்னுடம்பில் இந்தப் பிழந்தெறிவான் பல்பட்ட
புண்ணுமிலி மேலாறப் போகுதா - நண்ணும் 912

முகமினுக்குக் காரனொரு முட்டாள் விநாடி
மகளைத் துடைமடக்க வொட்டான் - பகலெல்லாம்

அத்தையத்தை என்பான்பின் அந்திபட்டால் கிட்டவந்து
சத்தைசத்தை என்பான் தலைகுனிவான் - மெத்தக்

குதிரையுமே றிக்குதிரைக் குட்டியுந்தான் ஏற
மதிகொண்டல் லோதிரிந்தான் மட்டை - சதிகாரப் 915

பொய்யனிவன் தண்ணீரில் போட்டாலும் தான்நனையான்
வெய்யலிலே போட்டாலும் வெந்திடான் - கையார

ஏதும் கொடுத்ததில்லை ஏனப்பா இந்தமட்டும்
போதும்நீ போவென்றால் 'போகானு - மூதேவி

தானும்த ராணும் தருவாரை யுந்தரவொட்
டானு மிதென்ன அநியாயம் - யினனொரு

புல்லிப் பசாசுவந்தால் போலவந்தான் வாசலிலே
நல்லார்போல் லார்களையும் நாடவொட்டான் -
சொல்லிநித்தம்

சம்பளமாத் தந்தமுத்துச் சாமியா பிள்ளையந்தச்
செம்பிகிட்டப் போனான் திரும்பானே - வம்பியிவன் 920

ஆதரவைக் கண்டே அழகாத்ரி நாயக்கன்
கோதையைப்போய் வைப்புவைத்துக் கொண்டானே -
ஏதோ

ஒருகோடி தாரமென்றான் ஓப்பாக் குடிக்கி
ஒருகோடி யுங்கொடுத்த துண்டோ? - பெருமையாய் 922

---

916. கையார : கைநிறைய.

920. அந்தச் செம்பி : ஊர் அறிந்த மற்றொரு வேசி.

921. கோதை, இன்னொரு தாசி.

922. ஒரு கோடி : 1 கோடி பொன்; 2 ஒரேயொரு கோடியாடை.

மச்சிருக்கும் வீடுகட்டி வைப்பனென்றுன் வீடெல்லாம்
மச்சிருக்கக் கண்டேன் மறுத்தறியேன் - மொச்சையென்றும்
தோசையென்றும் அப்பமென்றும் சோமனென்றும் பாலென்றும்
வாசக் கதம்பமென்றும் மாலையென்றும் - பேசித்
தனக்கென் றிவன்பறித்த தல்லாமல் வேறே
எனக்கென் றிவன்கொடுத்த தில்லை - தனிப்படுக்கைக்கு
எள்ளுப் பொடியென் றிவன்கேட்பான் இல்லையென்முல்
சள்ளுப் பிடிப்பாள்இச் சண்டிமட்டை - உள்ளறைக்குள்
பண்ணைக் கடாப்போல் படுத்துக் கொடுங்கிரந்திப்
புண்ணைக் கொடுத்தானே போக்கறுவான் - பெண்ணழகி
அச்சுப்போய் மேனி அழகுபோய்ப் பாருமிவள்
எச்சுப்போ ளுள்இனிநான் என்செய்வேன் - லச்சைகெட்ட
சந்தைமாங் கொட்டை சலுப்பர் பொதிசுமக்கும்
இந்துகால் முட்டாள் கெடுகம்பன் - மந்தன்
முரண்டழு காசவலை முற்றும்பா தாள
கரண்டி கிராளி கசடன் - பொருந்துகின்ற
நல்ல மரத்தில் நரையான்போல் வாழ்மனையில்
வல்லகுரு நாதனடி வைத்தால்போல் - சல்லியிவன்
ஆடெடுத்த கள்வனைப்போல் ஆட்கண்ட ராமனைப்போல்
நாடிநக் கப்புகுந்த நாயைப்போல் - தேடிவந்தான்
ஆத்தே கொடுப்பானே ஆட்டுக் கிடையைநாய்
காத்தால்போல் என்வீட்டைக் காத்தானே-நேத்தியிது
நேய மகனை நிறைபொதியி லேகழுதை
வாயைவைத்தாற் போலே வழிவைத்தான் - பேயனிவன்

---

923. மச்சு இருக்கும் வீடு: மாடியுள்ள மாளிகை. மச்சிருக்கக் கண்டேன்; மச்சுப்போனதைத் நான் பார்த்தேன்.

931. நரையான்: புல்லுருவி.

பாழுறுவான் என்மகளைப் பங்கப் படுத்திவிட்டான்.
ஏழரைநாட் டானுக்கும் ஏற்றமிவன்-ஊழ்விதியோ 935
தாங்கி நிலுவைச் சலியனை வட்டிக்கு
வாங்கினது போல வலியவந்தான் - ஆங்காண்
நடத்தையுல கத்தில் நரிக்கிடங்கொ டுத்தால்
கிடைக்கிரண் டாடுதின்னக் கேட்கும் - அடுக்கவெனக்கு
உள்ளமுதல் எல்லாம் ஒருமிக்க நாட்குநாள்
கொள்ளையடித் தானே குடிகேடன் - எள்ளளவோர்
துட்டுமில்லை என்வீட்டைத் தூர்த்தகளம் ஆக்கிவிட்டான்
கட்டவொரு சேலையில்லைக் காணுமொரு - வட்டத்துண்டு
ஆனாலும் வாங்கிமகட் கானாலும் தாருமென்று
நானக இன்றுசொன்னேன் நான்கொடேன்-பேநாயே 940
அப்புறம்போ என்றுன்பின் ஆர்கொடுப்பார் காணு
மென்றேன்
தப்பிலிவெள் ளாட்டியென்று தள்ளினன் - குப்புறப்போய்
எட்டிவிழுந் தேன்தலையில் எட்டுமிதி போட்டான்பற்
கிட்டிவிழுந் தேன்மகளைக் கீழ்ப்போட்டுத்-தொட்டித்தான்
நின்றோர் விலக்கிவிட்டார் நீங்கிப் பிழைத்துவந்தோம்
இன்றே இவனையடித் தென்முதலை - ஒன்றும் 943

935. பாழ் உறுவான்: பாழாய்ப் போனவன். பங்கப் படுத்தி விட்டான்: கெடுத்து விட்டான். ஏழரை நாட்டானுக்கும் ஏற்றம் இவன்: ஏழரைநாட்டுச் சனியனுக்கும் மேற்பட்ட சனியனிவன்.

938. குடிகேடன்: குடியைக் கெடுப்பவன்.

939. துட்டு: காசு. தூர்த்தகளம் ஆக்கி விட்டான்; நெல்அடித்த களத்தைப்போலக் கூட்டிப் போட்டு விட்டான்.

940. மகட்கானாலும்: மகளுக்காவது.

941. தப்பிலி வெள்ளாட்டி: திருட்டு வேலைக்காரி.

942. தொட்டித்தான்: அமுக்கினன்.

நிலுவை விடாமலெல்லாம் நிர்வாங்கித் தந்து
தொலிதொலி என்றே தொலித்துக் - கலிகாலப்
பட்டுக் கிடப்பானைப் பார்ப்பாரப் பேயைஎல்லை
விட்டுக் கடத்துமென்றாள் வெங்கூனி - சட்டென்று 945

அவதானி கட்சி

மாதவரெல் லோருமெனை வாருமென்றார் போய்நின்றேன்
ஏதுகாண் இந்த இரைச்சல்என்றார் - சாதகமாய்
முந்துவார் முந்துமுன் முடிச்சவிழ்க்கி முந்திறல்
பிந்திவழக் கென்னநான் பேசுவது - இந்தமுண்டை
வல்லுரைக்குப் பட்ட மரமும் தழையுமே
நல்வயிற்றுப் பிள்ளை நழுவுமே - மெல்லமெல்லப்
பால்பிச் சினவன் பழங்கதையும் தென்னைமரம்
மேலே றினவன் வெறுங்கதையும் - நீலியொரு
வம்பிடைச்சி யான்மூக்கு வாங்கிவள விற்போன
அம்படைச்சி செய்த அபகடமும் - தம்பிள்ளைக்கு 950
அன்று தலைமேல் அரைச்சேலை யைச்சபையில்
சென்றுருத்தி கட்டிவைத்த சித்திரமும் - ஒன்றியொரு
முண்டைகள்ளர் மக்களைப்போய் முத்தமிட்டு மூக்குப்போய்க்
கொண்டவன்மேல் சாட்டிநின்ற கூக்குரலும் - பண்டுவந்தார்
தன்னில்இவர் தாம்பூ சனைம்பூத்த சாமியார்
என்னஒரு மங்கைசொல்லி ஏய்த்ததுவும்-உன்ஆணை 953

---

944. நிலுவை விடாமல்: பாக்கியில்லாமல். தொலி தொலி என்றே தொலித்து: உதை உதை யென்று உதைத்து.

945. வெங்கூனி: கொடிய கூனல் கிழவி. சட்டென்று: விரைவாக.

948. வல் உரை: வலிமையான பேச்சு.

கோழியைநான் தின்றவளென் கோதைதலை
தின்றவளென்று
ஏழை யொருத்தி இயப்பியதும் - வேழத்தை
வெட்டினேன் என்றொருத்தி விண்டுகனு என்றுரைத்த
திட்டாந் திரமும் தெரியாதா - துட்ட 955
மடக்கொடியார் நெஞ்சமும் வானின் முடிவும்
கடற்குழியின் ஆழமுமார் கண்டார் - மடக்கியிவள்
ஓடமேற் றிக்கூலி யும்பிடித்து வாங்குவாள்
நாடிமலை தன்னை நகட்டுவாள் - தாடகையும்
சாட்டியபொய்ச் சூர்ப்பணகை தானும் இவளுமொரு
கூட்டுமுன்பு ராகவனைக் கோட்சொல்லிக் - காட்டில்
விடுங்கூனி சொற்கும் விலகலாம் இந்தக்
கொடுங்கூனி பொல்லாதகூனி - நடந்தவகை
ஒன்றுமில்லை மின்னுள் உடன்கூடி நான்சிலநாள்
அன்றிலும்பே டும்போல் அணைந்திருந்தோம்-நன்றுகக்
கூடி யிருக்கையிலே கூனிமருந் திட்டாள்நான்
வாடி மயக்காய் மதிகெட்டேன் - கோடிக்கு
மேலுண் டிவர்கேட்ட வேலையெலாம் பொன்னுமுத்தும்
நாலு வகைநகையும் நான்கொடுத்தேன் - நீலிபெற்ற
நாரியர்க்கு மாப்பிள்ளைமார் நம்மையல்லால் ஆயிரம்பேர்
ஆரியர்க்குப்பால் போலும் ஆச்சுதுகாண் - ஓரியிவள் 963

955, திட்டாந்திரம்: இல்லாததைச் சொல்லுதல்.

959. விடுங் கூனி: இராமாயணக் கூனியாகிய மந்தரை. கொடுங்கூனி: மோகனமுத்தின் தாயாகிய கொடுமையே உருவான கூனி.

960. அன்றிலும் பேடும் போல்: ஆண் அன்றிலும் பெண் அன்றிலும் போல இணைபிரியாது.

961. மயக்காய்: மயக்கம் அடைந்து.

963. 'ஆரியர்க்குப்பால் போலும் ஆச்சுதுகாண்' என்று கூறுவதனல் ஆரியர் நிறைபப் பால் குடிக்கும்

காசலையாக் கிரைக் கடைக்கும் எதிர்க்கடையொன்று
ஆசிராய் வைத்திருப்பாள் அட்டியிலைப் - பாசாங்குப் 964
பொய்யிலுள்ளம் பூண்டிருந்த பொன்னையெல்லாம்
அள்ளிவிட்டுப்
பையிலுள்ளதெல்லாம் பசையற்றேன் - கையிளைத்த 965
சேதியறிந் தென்னைத் தெருவிலே ஓட்டுதற்குப்
பேதையுந்தா யுங்கூடிப் பேசினார் - 'பாதகா!
என்னடா நீ கொடுத்தாய் ஏனிருக்கி றாய்இருக்கச்
சொன்னவரார்' என்றுமடி தொட்டிழுத்துக் - கன்னத்தில்
அஞ்சாறு போட்டென் அரைச்சோமனைக்கிழித்துப்
பிஞ்சோடப் பூணூலைப் பிச்செறிந்து - நெஞ்சிலே
தாவி மிதித்துமுகம் தன்னிலே துப்பினாள்
பாவி மருகனென்றும் பாராமல் - போவென்று
புந்திநொந்து சொன்னாளே போனதெல்லாம் போகட்டும்
சொந்தஅத்தை என்னைத்தொடலாமோ-இந்தமுறை 970
செந்நாய்க் கிழட்டோரி செய்ததெல்லாம் கண்டிருந்தும்
மின்னாளும் கைநழுவ விட்டாளே - பின்னைநமக்கு
ஆசையென்ன காற்படிமுத் தாயிரம்பொன் ஓர்வயிரம்
வாசமங்கை பால்கொடுத்து வைத்திருந்தேன் -
வேசையிவள் 973

பழக்கம் உடையார் என்று நூலாசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

964. காசு - அலையா : காசுக்கு அலைந்து. ஆசிராய் தயாராக. அட்டியிலை : தடையில்லை.

965. கை இளைத்த : என்கை எய்த்துப் போன.

967. மடிதொட்டு இழுத்து: மடியைப் பிடித்து இழுத்து.

968. அஞ்சாறுபோட்டு : ஐந்தாறு அடிகொடுத்து. அரைச் சோமன் : இடை வேட்டி. பிஞ்சு ஓட : பிய்ந்து போக.

969. துப்பினாள் : உமிழ்ந்தாள். பாவி, தாய்க்கிழவியாகிய மாமி.

எல்லவர்க்கும் பெண்டாட்டி ஈனச்சா திச்சிறுக்கி
கல்லிலே நாருரிக்கும் காந்தாரி - சல்லியிடம் 973

இன்றெனது கைப்பொருளை எல்லாம்வாங் கிக்கொடுங்கள்
மன்றவரே என்று வணங்கினேன் - நன்றடா

கிழவி மறுப்பு

என்றைக்கு நீகொடுத்தாய் எட்டேகா லட்சணமே
ஒன்றுபத்து வாளி ஒளுவாடி - நன்றிகெட்டாய் 975

தூவனுத் தூவனுச் சூவனுச் சூவனுத்
தோவனுத் தோவனுத் தோவனுத் - தூவனு

மையனு ஏழுஞ்சு மையனுப் பேயனுத்
தையனு ஒன்றுமுக்கால் தையனுப் - பொய்யனிவன்

காலும் தலையும்விற்றால் காசும்பெறுததிரு
வாலி இவன்கொடுத்து வைக்கவில்லை - மேலாவில்

சாலக் கிராமலிங்கம் தப்பாமல் கொல்லுதே
மூலைக்கொத் தாள முனியுண்டே - ஏலுவையாய்ச்

சக்கரக்கோட் டைக்கலுங்கில் சத்தி விளங்குதே
மெய்க்காரி யன்காவல் வெல்லுதே - கைக்குமெய்யாத் 980

நீர்ந்து கொடுக்கிறோம் நீப்பறக்கக் காய்ச்சிமழு
வேந்தி எடுக்கிறோம் இல்லையென்றால் - ஒந்தியிந்த

ஐயன் தலையில் அடிப்போம் இருபிறப்புப்
பையல்இழுக் கெப்படிச்சொல் வான்பாபி - தொய்யும் 982

---

974. மன்றவரே : சபையாரே.

975. எட்டேகால் லட்சணம் : அவ லட்சணம். ஒன்று - பத்து வாளி : கயவாளி.

976. தூவன்னுத் தூவன்னு : தூ! த்தூ!. சூவன்னுச் சூவன்னு : சூ! சூ. தோவன்னுத் தோவன்னுத் தோவன்னு : தோ! தோ! தோ!

977. ஏழு அஞ்சு மையன்னு : எருமை! பேயன்னுத் தையன்னு : பேதை! ஒன்றுமுக்கால் தையனு! கழுதை.

982. இருபிறப்புப் பையல் : பார்ப்பாரப் பயல். தொய்யும் : எய்த்துப்போன.

இரவலர்மேல் நீட்டுவர்கை இவ்வுலகை ஆளும்
புரவலர்மேல் நீட்டுவர்பொற் றாளென்று - அருமையாய்க்
கம்பர்சொல்ல வில்லையா கைக்கூழுக் காகஅவ்வை
அம்பலிற்போய் வெண்பா அறையலையா - அம்பலத்தில்
கன்னிலன் பாருமெனக் கண்டு கறுப்பியென்றும்
சொன்னானே வேறொருவர் சொன்னாக்கால்-இந்நேரம் 985
வாயிலகப் பைக்காம்பை வைப்பேன் ஒருமருங்கு
நாயன்மா ரேயுமக்காய் நான்பொறுத்தேன் - ஓயாது
அடுத்தவரெல் லாருமெங்கள் ஆமக்கன் மார்யாம்
பிடித்தவர்க்கெல் லாந்தாம்பெண் டாட்டி - படிக்குள்ளே
எங்கள் குலவிருதே இப்படித்தான் ஏச்சுமுண்டோ
வெங்களிவன் ஊரைவிட்டு வந்தபின்னே - அங்கிந்தத்
தோசிப் பயல்மனைவி துட்டமுண்டை யாலவ்வூர்
வேசிபிழைப் பெல்லாம்போய் விட்டதென்றாள்-பூசுரர்கள்

அவதானி வேண்டுகோள்

சந்தடியி லேராம சாமியையர் என்னெதிரே
வந்துமக்குப் புத்தி மடித்ததோ - இந்தவஞ்ச 990
மைவிழி யார்தம் மனையகல் என்றுமுன்னாள்
அவ்வை உரைத்தமொழிக் கட்டிவந்தால்-தெய்வமல்லோ

983. இரவலர் : இரந்துண்போர்.

987. அடுத்தவரெல்லாரும் எங்கள் ஆமக்கன்மார்! வந்தவரெல்லாம் எங்கட்குக் கணவன்மாரே. யாம் பிடித்தவர்க்கெல்லாந்தான பெண்டாட்டி : நாங்கள் பிடித்த எல்லோர்க்கும் பெண்டாட்டிதாம். படி : பூமி.

988. வெங்கன் : வெறும்பயல்.

989. பூசுரர்கள் : பிராமணர்கள்.

990. சந்தடியிலே : கூட்டத்தில். மடித்ததோ : கெட்டுப் போச்சோ.

991. மைவிழியார்தம் மனை அகல் : மைதீட்டிய விழியையுடைய மங்கையர் மனை செல்தலை நீக்கு.

கொல்லுமென்றார் போங்காணும் கூடிப் பிரியலென்றும்
மெல்லிநல்லாள் தோள்சேர வேணுமென்றும் - சொல்லி

இருக்குதே என்றேன் இருந்தவர்கள் எல்லாம்
சிரித்திட்டார் நானும் சிரித்தேன் - விருப்பமுள்ள

தத்தையர்க்கென் மேல்மனந்தான் சற்றுநே ரங்கோபம்
அத்தையர்க்குங் கூட அரைமனசு - மெத்தவழக்கு

ஆட்டிவைக்க வேண்டாம்நீர் அம்பலத்தில் என்னையினிக்
கூட்டிவைக்க வேணுமென்றுகும்பிட்டேன்-வாட்டமாய் 995

சபையார் ஆறுதல் மொழி

எல்லவரும் என்முகம்பார்த் தேன்காண் உமக்கொருவர்
சொல்வதென்ன சற்றும் சுணையில்லையா - அல்லநீர்

வேசையுடன் அம்பலத்தில் வீணே வரலாமா
ஏசல்உமக் கல்லஇது எங்களுக்கே - பூசுரரே

வேசை உறவும் வியாபாரி தன்னுறவும்
காசுபணத் திற்காண லாமென்றும் - நேசமுள்ள

போதம் தனம்கல்வி பொன்றவருங் காலம்அயல்
மாதர்மேல் வைக்கும் மனமென்றும் - ஈதல்லால்

ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்என்றும் - நீர்படித்த 1000

பாட்டிலுண்டே வேசைமனப் பற்றிரா தென்றுநீர்
கேட்டும் இருப்பீரோ கேளீரோ - நாட்டில்என்றும் 1001

992. கூடிப் பிரியல்: கூடி விட்டுப் பிறகு பிரியாதே. மெல்லி நல்லாள் தோள் சேர வேணும்: மெல்லிய நங்கையர் தோளை அணைய வேண்டும்.

997. ஏசல்: ஏச்சு.

999. போதம்: அறிவு. தனம்: பொருள். பொன்ற: அழிய. அயல் மாதர்; மனைவியல்லாத பிறமாதர்.

1000. நீர்மேல் எழுத்துக்கு நேர்: நீரின்மீது பொறித்த எழுத்துக்குச் சமம்.

1001. வேசை, இங்கு நான்காம் வேற்றுமையில் வந்தது; வேசைக்கு.

பத்திஇவர்க் குண்டா பழய குருடிகத
வைத்திறடி என்றதென்ன வம்புக்கா - எத்தாகக் 1002
கூடவே சாவனென்று கோவணத்தைப் பற்றிமனை
தேடிவந்தாள் செய்தி தெரியாதா - ஊடுகுத்துச்
சண்டா ளரையும்இந்தத் தாசியையும் தியையும்நாம்
கண்டால் ஒதுங்குவதே காரியங்காண் - இண்டாடும்
ஈரமில்லா மூளிகளை ஈனமழு மாறிகளைச்
சீரழிந்த தோசிச் சிறுக்கிகளை - நீர்தானும் 1005
நட்டாற்றுக் கோரையைப்போல் நம்பலா மாஇதெல்லாம்
விட்டாற்றிப் போடுங்காண் வேதியரே - தட்டழிந்து
மட்டதுகெட் டாலுமேன் மக்கள்மேன் மக்களே
கட்டிமா தங்கம்க லீரிடுமா - விட்டொழிந்து
போனல் மருங்குண்டு பொன்கொடுத்தி ருக்குதென்நீர்
ஆனல் வழக்குக் கழகல்காண் - ஈனத்
திருடன் உறவும் திடற்பூளைப் பஞ்சும்
கருடன்வாய்ப் புற்றரவும் கானப் - பெருமழையும்
ஈசனறி யச்சவத்துக் கிட்டஅலங் காரமும்
வேசையருக் கிட்டதுவும் மீளுமோ - தேசத்தில் 1010
சென்றாழி யெல்லாம் சிறப்புமது வித்தையில்பொன்
ஒன்றுயி ரங்கோடி உண்டாமே - நன்றுநன்று

அவதாரி கலங்கித் தெளிதல்

மின்னைவிட்டுப் போமென்று வேண்டினுர் பெண்ஆசை
என்னைவிட்டுப் போமோநான் ஏங்கினேன்-அன்னியரைப்

1007. மட்டு : மதிப்பு. "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்பது மூதுரை.

1008. மருங்கு : (பிழைக்க) இடம்.

1009. திடல் : மேடு. பூளைப்பஞ்சு : இலவம் பஞ்சு. புற்று அரவு : புற்றுப் பாம்பு. கானம் : காடு.

1010. சவம் : பிணம்.

போலே மயங்கிநின்றேன் பூவையை முன்னடத்திக்
காலேறிச் சென்றுள் கடுங்கூனி - வேல்விழியாள் 1013
ஏறிட்டுப் பார்ப்பாள்என் றெண்ணினேன் பார்க்கவில்லை
மாறிட்டு நானும் வழிக்கொண்டேன் - தேறஇடம்
இல்லையே நம்மிட்டவூர் எந்தத் திசையோஎன்
வல்லி இருப்பெவ் வகையாச்சோ - சொல்லிநம்மை 1015
மெட்டுக் கெடுக்க விரட்டிவிட்ட கூனிஇனிப்
பட்டுக் கிடக்கஅறம் பாடுவமா - கெட்ட
நினைவுகொண்டு சீரழிந்து நின்றோமி தெல்லாம்
கனவுகண்டோம் என்றுமனம் கன்றிப் - பனிமொழியாள்
நாக சுனைநீங்கி நாகசுனை நீராடி
நாகலிங்கர் பாதமலர் நான்பணிந்து - தேகமெலாம்

கோவில் வழிபாடு

பூரித்து நிற்கையிலோர் பூரண சந்திரனைச்
சூரியர்கள் பன்னிருவர் சூழ்ந்ததுபோல் - சேர்குழையில்
வண்டேறு நாகேசர் மார்பில் பதக்கனென்று
கண்டேயென் கண்கள் களிகூர்ந்தேன் - பண்டுநான் 1020

1013. காலேறி: நடந்து.

1014. மாறிட்டு: திரும்பி. வழிக்கொண்டேன்: புறப்பட்டேன். தேற: தெளிய.

1015. என் வல்லி: என் கொடியனைய மனையாள். இருப்பு: நிலை.

1016. மெட்டு: மதிப்பு. கூனி: கிழவி. பட்டுக் கிடக்க: இறந்து வீழ. அறம் பாடுதல்: அழியப் பாடுதல்.

1017. சீர் அழிந்து: சிறப்புக் குலைந்து. கன்றி: வருந்தி.

1019. பூரண சந்திரன்: முழுமதி. குழை: காது.

ANT NAGAR, MADRAS-90

பூமிமுற்றும் சுற்றியிது போல்கண்ட தில்லைமுத்துச்
சாமிபட்டரேவிவரம் சாற்றுமென்றேன் - நேமிதொட்டு
மாலையழைத் தோர்சிந்து மன்னவனை வென்றதிரு
மாலைநிக ராகமுக வைக்குள்வந்தோன் - கோலரத்னப்
பைம்பொன் மகுடபதி பாண்டிநாட் டாதிபதி
செம்பிரா டாளவந்த சேதுபதி - அம்புவிக்குள்
விமனிகர் முத்து விஜயரகு நாதசிவ
சாமியிட்ட பொற்பதக்கன் தான்காணும் - சாமிஇது
மட்டுமோ தந்தார் மதிச்சடையான் பங்கில்வளர்
கட்டழகிக் கும்மகர கண்டியிட்டார் - கிட்டப்போய் 1025
பாருமென்றார் பார்த்திப் பதக்கனிட்ட மன்னவனே
தாரணிக்கெல் லாமரசன் தானென்று - சீராகக் 1026

1021. பூமி முற்றும்: உலகம் முழுதும்.

1021, 1022. நேமி தொட்டு மாலை அழைத்து ஓர் சிந்து மன்னவனை வென்ற திருமாலை நிகராக முகவைக்குள் வந்தோன்: சக்கரத்தைத் தொடுத்து மாலைப் பொழுதை வரவழைத்து ஒப்பற்ற சிந்து நாட்டு அரசனாகிய சயத்திரதனை வெற்றிகொண்ட கண்ணபிரானுக்குச் சமமாக முகவாபுரிக்குள் வந்து தோன்றிய சேதுபதி. "பாராழி அவலம் அறப் பாண்டவர்தம் இடர் திரப் பார்த்தன் வாழப், பேராழி அறிதுயிலும் பெருமிதமும் உடன் மறந்து பிறந்த மாயோன், ஓர்ஆழி எழுபரித்தேர் உடையானை மாயையினால் ஒளிக்கத் தன் கைக், கூர்ஆழி பணித்"து, இருள்சூழச் செய்து சிந்து பதியை அர்ச்சுனனால் கொல்வித்தது மகாபாரதக் கதை.

1025. மட்டுமோ: மாத்திரமா. மதிச் சடையான் பங்கில்வளர் கட்டழகி: திங்களை யணிந்த சடையை யுடைய சிவபெருமானின் உடலில் ஒரு பக்கத்தில் வளர் கின்ற கட்டழகியாகிய பச்சைக் கொடி.

1026. தாரணி: உலகம்.

கொண்டாடி நிற்கையிலோர் கோலமணி மண்டபத்தைக்
கண்டிதெவர் செய்தபணி காணென்றேன் - மண்டலத்தில்
ஈதறியார் உண்டோநீர் ஏதறியோம் என்றீர்காண்
சேதுபுவி காக்கும் ஜெகராசன் - மாதுபதி
தாதுபதி கோடி தனபதிமுத் துச்செல்லச்
சேதுபதி அன்புடனே செய்துவைத்த - ஜோதிமணி
மண்டபங்காண் என்றார் மகரா ஜனை நினைத்துக்
கொண்டொருவெண் பாப்புகழ்ந்து கூறினேன் -
திண்டுமுண்டுச் 1030

இழந்த பொருளுக்கு இரங்கல்

சண்டாளிக் கிட்ட தனத்தையெலாம் இப்படியோர்
மண்டபத்தைக் கட்டித்தான் வைத்தோமா!-கண்டமட்டும்
சிங்காரக் கோபுரத்தைச் செய்தோமா ! சந்நிதிமுன்
மங்காமல் தேர்சமைத்து வைத்தோமா!-இங்கென்று
நொந்தேன் வடதிசையை நோக்கினேன் ஊர்நாடி
வந்தேனங் கேயோர் மனங்கொண்டேன் - அந்தோ
இனிக்கோடி ஜென்மம் எடுத்தாலும் பாவம்
பினுக்கோடிப் பேருமா பேராத் - தனுக்கோடி 1034

1027. கண்டிதெவர் என்பதைக் கண்டு - இது - எவர், என்று பிரிக்க வேண்டும்.

1028. ஈதறியார் : இது தெரியாதவர். சேது புவி : சேது நாடு.

1029. தாது : பொன். கோடி தனபதி : கோடி பொருளுக்கு அதிபதி.

1031. சண்டாளி : பழிகாரி. தனத்தை யெல்லாம் : பொருளை யெல்லாம்.

1032. சிங்காரம்: அழகு. தேர் சமைத்து: தேர்செய்து.

1033. நொந்தேன் : வருந்தினேன்.
ஓர் மனங்கொண்டேன் : மனத்தில் ஓர் எண்ணங் கொண்டேன்.

1034. பினுக்கோடிப் 'பேருமோ : பின்னுக்குச் சென்று திரும்புமா. பேரா : திரும்பா.

ஆடிவந்தால் நீருமென்றே அன்றே வழிக்கொண்டு
வாடிவந்தேன் ஐயர் மடத்தருகே - நாடிவரும் 1035
பாதைஎதி ரேயிரண்டு பல்லக்கின் மேல்கனகச்
சோதிமணி ஆபரணத் தோற்றமாய் - ஆதரவாய்
மைத்துனனும் மைத்துனனும் மானவவ தானியிரு
வித்வசனர் வந்தெதிரே மேவினர் - அத்தருணம்
யாவரென்றேன் கூடவந்தோர் ஆதி முதுகுளத்தூர்
மேவுவடி வேலனருள் மேவிவளர் - நாவலவ
தீர வவதானம் செய்சரவ ணப்பெருமாள்
பேரனென வந்த பிரபலவான் - சாரம்
தரும்துவாத் ரிம்சதாவ தானிபுல வோர்யா
வரும்துதிக்கும் பூங்கணைவில் மாரன் - திருந்துமெழில் 1040
நாடு புகழ்சரவ ணப்பெருமா ளுங்கலைமான்
தேடுமவர் மைத்துனசி ரோன்மணியாம் - சோடசவ
தானவே லாயுதமா சற்குணனும் என்றுரைத்தார்
நானுமுட னேயவர்பால் நண்ணியே - தானிருகை
ஏந்தியா சீர்வாதம் என்றேன் அவர்கள்வெகு
சாந்தமுடன் தெண்டன் சமர்ப்பித்தார் - சார்ந்துநீர் 1043

1036. கனகம்: தங்கம்.

1037. மான அவதானி: கவுரவமான அவதானி. இரு வித்வசனர்: இரண்டு படிப்பாளிகள். மேவினர்: சேர்ந்தார். அத்தருணம்: அந்தச் சமயம்.

1039. அவதானம் செய் சரவணப் பெருமாள்: அஷ்டாவதானி ஆதி சரவணப் பெருமாள் கவிராயர்.

1040. சதாவதானி: நூறு அவதானம் செய்பவன். பூங்கணைவில் மாரன்: பூ அம்புகளையுடைய மன்மதன்.

1041. சரவணப் பெருமாள், இவர் முதல் சரவணப் பெருமாள் கவிராயருக்குப் பேரராகிய சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர். இவரே இந்நூல் ஆசிரியர் கலைமான்: சரஸ்வதி.

1043. தெண்டன்: வணக்கம்.

எங்கிருந்து வாரீர் இயானும்அவ தானியென்றேன்
அங்குவரு வாரும்அவ தானியரே - எங்குமுமைச் 1044

சொல்லத் தெரிந்திருப்போம் தோன்றவெதிர்கண்ட தினம்
நல்ல சுபதினங்காண் நாவலரே - தொல்லுலகம்

எங்கும் புரக்கும் இராஜேந்தி ரன்முகவைச்
சிங்கம் சிவசாமி சேதுபதி - எங்கோன்மேல்

சாற்றும்வருக் கக்கோவைத் தண்தமிழும் பாடிஅரங்கு
ஏற்றிஅவ தானமும்செய் தேத்தினேம் - தோற்றமுள்ள

தண்டமிழ்க்கை யாயிரம்பொன் சாதுராச் சாலுவைபொன்
கண்டைஇட்ட சோமன் கடுக்கன்மணிக் - கண்டியொன்று

தந்தான் பதக்கமொன்று தந்தான் இருசிவிகை
தந்தான்கை யால்சிவிகை தாங்கினான் - சுந்தரக்கைத்

தாளம் முழங்கத் தவுல்முழங்கப் பேரிகைஎக்
காளம் முழங்கடங் காமுழங்க - வாள்வேந்தன் 1050

கல்விப் பயிர்தழைக்கக் காசினியெல் லாந்துதிக்கச்
செல்வத் திருப்பவனி செய்துவைத்தான் - வில்விஜயன்

ஞான விஜயரகு நாதசிவ சாமிஅவ
தானியார் என்றுபெயர் தான்கொடுத்தான் - மாநிலத்தில்

கார்கொடுத்தார் போலக் கதிர்மணிச்சம் பாவினையும்
ஊர்கொடுத்தான் கீர்த்தியைஉண் டாக்கினான் -
பேர்படைத்த 1053

1045. தொல் உலகம் : பழைமையான உலகம்.
1046. இராஜேந்திரன் : அரசர்கட்கு இந்திரன். முகவைச் சிங்கம் : முகவை நகர் வருசிங்கம்.
1048. பொன் கண்டையிட்ட சோமன் : தங்கச் சரிகை போட்ட வேட்டி.
1049. இரு சிவிகை : இரண்டு பல்லக்குகள்.
1050. எக்காளம் - டங்கா, வாத்திய வகைகள்.
1051. காசினி யெல்லாந் துதிக்க : உலகமெல்லாம் போற்ற. செல்வத் திருப்பவனி : ஆடம்பர ஊர்வலம்.
1052. 'ஞான விஜய ரகுநாத சிவசாமி அவதானி' என்ற பட்டம் கொடுத்தான்.
1053. கார் : மழை. கீர்த்தி : புகழ்.

பாவலரே என்றிரண்டு பாவலரும் என்முகம்பார்த்து
ஆவலுடன் சொன்னூர் அதிசயித்தேன் - நாவால் 1054
எமக்கும் தியாகமுண்டோ என்றேன் அடடா
உமக்குக் கிடையாத துண்டோ - சமர்த்தன்வெகு 1055
தாராளன் எங்கள்சிவ சாமிமக ராஜன்முல்லைத்
தாராளன் கையால் தருங்கொடை - நேராமோ
கன்னன் கொடையுமொரு கால்கொடையாம் வெள்ளிமலை
மன்னன் கொடையுமரை மாதவரே - தன்னூலே
ஆல்பழுத்தால் பட்சி அறியாதோ தாகித்தோர்
சாப்பிடவா விக்குத் தடையுண்டோ - பேரய்ப்பாரும்

அவதானி சேதுபதியை அணுகத் துணிதல்

என்றூர் அடையாளம் என்னவென்றேன் எங்கோமான்
மன்றல்முர சார்க்குமணி வாயிலிலே - வென்றிகொண்ட
மீனக் கொடியும்நெடு விற்கொடியும் மற்கொடிய
கானப் புலிக்கொடியும் கைகுவித்து - வானத்தைத் 1060
தொட்ட கருடத் துவசத்தைச் சூழ்ந்துவித்தம்
வட்டமிட்டுச் சுற்றி வலஞ்செய்யும் - அட்டதிசை 1061

1054. பாவலர்: பாட்டில் வல்லவர். ஆவலுடன்: பிரியத்துடன்.

1055. தியாகம் உண்டோ: தியாகம் கிடைக்குமா.

1056. தாராளன்: தாராளமானவன். முல்லைத்தார்: முல்லை மாலை.

1057. கன்னன்: கர்னன். வெள்ளிமலை மன்னன்: சிவன்.

1058. ஆல்: ஆலமரம். பட்சி: பறவை. தாகித்தோர்: தாகங் கொண்டோர். வாவி: தடாகம்.

1059. மன்றல் முரசு ஆர்க்கும்: மண வாத்தியம் முழங்கும்.

1060, 1061. மீனக்கொடி: பாண்டிய மன்னனுக்கு உரியது. வில் கொடி: சேர ராஜனுக்குச் சொந்த

மன்னர் திரண்டுகொண்டு வந்தளந்து வைத்தகப்பம்
சொன்னமக மேருவைப்போல் தோன்றிநிற்கும் -
மின்னுமழைக் 1062
கொண்டல் வழங்கிவரும் கொள்கைபோல் ஓயாமல்
தண்டமிழ்ப்பா வாணர் தமிழ்முழங்கும்-வண்டொலிபோல்
சங்கொலிபோல் கஞ்சநா தம்போல் முழவொலிபோல்
இங்கிதசங் கீத இசைமுழங்கும் - பொங்குதிரை
வட்ட நெடுங்கடல்போல் மாருக் கொடைகொடுக்கத்
தொட்ட முரசுத் தொனிமுழங்கும் - இட்ட 1065
அடையாளம் எல்லாம் அறிந்துசென்ருல் அங்கே
கிடையாத துண்டோமெய்க் கீர்த்தி - உடையான்பால்
என்றுசொல்லிச் சென்ருர் இதுநல்ல வேளையென்று
சென்றேன் அவ்வேசையையும் சிந்தித்தேன்-அன்றுநான்

மருதூர் விட்டுச் செல்லுதல்

ஆனை இருந்தே அசைந்தாடும் வாசலிலே
பூனை இருந்து புலம்புமே - மேன்மைப் 1068

மானது. புலிக்கொடி : சோழ வேந்தனுடையது. இம் மூன்று கொடிகளும் சேதுபதிக்குரிய கருடக் கொடியைப் பணிந்து வலஞ்செய்யா நிற்கும்.

1062. சொன்ன மகமேரு : தங்க மயமான மகா மேருமலை.

1063. கொண்டல் : மேகம். தண் தமிழப் பாவாணர் : குளிர்ந்த தமிழ்ப் பாவினுல் வாழ்கின்றவர்.

1064. சங்கொலி : சங்கநாதம். கஞ்சநாதம் : தாள முழக்கம், முழவு : மத்தளம்.

1065. தொட்ட முரசு : கட்டப்பட்ட முரச வாத்தியம். தொனி : இசை.

1066. மெய்க் கீர்த்தி : உண்மைப் புகழ்.

1067. அவ் வேசை : அந்த வேசையாகிய மோகன முத்து.

புலியிருந்த கூட்டிலே போயேறிச் சின்ன
எலியிருந்து சத்தம் இடுமே - வலியவாய் 1069
வைச்சுநான் முத்தமிட்ட வாயிலே மற்றொருவன்
எச்சில்பட முத்தம் இடுவானே - கட்சிகட்டும் 1070
சல்லியிந்தப் பார்ப்பான் சனியன் கழிந்ததென்று
சொல்லிமுத்தன் வந்து சுகிப்பானே - வல்லியுடன்
தூங்குமஞ்சத் தேறும் சுகத்தை நினைத்து நினைத்து
ஏங்கிப் பெருமூச் சிடுவாளோ - பாங்கியரும்
தேடுவார் கூனல் சிறுக்கிமனம் கல்லுநம்மைக்
கூடவொட்டாள் என்றசந்து குப்புற்று - வாடிப்
பரிகொடுத்த பக்கிரிபோல் பாய்மரக்கா கம்போல்
எரிகொடுத்த சேட்டுமத்தில் ஈப்போல் - கருகியுடல்
ஆவிமிகச் சோரநடந் தன்னையெங்கள் நீலகண்டி
கோவிலெதி ராகநின்று கும்பிட்டேன் - பாவனையாய் 1075

பழைய வேதம்ஐயரைக் காண்டல்

ஆதிமுதல் புத்திசொன்ன ஐயரந்த வேளையிலே
ஏதுகவைக் கோஎன் எதிர்வந்தார் - நீதக்
கடன்காரர் தம்மை எதிர் கண்டவரைப் போலே
உடம்பாடி நின்றேன் ஒருபால் - நடந்துவந்து
நண்ணிக்கை கோத்து நயந்துமுது கைத்தட்விக்
கண்ணுக்குக் கண்ணான காவலரே - என்னெய்க் 1078

1074. பரி கொடுத்த பக்கிரி : குதிரையை இழந்த ராவுத்தர்.

1075. நீலகண்டி : நீலகண்டன் மனைவியாகிய பார்வதி.

1076. ஏது கவைக்கோ : எதற்காகவோ. நீதம் : நியாயம்.

1077. உடம்பாடி : உடல் எல்லாம் வெடவெடத்து.

1078. நண்ணி : நெருங்கி. நயந்து : விரும்பி.

குடம்போல் அழகிருந்த கோலம்போய் நோஞ்சல்
உடம்பானீர் ஏதென் றுரைத்தார் - நடந்த 1079
கதையெலாம் சொல்லிநீர் கற்பித்த புத்தி
அதையெலாம் கேளாத தாலே - கெதிபோய் 1080
உருவழிந்தேன் கையிலே உள்ளபொரு ளும்போய்
அருமையும் போனதென்றேன் ஐயா - பெரியமத

வேதம்ஐயர் தேறுதல்மொழி

யானைக்கும் உண்டே அடி சறுக்கிறகால்
தானிடறும் நீரேன் சலிக்கிறீர் - மேனாளில்
விட்டகுறை காணும் விதிவசம் காணுமக்கு
மட்டுமல்லக் காமன் மலர்க்கணையால் - தட்டழிந்து
சங்கரன்இப் பற்றினன் சந்திரனும் அச்சழிந்தான்
இங்கினிநீர் ஏங்குவதில் யாதுபயன்? - சங்கீத
வித்தைக் களஞ்சியமே வேதக் கடலேநீர்
இத்தருண மேஉமதூர்க் கேகுங்கால் - உத்தமரே 1085
கைப்பொருள் தன்னிலே மெய்ப்பொருள் கல்வியென்று
அப்புறம் போனர் அதன்பின்பு - தப்பாமல்

முகவையை நோக்கி நடத்தல்

பூனை இடம்பாயப் போத்து வலம்பாய
நான்நடந்தேன் தென்முகவை நாடினேன் - ஆனகலி 1087

1079. நோஞ்சல் உடம்பு : மெலிந்த தேகம்.

1082. மேனாளில் : அந்தக் காலத்தில்.

1083. காமன் மலர்க்கணை : மதனன் பூ அம்பு. தட்டழிந்து : நிலை தவறி.

1084. சங்கரன் : பரமசிவன். அச்சழிந்தான் : உடல் தேய்ந்தான்.

1085. வித்தைக் களஞ்சியம் : கல்வியின் இருப்பிடம். வேதக் கடல் : மறை வெள்ளம்.

1086 தப்பாமல் : தவறாமல்.

காலம்நமை விட்டுக் கடந்ததினி மேல்நல்ல
காலமென்று வந்தேன்கடைத்தெருவில் - சோலைமலர்க்

நாட்டுவளம்

கொந்தாரும் மாமரத்துக் கொம்பெல்லாம் வானுலக
மந்தாரக் கொம்பை வளைத்துநிற்க - இந்தநிலத்து
உள்ளானைக் கொம்பெலாம் உம்பருல கத்துலவும்
வெள்ளானைக்கொம்புக்கு மேற்பாயக்-கள்ளுண்ணும் 1090
வண்டு வழிகாட்ட வள்ளை செவிகாட்டக்
கொண்டல் கரிய குழல்காட்டத் - துண்டுதுண்டாய்க்
கஞ்சம் முகங்காட்டக் கமுகு களங்காட்டக்
கொஞ்ச இடையைக் கொடிகாட்ட - மிஞ்சுமலர்க்
காந்தள் கரங்காட்டக் கதலி துடைகாட்ட
ஏந்தும் முலையைஇள நீர்காட்டச் - சேர்ந்த
பவளமிதழ் காட்டமுத்துப் பல்வரிசை காட்டக்
கவியும்எள்ளுப் பூநாசி காட்ட - உவகையாய் 1095

1089. கொந்து ஆரும்: பூங் கொத்து மல்கிய. கொம்பு: கிளை. வானுலக மந்தாரம்: தேவலோகத்தி லுள்ள மந்தார மரம்.

1090. உம்பர்: தேவர். வெள்ளானை: ஐராவதம் என்னும் வெள்ளை நிறமான யானை.

1091. வள்ளை: காதனைய ஓர் இலை. கொண்டல்: மேகம். குழல்: கூந்தல்.

1092. கஞ்சம்: தாமரை. கமுகு: பாக்கு. களம்: கண்டம். கொஞ்ச இடை: சிற்றிடை.

1093. காந்தள்: செங்காந்தட் பூ. கரம்: கை. கதலி: வாழை.

1094. கவியும் எள்ளுப் பூ: குவிந்திருக்கின்ற எள் செடியின் மலர். நாசி: மூக்கு.

ஆலுதரம் காட்ட வரால்கணைக்கால் காட்டவுள்ளம்
காலை அனிச்சமலர் காட்டவே - கோலமெல்லாம் 1095
சித்திரம தாய்ப்பூமா தேவிவடி வாகுமென்று
புத்தியினுல் கண்டுமனம் பூரித்தேன் - பத்தியாய்க்

நகர்ச் சிறப்பு

கொத்தளக்கல் கோட்டைகளும் கோலமணி மேடைகளும்
முத்தளக்கும் வாசல் முகப்புகளும் - சித்திரித்த
மாணிக்கக் கொட்டகையும் மாளிகையும் மண்டபமும்
ஆணிப்பொன் வீதி அழகுகளும் - காணும்
அமரா பதிக்கும் அளகா புரிக்கும்
சமமாய் அழகு தயங்கக் - கமலமான்
சேர்க்கையுள்ள வேந்தன் சிவசாமி சேதுபதி
காக்கும் முகவைநகர் கண்டுகொண்டேன் - பார்க்குளன்பர்
பூஜிக்கும் மூலப் பொருளைநெடும் பொற்கோட்டை
வாசற் கணபதியை வாழ்த்தினேன் - ஆசையுள்ளம்

1095. ஆல்: ஆலமரத்தில் இலை. உதரம்: வயிறு. வரால்: வராமீன். கணைக்கால்: முழங்காலுக்கும் பாதத்துக்கும் நடுவிலுள்ள உறுப்பு. உள்ளங்கால்: அடியின் அடிப்புறம்.

1097. சித்திரித்த: அலங்கரிக்கப்பட்ட.

1098. மாணிக்கக் கொட்டகை: சிகப்பு வைத்துப் பதிக்கப்பட்ட கூடம்.

1099. அமராபதி: இந்திரனுடைய அரசிருக்கைத் தலைநகரம். (இந்த உரை எழுதுவோர் இருக்கும் ஊரும் ஆம்). அளகாபுரி: குபேரனது செல்வ நகரம். கமலமான்: கமலத்திலே வீற்றிருக்கின்ற பெண். கமலம்: தாமரை. கமலமான் என்பது செந்தாமரையில் அமர்ந்துள்ள திருமகளுக்கும் வெண் தாமரையில் வீற்றிருக்கின்ற கலைமகளுக்கும் ஒருசேரப் பொருந்தும்.

1100. முகவை நகர்: சேதுகாவலரின் அரசிருக்கைத் தலைநகரம்.

கொண்டேன்நான் உட்புகுந்தேன் கோமான் அரண்மனையும்
கண்டேன் மிகவும் களிகூர்ந்தேன் - வெண்டிரையால்
முத்தம் கொழிக்கும் முகவூர் அணிகண்டேன்
சித்தம் களிகூர்ந்தேன் தென்புறத்தில் - வைத்த
படித்துறையில் மேவிப் படிந்துநீ ராடி
அடுத்து நியமமுடித் தன்பாய்ப் - படித்துறையை

விசுவநாதர் கோவில் கண்டு வணங்கல்

நானேறி னேன்விசுவ நாதர்திருக் கோவிலையும்
தானேயோர் மூன்று தரஞ்சுற்றி - வானுலவும் 1105
கம்பத்தின் முன்னின்று கண்டேன்கோ தண்டமெனச்
செம்பொற் கிரிவளைத்த சேவகனை - நம்புமன்பர்
உள்ளத் திருக்கும் உரவோன் உருவிலான்
கள்ளத்தை மாற்றும்நெற்றிக் கண்ணவனை - வள்ளமுலைப்
பாலுண்ட பிள்ளை பதிகத்துக் காப்பிறவி
மேலுண்டோ இல்லையென்ற வேதியனைச் - சேலுண்ட

1102. கோமான் : அரசன். அரண்மனை : காவலமைந்த மாளிகை. வெண்திரை ; வெள்ளிய அலை.

1103. முகவூர் அணி : முகவை நகர் அழகு.

1104. நியமம் : சந்தியாவந்தனம்.

1105. வான் உலவும் : ஆகாயத்தை அளாவிய.

1106. கோதண்டம் என : கோதண்டம் என்று சொல்லுமாறு. கோதண்டம், ராமபிரானின் வில். செம்பொற்கிரி; மேரு மலை. வளைத்த சேவகன்: சிவபெருமான்.

1107. உரவோன் : வலிமையும் அறிவும் வாய்ந்தவன். உருவிலான் : மன்மதன். கள்ளம் : வஞ்சகம். நெற்றிக் கண்ணவன்: முக்கண் அப்பன்.

1107, 1108. வள்ள முலைப்பால் உண்ட பிள்ளை : கிண்ணத்திலே முலைப்பால் குடித்த ஞான சம்பந்தப் பிள்ளை. "வார் இணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக்

கண்மணியைத் தென்னவர்கோன் கண்மணியை நன்மணியைப்
பெண்மணியை மாலையிட்ட பெம்மானை - வெண்மதியை
ஆதித் தனைவிழியென் றானையன்று நால்வருக்குப்
போதித்த ஞானபரி பூரணனை - நீதிநெறித்
தன்மனத்தான் அத்தானைத் தண்கடுக்கைத் தாரானை
வன்மனத்தார் கண்ணெதிரே வாரானை - என்மனத்துள்
வந்தானைத் தேவர்குடி வாழ்வேறச் சூரைவென்று
தந்தானை முந்தானை தந்தானைச் - செந்தேனார்
கந்தமலர் சூழ்முகவை காசியிலும் வாசியென்று
வந்து முளைத்த மறைக்கொழுந்தைச் - சிந்தைமகிழ்ந்து

கறந்தருளி" எனவும், "அம்பிகை செம்பொற் கிண்ணத்து அமுத ஞானம் கொடுப்ப அழுகை தீர்ந்த செம் பவளவாய்ப் பிள்ளை" எனவும் சேக்கிழாரடிகள் செப்புகிறார். பதிகம்: அப்பிள்ளை பாடிய தேவாரப் பதிகம்.

1109. தென்னவர்கோன் கண்மணி: செழியர்பிரான் திருமகள். பெம்மான்: சிவபெருமான்.

1109, 1110. வெண்மதியை ஆதித்தனை விழியென்றானை: சந்திர சூரியர்களை இரண்டு கண்களாகக் கொண்டவனை. நால்வர்: ஜனகன் முதலியநால்வர். போதித்த: சொல்லாமல் சொன்ன. ஞானபரிபூரணன்: முழு அறிஞன்.

1110, 1111. நீதிநெறித் தன்மன் அத்தான் அத்தான்: நீதிமார்க்கத்திலே நின்ற தர்ம புத்திரனுக்கு மைத்துனனுக்கு மைத்துனன்; தர்மனுக்கு மைத்துனன் கிருஷ்ணன்; அந்தக் கண்ணனுக்கு அத்தான்யார்? சிவன்தானே! கடுக்கைத்தார்: கொன்றைமாலை. வன்மனத்தார்: வன்கண்மையான உள்ளம் படைத்தவர்.

1112. தேவர் குடிவாழ்வு ஏற: தேவர் குடிவாழ்க்கை உயர. சூரை வென்று: சூரனை வெற்றி கொண்டு. தந்தான்: முருகன். முந்து ஆனை, முந்திப் பிறந்த கணேசன். தந்தான்: அவ் இருவரையும் பெற்ற சிவன்.

1113. காசியிலும்வாசி: காசி நகரத்திலும் மேன்மையுடையது.

எங்கோன் சிவசாமி இந்திரன்செய் பூசனைக்காச்
செங்கோல் கொடுத்த சிவக்கொழுந்தைப் - பொங்காழி
மண்டலத்தோர் வாழ்த்துமதி மந்திரிசா மாவையர்
தொண்டுசெய்ய வந்த சுடர்விளக்கைக் - கொண்டமனப்
பத்திக்குள் ளாக்கிப் பரவும் பழவடியார்
புத்திக்குள் தித்திக்கும் புத்தமுதை - முத்தமிழால்
சாற்றும்உயர் கல்வித் தலைவர்பிற விக்கடலை
மாற்றும் பெருங்கருணை வாரிதியைப் - போற்றிமலர்
அள்ளி அருச்சித் தடிபணிந்து தெய்வானை
வள்ளிமண வாளன் மலர்ப்பதத்தை - உள்ளம்வைத்துத்
துண்டப் பிறையணிந்த சொக்கேசர் ஆலயத்தைக்
கண்டுமணி வாசற் கணபதியைத் - தெண்டனிட்டுக்
கோவிலுக்குள் சென்று கொடிமரத்தைச் சுற்றிநந்தி
தேவர் பதத்தைத் தெரிசித்துக் - கூவிநின்று 1120
நாதமறை தேடரிய நாதர்உமை நாதர்சொக்க
நாதிரு பாதமலர் நான்பணிந்து - மோதுகணை
காதண்ட வாங்கிக் கதிர்மகன்மூத் தோனைவென்ற
கோதண்ட ராகவனைக் கும்பிட்டு - வீதியிலே 1122

1114. பொங்கு ஆழி : பொங்கும் கடல்.
1115. மண்டலம் : உலகம்.
1116. பத்தி : பக்தி. பரவும் பழ அடியார் : வணங்கும் பழமையான தொண்டர். முத்தமிழ் : இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ்.
1117. கருணைவாரிதி : கருணைக் கடல்.
1119. துண்டப்பிறை : மூன்றாம்நாட் சந்திரன்.
1121. நாதமறை : ஒலிக்கும் வேதம். மோது கணை : தாக்கும் அம்பு.
1122. காது அண்ட வாங்கி : காது வரையும் (வில்லை) வளைத்து. கதிர் மகன் : சூரிய குமாரனாகிய சுக்ரீவன். மூத்தோன் : அவனுக்கு மூத்தவனாகிய வாலி. கோதண்ட ராகவன் : வில் ஏந்திய தசரதகுமாரன்.

சத்திரச் சாப்பாடு

வந்தேன் சிவபூஜை மாருத மீனாட்சி
சுந்தரக் குருக்களெதிர் தோன்றினார் - எந்தவூர் 1123
ஐயரே என்றார்நான் ஆடானை யூரென்பேர்
செய்யஅவ தானியென்று செப்பினேன் - ஐயரே
வாருமென்று சந்நிதிமுன் வாய்த்தஅன்ன சத்திரத்தில்
சேருமென்றார் யார்சத் திரமென்றேன் - பாராள 1125
வந்தமுத்து வீராயி ராணி மகராசி
தந்தசிவ சாமியன்ன சத்திரங்காண் - வந்தோரைச்
சேய்போல அன்புவைத்துச் சீனிதேன் பாலுடனே
தாய்போல் அமுதூட்டும் சத்திரங்காண் - தூயவரே
பாருமென்றார் உள்ளேபோய்ப் பார்த்தேன்நான் அங்கிருந்தோர்
வாருமென்றார் உள்ள வளத்தையெல்லாம் - பார்த்தங்கு
வானவி னாலும் வழுத்தஅரி தாகிலதை
நானவி னால்நவிலக் கூடுமோ - ஆனாலும்
அள்ளிமலை போல்குவித்த அன்னமலை யைக்கண்டு
வெள்ளிமலை இன்னம்வெள்ளை வேண்டிநிற்கும்-உள்ளபடி
பொன்னம் பருப்பனமேல் போடும் பருப்பைக்கண்டு
இன்னம் பருப்போமென் றெண்ணிநிற்கும் - என்னசொல்வேன் 1131

1125. அன்னசத்திரம்: தருமச்சோறு போடும் மடம்.

1127. சேய்: பிள்ளை. தூயவர்: பரிசுத்தமானவர்.

1129. வான்நாவினாலும்: வானில் உள்ள தேவர்கள் நாவினாலும். வழுத்த: சொல்ல. நவிலக் கூடுமோ: சொல்ல முடியுமோ.

1130. வெள்ளிமலை: பரமசிவன் வாழும் மலை.

1131. பொன்னம்பருப்பு: தங்கமலை. பருப்பு, பருப்பதத்தின் திரிபு. இன்னம் பருப்போம்: இன்னும் பெருப்போம்.

பச்சடியின் வாசனையைப் பார்த்துத்தே வேந்திரனும்
இச்சைவைத்து வந்திருகை ஏந்திநிற்பான் - வைச்சபால்

பாயாசங் கண்ணாலே பார்த்தாலும் வெய்யபசி
ஆயாசம் எல்லாம் அகன்றோடும் - தூயபொடித்

தூவலுக் காசைவைத்துச் சூழ்ந்தமுதம் வாரியுண்ட
தேவரும்சி பார்சு செய்துநிற்பர் - மேவுதில்லை

ஆட்டுக்கு வாய்த்தானும் ஆயனும்வே தக்கோனும்
கூட்டுக் கறிக்குவந்து கூடுவரர் - தேட்டமுடன் 1135

வைத்த ரசங்கண்டோர் வானத் தமுதிரசம்
கைத்தரசம் என்றே கருதுவார் - சத்திரத்தில்

ஆக்கும் அமுதையுண் டார்க்குமன்ம் இன்னமொன்றை
நோக்குமோ கன்னல்நுகர்ந் தோர்வேம்பை-நோக்குவரோ

குன்று மதுரம் கொழிக்கும்ப லாச்சுளையைத்
தின்றால் பிறவிதொறும் தித்திக்கும் - இன்றைக்குப்

பந்திவைத்த மாங்கனிபோல் பண்டிருந்தால் சங்கரனைத்
தொந்திவயிற் றைந்துகரன் சுற்றிவரான் - செந்தேறல்

1133. வெய்ய பசி ஆயாசம்: கொடும் பசியினால் தோன்றும் அயர்ச்சி.

1135. ஆட்டுக்கு வாய்த்தான்: ஆட்டத்துக்கு ஏற்றவனாகிய சிவன். ஆயன்: இடையனாகிய திருமால். வேதக்கோன்: மறைகளின் தலைவனாகிய படைப்புக் கடவுள்.

1136. வானத்தமுதிரசம் கைத்தரசம்: தேவாமிர்தச் சுவை கசப்புடையது.

1137. கன்னல்: கரும்பு.

1138. குன்று மதுரம்: குறையாத இனிப்பு.

1139. தொந்தி வயிற்று ஐந்துகரன்: விநாயகன். இந்த மாம்பழம் அன்று இருந்தால் அந்த ஒரு மாம்பழத்துக்காகச் சிவனைக் கணபதி சுற்றியிருக்கமாட்டான். தேறல்: தேன்.

ஊறுகத லிக்கனியை உண்டால் நரைதிரையும்
மாறுமென்ருல் வெம்பசியை வைக்குமோ - நூறுவிதம்
வைத்த பலகார வர்க்கவகை யித்தனையென்று
அத்தனையும் சொல்லஎன்ருல் ஆகுமோ - நித்தநித்தம்
வானு று போல்கையால் வாரியிட்ட நெய்யாறும்
தேனு று பாலாறும் சேர்ந்திருக்கும் - மேன்மைத்
தனுக்கோடி ஆடியெங்கோன் தன்முகங் கண்ட
மனுக்கோடி கோடியாய் வந்து - தினப்படியே
பந்திவைத்துப் போசனஞ்செய் பண்புகண்டேன் என்வயிறுந்
தொந்திவைக்க உண்டு சுகங்கண்டேன் - வந்தவர்கள்
வெம்பசிதீர்ப் போர்மேல் விசாரணைசெய் வோர்மணியம்
சம்புருதி செய்துவரும் தாட்டிகர் - அன்புடனே 1145
தந்தார்தாம் பூலம் தரித்தேதன் சிவசாமி
இந்திரனைக் காணமனத் தெண்ணினேன் - வந்து

அரண்மனை கண்டு சென்றமை

திருவளரும் வீதிவழி சென்றேன் அநேக
விருதுகளும் மேன்முகப்பு வீடும் - வரிசையாய்
உப்பரிகை மேடைகளும் உச்சமணிச் சாளரமும்
புற்பரா கத்தால் புரிசைகளும் - செப்பமுள்ள 1148

1140. கதலிக்கனி : வாழைப்பழம். திரை : உடற் சுருக்கம்.

1142. வான் ஆறு : ஆகாச கங்கை.

1143. மநு : மக்கள். கோடி கோடியாய் : ஏராள மாய். தினப்படி : நாள்தோறும்.

1147 : திருவளரும் வீதி : செல்வம் கொழிக்கின்ற தெரு.

1148. சாளரம் : ஜன்னல். புற்பராகம் : புஷ்ப ராகம். புரிசை ; கோட்டை.

வெண்தரளப் பந்தல் விரித்தமணிக் கோபுரமும்
மண்டபமும் தூண்டா மணிவிளக்கும் - கொண்டிருக்கும்
சிங்காரங் கண்டேன் சிவசாமி சேதுபதி
எங்கோன் அரண்மனையி தென்றறிந்தேன்-அங்கேபொன்
கோடுண்டு சொர்னக் குடங்கொண் டிருக்கும் மெத்தை
விடுகண்டேன் சுந்தரவி லாசமென்று - நாடினேன்
சொற்கோட்டை இல்லாத் துரைகளெல்லாம்
காத்துநிற்கும்
கற்கோட்டை வாசல் கடந்துவந்தேன் - நிற்கும்
குதிரைலா யங்கடந்தேன் குஞ்சரங்கள் நிற்கும்
புதுமைகண்டேன் அப்புறத்தில் போனேன்-எதிரேயோர்
ஒட்டகையைக் கண்டுகிழட் டோரியோ என்றுமனம்
தட்டழிந்து பின்பு தயிரியமாய்க் - கட்டுமணி
வாசல் கதவோரம் வந்தேன்நீர் ஆர்என்றார்
ஆசுகவி சோடசவ தானியாம் - தேசுடன்வந் 1155
தோமென்றேன் ஆனல் உமக்குத் தடையேது
போமென்ருர் நல்லதென்று போயினேன் - பூமிமேல்

1149. வெண் தரளப்பந்தல்: வெண்முத்துக் காவணம்.

1150. எங்கோன்: எமது அரசன்.

1151. சுந்தர விலாசம், மாளிகையின் பெயர்.

1152. சொற்கோட்டையில்லா: வாய்க்கோட்டை கட்டாத.

1153. குதிரை லாயம்: குதிரைகள் நிற்கும் இடம். குஞ்சரங்கள்: யானைகள்.

1154. கிழட்டு ஓரி: கிழட்டு நரியாகிய தாய்க் கிழவி.

1155. ஆசுகவி: உடனே பாடும் கவிஞன்.

சிவசாமி சேதுபதி கொலுச் சிறப்பு

தங்கத் தகட்டுத் தளந்திருத்தி நாலணியாய்த்
துங்கமா ணிக்கரத்னத் தூணிறுத்திப் - பொங்குகதிர்ப்
பச்சைரத்னத் தாலே பரும்போ திகைசேர்த்து
வச்சிரத்தால் உத்திரங்கள் வைத்திணக்கி - மிச்சமாய்
நீலரத்னக் கையேற்றி நித்திலத்தை வைத்தசொர்ணக்
கோலத் தகடு கொடுவேய்ந்து - மேலாக
ஒன்பதுரத் னத்தையொன்ருய் உம்மிசம் செய்தமைத்த
செம்பொற் கலசச் சிகரம்வைத்துக் - கம்பிகொண்டு
நித்திலத்தைக் கோத்த நெடுஞ்சாலர் வைத்திணைத்துத்
தைத்தமேல் கட்டியொன்று தான்கட்டிக் - கொத்துமலர்
மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுச் சித்திரப்பொன்
வேலையிட்டுப் பொற்படங்கள் மேலிட்டு - மேலுலகத்
தேவரம்பை வந்துநடம் செய்வதுபோல் செங்கமலப்
பூவரம்பைப் பாவைநடம் பூண்டுசெய்யக் - கோவையிட்டுத்

1157. தளம் : தரையைச் செப்பனிடுதல். நாலு அணி : நான்கு வரிசை. துங்க மாணிக்க ரத்னம் : சுத்தமான சிகப்புக்கல்.

1158. போதிகை : தூணுக்கும் உத்தரத்திற்கும் இடையில் வைக்கும் கட்டை. வச்சிரம் : வைரம். இணக்கி : பொருத்தி.

1159. நித்திலம் : முத்து. வேய்ந்து : மேய்ந்து.

1160. சிகரம் : ஸ்தூபி.

1161. சாலர் : தொங்கல்.

1162. மேல்இட்டு : மேலேமாட்டி.

1163. செங்கமலப்பூ அரம்பைப் பாவை நடம்பூண்டு செய : செந்தாமரைவாழ் அரம்பை யனைய திருமகள் நடனம் ஆடிக் களிக்க.

தேவேந் திரனரசு செய்யுமணி மண்டபம்போல்
மேவுமணி மங்களவி லாசத்தில் - பூவிருக்கும்
பொன்னும் திருவிருக்கப் பூண்டதுபோல் சோதிரத்னம்
மின்னும் தவிசு விரித்திருக்க - மன்னுகதிர் 1165
ஆதித்தர் ஆயிரம்வந் தன்புவைத்துக் காண்பதுபோல்
சோதிப் பெருவிளக்கம் சூழ்ந்திருக்க - ஓதுபகல்
வர்த்திமதி தன்களங்கம் மாற்றவே தூண்டுதல்போல்
பத்திபத்தி யாகஇரு பால்விளங்க - மொய்த்தயன்னார்
தஞ்சம்பார் வேந்தரீ தான்பார்கண் பாரென்று
குஞ்சம்பா வாடைகரங் கொண்டுநிற்க - நெஞ்சிலுனது
ஆற்றலறி யாதுபகை ஆனேனும் சிறைவிடென்று
வேற்றரசர் வெண்கவரி வீசிநிற்கப் - போற்றும்பிர
தாபாசுத் க்ரீபா தரியலர்கோ பாபதும
நாபாபூ பாரநர பாலகுல - தீபா 1170
கனதனகு பேராச காயசம்ர தர்யா
தனதான கன்னு சனகா - வனதான
சோமா பரிதிகுல சுந்தரா முல்லைமலர்த்
தாமாசங்க் ராமா தனுராமா - வீமசெய 1172

1164. தேவேந்திரன் அரசு செய்யும் சுதன்மை என்னும் அரசாட்சி மண்டபம் போன்ற மங்கள விலாசம் என்னும் தர்பார் மண்டபம்.

1165. சோதி ரத்னம் மின்னும் தவிசு விரித்திருக்க: ஒளி மணி மின்னிடும் கம்பளம் விரித்து.

1166. ஆதித்தர்: சூரியர். ஆயிரம் சூரியர்கள் சூழ்ந்தது போன்றிருந்தது விளக்கின் தோற்றம்.

1168. தஞ்சம்: அடைக்கலம். குஞ்சம் பாவாடை: மரியாதைக் குரிய விருது வகை. கரம்: கை.

1169. ஆற்றல்: வலிமை. வேற்றரசர்: பகை வேந்தர். வெண் கவரி: வெஞ்சாமரை.

1172. பரிதி: சூரியன். தாமம்: மாலை.

சத்ருசங் காரா சமரரண கம்பீரா
மித்ருபரி பாலனு வில்விஜயா - மொய்த்துவரு 1173

மைக்கால முக்கடம ழைப்புனல்கொ ழித்துலவு
கைக்கரிமி குத்திடுக திப்பரிகள் - திக்கரசர்

கப்பமிட மிக்கமகிழ் கைப்பதும வச்சிர தா
மப்புயவி லட்சணம கத்துவசு - கற்புதசங் 1175

தானசந்தி ராசவுந்த ராபுரந்த ராநிறைந்த
ஞானதந்தி ராசிறந்த ராமச்சந்த்ரா - மேன்மைதரு

மேதினியை ஆளுமநு வேந்தா விஜயரகு
நாத சிவசாமி ராஜேந்த்ரா - நீதிநெறி

வேந்தா பராக்கு விஜயா பராக்கென்று
சேர்ந்தொருபால் கட்டியங்கள் செப்பிநிற்க - வாய்ந்தகஞ்ச

மாதுபதி யாகவளர் மார்பன் சிவசாமி
சேதுபதி சிங்கா தனத்திருக்க - ஆதரவாய்

இந்திரன்போல் வீற்றிருக்கும் எங்கோன் மனதுமகிழ்
மந்திரிசா மாவையர் வந்திருக்கச் - சுந்தரம்சேர் 1180

1173. சத்ரு சங்காரன்: எதிரியைத் தொலைப்பவன். மித்ரு பரிபாலன்: அடைந்தோரைக் காப்பவன்.

1174. மைக்கால முக்கட மழைப்புனல் கொழித்து உலவு கைக் கரி: கறுத்த கால மழை நீரைப்போல் மூன்று மதத்தையும் கொட்டித் திரிகின்ற துதிக்கையுடைய யானை. மிகுத்திடு கதிப் பரிகள்: அதிகமான வேகம் வாய்ந்த குதிரைகள். திக்கு அரசர்: எல்லாத் திசைகளிலுமுள்ள வேந்தர்.

1175. கப்பம் இட: திறை செலுத்த.

1178, 1179. கஞ்சமாது பதியாக வளர் மார்பன்: தாமரைப் பெண்ணாகிய திருமகள் இடமாகக் கொண்டு வாழ்கின்ற மார்பையுடைய திருமால். சிங்காசனம்: சிங்கம் சுமந்த ஆசனம்.

தானு பதிகள்தள தந்திரிகள் மந்திரிகள்
சேனு பதிகள்வந்து சேர்ந்திருக்க - மாநாட்டுப் 1181
பூமன்னர் கட்டுதிறை பொன்மலைபோ லேகுவிய
மாமறையோர் ஆசீர் வதித்திருக்கத் - தாமவேல்
போர்த்தலைவர் சிங்கங்கள் போல்வந்தெங் கோன்சமயம்
பார்த்தெதிரே நின்று படைதிரட்டி - ஆர்த்தகலிங்
கத்தரச ரைப்பிடித்துக் கட்டவோ கண்டுசி
னத்தரசை வென்றுகொடி நாட்டவோ - மட்டில்லா
வங்கர்தமை வென்றுதிரை வாங்கவோ வந்துதொழாக்
கொங்கர்புவி எங்கும்கைக் கொள்ளவோ - எங்கள்தமைக்
காவையா என்றவரைக் காக்குமன்னு உத்தரவு
தாவையா என்றெதிரே சாற்றிநிற்கத் - தாவுமணித்
தங்கப் பிரம்புகொண்டு தாள்பணியா மண்டலிகர்
அங்கத்தை வாட்டும் அரிக்காரர் - அங்கங்கே
கொங்கரை யாயிரம்பொன் கொட்டினர் கோடிசெம்பொன்
கங்கர்கொண்டு வந்துதிறை கட்டினர் - மங்களஞ்சேர்
சிங்களத்தார் பத்துலட்சம் செம்பொன்னிறுத்
துக்கொடுத்தார்
வங்களத்தார் மாணிக்க மாலைதந்தார் - மங்காமல் 1189

1181. தள தந்திரிகள் : படைத் தந்திரம் தேர்ந்தவர்கள்.

1182. மாமறையோர் : பெருமை பொருந்திய மறைகளை உணர்ந்தவர்கள். ஆசிர் வதித்தல் : வாழ்த்துக் கூறல். தாமவேல் : மாலை கட்டிய வேலாயுதம்.

1186. கா ஐயா : காப்பாற்றுவாய் ஐயா.

1187. தாள் பணியா மண்டலிகர் : பாதத்தில் விழ்ந்து வணங்காத அரசர். அங்கம் : உடம்பு. அரிக்காரர் : தண்டக்காரர்.

1189. சிங்களத்தார் : இலங்கைக்காரர்.

அச்சியர் அச்சிமட்டம் ஆயிரந்தந் தார்துளுவர்
பச்சையிலே பத்துப் படியளந்தார் - மச்சர் 1190
மலையாமல் கோடிபரி வந்துதந்தார் வங்கர்
கொலையானை நூறு கொடுத்தார் - சலநிதிசூழ்
மண்பார் புரக்கும் மணிமகுட வேந்தாகின்
கண்பார்ப்பாய் என்றெதிரே காட்டிநிற்கப் - பண்பாய்
இணங்கமழு வாளேந்தி ஈட்டிகொடு தும்பை
மணங்கமழும் வீரர் வளையக் - குணங்காத
அம்புவில்நா ணேகொண் டசையவரும் மன்னர்சிலர்
அம்புவிநாணேந்தி அடர்ந்துநிற்கச் - செம்பொன்
சிறைநாட்டோன் னார்வணங்கும் சென்னியின்மேல் மின்னார்
முறைநாட்டி யந்தான் முழங்க - நிறையொலிசேர் 1195
விரியங்கொள் மும்முரசம் வேலையொலி போல்முழங்கத்
தூரியங்கள் மேளத் தொனிமுழங்கப் - பாரிலுள
துங்கப் புரவலர் சோதிமுடி மீதுசிலர்
தங்கப் பிரம்புகொண்டு சாடிநிற்கச் - செங்கண்மால்
எங்கோன் சிவசாமி இந்திரன்போல் வீற்றிருக்கும்
சிங்காரம் கண்டு தெரிசித்தேன் - அங்கேநான் 1198

1190. அச்சியர் : ஒரு தேசத்தார். அச்சிமட்டம் : அவர்கள் தேசத்துக் குதிரை மட்டம்.

1191. கோடி பரி : கணக்கற்ற குதிரை. சலநிதி : கடல்.

1192. மண்பார் : மண்ணாகிய பார் ; மீமிசை.

1196. மும்முரசம் : மணம், போர், தர்மம் இம்மூன்றையும் குறிக்கும் முரசம். வேலை : கடல். தூரியங்கள் : வாத்திய வகைகள்.

1197. புரவலர். மன்னவர். சாடி : தாக்கி.

1198. சிங்காரம் : கண் கொள்ளாக் காட்சி.

அவதூரலி பா அரங்கேற்றல்

மங்களமென் றுசீர் வதித்திருகை யால்எலுமிச்
சங்கனியும் கைக்கொடுத்துத் தானிருந்தேன் - துங்கமிகு
சத்துரு சங்காரா சங்கிராம கெம்பீரா
சுத்தரண சூர துரந்தரா - மித்ருபரி 1200
பாலா தருமபரி பாலனு வெஞ்சமர
கோலாக லாவிர கோதண்டா - மாலாவ
தாரா தவளமலர்த் தாரா தரளமணித்
தாரா உதார சவுந்தரா - விராதேர்த்
தண்டாப்ர சண்டா சகலகுண சம்பனு
கண்டா மணியணி காண்டீபா - தொண்டர்பணி
தாணுபதம் போற்றிசெயும் தாய்முத்து வீராயி
ராணிபெற்ற செல்வ நரபாலா - சேனுர்
மகபதிக்கு நேராக வந்துலகோர் வாழ்த்த
முகவைநகர் காக்கும் முதல்வா - சகடிசையோர் 1205
தாதாவாய் வந்தபரந் தாமா விஜயரகு
நாத சிவசாமி ராஜேந்த்ரா - மாதவன்கை
காட்டுமுனம் சிந்தரசைக் கைக்கணையால் வென்றுபுகழ்
நாட்டும் சிவசாமி ராஜேந்த்ரா - நீட்டியகை 1207

1199. ஆசீர் வதித்து : வாழ்த்துக் கூறி.

1201, 1202. மாலாவதாரா : திருமாலின் அவதாரமே. தவளமலர்த்தாரா : முல்லைமாலையாய். தரளமணித்தாரா: முத்துமாலை அணிந்தவனே. உதார சவுந்தரா: பெருந்தன்மையையே அழகாகக் கொண்டவனே.

1203. காண்டீபன் : அர்ச்சுனன்.

1204. தாணு : சிவபிரான். நரபாலன் : மன்னன்.

1205. மகபதி: மகம் செய்து பதவிபெற்ற இந்திரன்.

1206. தாதா : கொடையாளி.

1206, 1207. மாதவன் கை காட்டு முனம் சிந்து அரசைக் கைக் கணையால் வென்று புகழ் நாட்டியவன்,

ஊற்றுமத யானைலட்சம் ஒன்னார் திறைகொடுத்துப்
போற்றும் சிவசாமி பூபாலா - சாற்றுமணி 1208
வண்ணப் பரிதிகுல மன்னாதென் னாவென்று
வண்ணப்பா வெண்பா மணிமாலை - பண்ணாகத்
தானகன்ன னுக்கெதிரே சர்க்கரைப் பந்தலின்மேல்
தேன்மாரி பெய்த சிறப்புப்போல் - லலிதமாய்ப் 1210
பாடிப்ர சங்கித்தேன் பண்ணுமவ தானமுறை
நாடிப் பதினாறும் நான்செய்தேன் - கூடினபேர்
காளமே கம்போல் கவிபொழிந்த தால்இவனும்
காளமே கப்புலவன் காணென்றார் - நீளுமனக்
கண்ணால்எங் கோன்தெளிவாய்க் கண்டான்அகத்தியற்கும்
அண்ணாவி யாமென் றதிசயித்தான் - வண்ணமணிச்

பரிசில் பெற்றமை

சாதுராச் சோமன்அங்கி சாலுவைமா ணிக்கம்வைத்த
மோதிரம்பொன் ஆழிமுத் துக்கடுக்கன் - சோதிமணி
முத்தாரம் கண்டி முருகுமத யானைபரி
கொத்தாரம் தந்துபணம் கோடிதந்தான்-அத்தரொக்கம்

விஜயன். "உடற்றுக என்று, திண்சயங்கொள் விஜயனுக்குச் சிந்துபதி தனைக்காட்டித் திருமால் சொன்னான்." என்று இயம்புகிறார் வில்லிபுத்தூரார்.

1209. பண்ணாக: இசைக்குப் பொருந்த.

1210. தான கன்னன்: கொடைக் கர்னன்.

1211. பாடிப் பிரசங்கித்தேன்: பாடி விரிவுரை நிகழ்த்தினேன். பதினாறும் நான் செய்தேன். சோடசவதானம் பண்ணினேன்.

1212. காளமேகம்: கார் காலத்து மேகம்.

1213. அகத்தியற்கும் அண்ணாவி: தமிழ் முனிவனாகிய அகத்தியனுக்கும் ஆசிரியன்.

1214. ஆழி: மோதிரம்.

1215. முத்தாரம்: முத்துமாலை. பரி: குதிரை. அத்த ரொக்கம்: கைப்பணம்.

சம்பளந்தந் தான்தங்க தண்டிகைதந் தான்தயவாய்
உம்பளந் தான்விளையும் ஊர்தந்தான்-அம்புவியாள் 1216
மன்னன்முத்துச் செல்ல மகராஜன் வாய்த்தகொடைக்
கன்னன்முத்து மாலை கழுத்திலிட்டான்-தென்னனென்று
பூமிபுகழ் சற்கீர்த்தி பூண்டதிரு மால்ராம
சாமிமன்னன் கண்ட சரந்தந்தான் - நேமமுள்ள
தன்மமனத் தான்குழந்தைச் சாமி பதக்கனிட்டான்
வன்னிபூ லாறுரத்ன மாலைதந்தான் - எந்நாளும்
பாலாரும் சொல்லே பகருமகி பாலன்வெள்ளாப்
பூலாறு முக்குறுணி பொன்தந்தான் - மாலாகத் 1220
தாமோத ரன்களறிச் சாமியையா ராஜன்எங்கள்
கோமான் கனகக் கொலுசுதந்தான் - மாமகிழ்வாய்க்
கொத்துச் சரப்பணியைக் கோனேரி நன்னகர்வாழ்
முத்துச் சுவாமி முகில்கொடுத்தான் - மொய்த்தகதிர்ச்
செங்கதிரோன் போலென் செவியில்மா ணிக்கமிரண்டு
எங்கோன் இராமரா ஜேந்த்ரன்இட்டான் - செங்கையிடத்
தங்கமணிக் காப்புத் தருமன்எனப் பேர்படைத்த
துங்கன் இராமசுவாமி தந்தான் - பொங்கமரில்
நீட்டுகணை பூட்டும் சிலைவிஜயன் வெந்தோணிக்
கோட்டை மன்னன் தந்தான் குறுணிமுத்துத் -
தோட்டுமலர் 1225

1216. தண்டிகை: பல்லக்கு. உம்பளம்: மானிய நிலம்.

1219. தன்ம மனத்தான்: தர்ம உள்ளம் படைத்தவன்.

1220. பால் ஆரும் சொல்: பால் அனைய மொழி.

1221. கனகக் கொலுசு: தங்கக் கொலுசு. மாமகிழ்வாய்: மிகச் சந்தோஷத்தோடு.

1222. முகில்: மேகம்போல் வழங்குபவன்.

1225. குறுணி முத்து: எட்டுப்படி முத்துக்கள்.

வாசமுல்லை மார்பன் வயித்தியனாந் தற்சாமி
ராஜன்வயி ரக்கடுக்கன் நாலுதந்தான் - வீசுகதிர்த் 1226
திங்கள்அளா வுஞ்சோலை சேர்ந்துவளர் முத்துவயல்
மங்கள சாமிவச்ர மாலைதந்தான் - பொங்குகொடைக்
கன்னன் துரைச்சாமி காண்டீபன் என்செவிக்குச்
சொன்ன மணிமுருகுத் தொங்கலிட்டான் -
தென்னவன்போல்
வந்தோன் படைவெட்டி வன்னிகுழந் தைச்சாமி
தந்தான் குதிரை தரந்தெரிந்தான் - வந்தேறும்
வேளையொத்த ரூபன்மதி மேவுசெக வீரவன்னி
பாளையத்துச் சாமிதந்தான் பல்லக்கு - நீள்புவிக்குள் 1230
சுந்தரஞ்சேர் செல்வத் துரைசாமா வையமதி
மந்திரியோர் மாணிக்க மாலைதந்தான் - முந்துகொடைக்
கன்னன்எங் கோன்சமுகக் கச்சேரி யார்களெலாம்
பொன்மயமாய் ஆபரணம் பூட்டினர் - மன்னுகதிர்ச்
சீத மதிமுகத்தார் சிமைக்கச் சேரியார்
ஆதரவாய்த் தந்தார்கள் ஆயிரம்பொன் - சேதுபதி
காவல்வ னுக்கடப்பம் கட்டுவோர் எல்லோரும்
ஆவலுடன் தந்தார்நா ருணிமுத்து - காவலனைத்தும்
வந்தாரும் தாலுகா மாகாணத் தார்களெல்லாம்
தந்தார்ஐந் நூறுகலம் சம்பாநெல் - முந்துமுனை 1235
வேலாயு தக்காரர் வில்லாயு தக்காரர்
மாலான சேவகரும் மற்றோரும் - நாலா 1236

1227. திங்கள் அளாவும் சோலை: சந்திரனை எட்டிப் பிடிக்கும் தோப்பு.

1230. வேளை ஒத்த ரூபன். காமனை நிகர்த்த வடிவழகன்.

1233. சீத மதிமுகத்தார்: குளிர்ந்த சந்திரன் போன்ற முகத்தை யுடையவர்.

விதமான வஸ்த்ரமுதல் மெய்வரிசை தந்தார்
இதுவே வரிசைநமக் கென்று - சதிராகத் 1237
தண்டிகைமால் யானை சரப்பணியோர் கோடிசெம்பொன்
கண்டி பதக்கன் கடுக்கனுடன் - மண்டலத்தோர்
ஆருந் துதிக்க அதிகசெல் வங்கொடுத்தான்
தீரன் சிவசாமி சேதுபதி - பாரிலெனக்கு

விறலி விடு தூது

ஏதும் குறைவுண்டோ! இவ்வரிசை பெற்றவெலாம்
மாதே! விறலி மடமானே! - காதல் 1240
மனையாட்குச் சொல்லி மனந்திருத்தி என்றும்
எனையா தரிக்கும்வகை எல்லாம் - மனதாரச்
சேலை நழுவினல் செங்கையே தாங்கும்முலை
சாலவிழுந் தால்வயிறே தாங்குமென்று - மேலுமங்கே
நான்பட்ட பாடும் நடத்தையும்நான் வந்ததுவும்
தேன்பட்ட சொல்லாட்குச் செப்பியே - கானஇசை
காட்டிமயல் காட்டிநெறி காட்டியுட னேவரவு
காட்டிவர வேற்றுக் கருணையாய்க் - கூட்டிவந்து 1244

1240. இவ்வரிசை: இந்தச் சிறப்பு. மாதே விறலி மடமானே: இளமை பொருந்திய மான்கண் அனைய விழிபெற்ற விறலிப் பெண்ணே. காதல்: பேரன்பு.

1241. மனையாள்: மனைக்கிழத்தி. மனம் திருத்தி: மாறுபட்ட அவள் உள்ளத்தை ஒழுங்குப் படுத்தி.

1242. சேலை நழுவினல் மனம் நினைக்காமலே கை தானகவே தாங்கும்; "உடுக்கை இழந்தவன் கைபோல" என்ருரல்லவா புலவர். ஸ்தனம் மிகுதியும் விழுந்துவிட்டால் வயிறு தாங்காமலென்ன செய்ய முடியும்?

1243. பாடும்: துயரங்களும். தேன்பட்ட சொல்லாள்: தேன் ஒழுகும் சொல்லையுடைய மனைவி.

1244. மயல்காட்டி: ஆசைகாட்டி. நெறிகாட்டி: நீதியை எடுத்துச் சொல்லி. வரவுகாட்டி: வருகையைக்

புல்வாய் எனஅவள்பால் போய்உண்மை யாய்வாழி!
சொல்வாய் விறலிநீ தூது. 1245

வாழ்த்து வெண்பா

வேதமுதல் வாழி!முத்து வீராயி நாச்சியார்
சீதஅருள் வாழி! செகம்வாழி! - ஆதிஎன்ற
சிந்துரமுன் காத்த சிவசாமி சேதுபதி
இந்திரனைப் போல்வாழி யே!.

கூறி. கருணையாய்க் கூட்டிவந்து: கருணையோடு எதிர் கொண்டழைத்து.

1245. புல்வாய் என: அநுபவிப்பாயாக என்று. அவள்பால் போய்: என் மனைவியிடம் சென்று. உண்மையாய்: மெய்யாக. வாழி: வாழ்ந்திருப்பாய். சொல்வாய் விறலிநீ தூது: விறலியே நீ தூது சொல்வாயாக.

வாழ்த்து வெண்பா

வேதமுதல் வாழி: மறையாதி யாவும் வாழட்டும். சீத அருள்: குளிர்ந்த கருணை. செகம்: உலகம். ஆதி என்ற சிந்துரமுன் காத்த: 'ஆதிமூலமே என்றழைத்த யானையை முன்னே காத்த. இந்திரனைப்போல் வாழியே: இந்திரனைப்போல வாழ்வானாக!

விறலிவிடு தூது முற்றும்

புதிய நூல்கள்.

காதற் பாட்டு (சாதாப் பைண்டு)	3	0	0
(காலிக்கோப் பைண்டு)	3	8	0
ராய. சொ.			
கம்பன் பிள்ளைத் தமிழ்	1	4	0
நா. கனகராஜ ஐயர்			
காந்திய வழி	2	12	0
ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி			
டில்லி செங்கோட்டை விசாரணை	3	0	0
கா. திரவியம்			
பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்	2	8	0
காந்திஜி			
விறலி விடு தூது (சாதாப் பைண்டு)	2	8	0
(காலிக்கோப் பைண்டு)	3	0	0
ராய. சொ.			

இலக்கியப் பதிப்பகம்
காரைக்குடி.

S. I. Press. Karaikudi. R/10. 6-5-47. 1000.